# தமிழகக் கோயிற்கலை மரபு



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 349

# தமிழகக் கோயிற்கலை மரபு

ஆசிரியர் :

முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன்,

வெளியீட்டு மேலாளர் மற்றும் காப்பாளர்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2014

(விலை : ரூ. 120/-)

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழகக் கோயிற்கலை மரபு |
| பதிப்பாசிரியர் | : | முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 349 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | நான்காம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2014 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 108 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | KR பிரிண்டர்ஸ், தஞ்சாவூர் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | கலை |
| விலை | : | ரூ. 120/- |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகப் பருவ இதழ் 41 ஆம் தொகுதியில் நெடுங்கட்டுரையாகவும் தனி நூலாகவும் வெளியிடும் திட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு வெளிவந்ததே "தமிழகக் கோயிற்கலை மரபு" என்னும் இந்நூலாகும். மக்களின் வரவேற்பை இந்நூல் பெற்றமையால் தற்போது நான்காம் பதிப்பாக மலர்ந்துள்ளது.

தமிழகத்துக் கோயில்களில் விஜயநகர, நாயக்க மராட்டிய மன்னர்களின் பணிகள், தமிழகக்கோபுரச் சிற்பங்கள், தமிழகத்தில் பள்ளிப்படைக்கோயில்கள், தஞ்சை மராட்டியர் காலச் சிற்பங்கள் ஓவியங்கள் என்னும் நான்கு தலைப்புகளில் தமிழகக்கோயிற்கலை மரபின் பெரும்பான்மையான குறிப்பிடத்தக்க அம்சங்கள் இந்நூலில், நூலாசிரியர் குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களால் விரிவுற எடுத்து உரைக்கப்பெற்றுள்ளது. அவரது பணி பாராட்டுக்குரியதாகும்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. ம. சங்கரநாராயணன்,B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன்,M.A., B.Lit., M.L.I.S., Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் விஜய நகர, நாய்க்க, மராட்டிய மன்னர்களின் காலங்களில் தமிழகத்திலுள்ள கோயில்களில் காணப்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள் பற்றி ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும், 'கலை' மரபு பற்றி அறிய விழையும் ஆர்வலர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்படும்.

தஞ்சாவூர்

*04.03.2014*

**டாக்டர் *என். சுப்பையன்,* இ.ஆ.ப.,**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்

சரசுவதி மகால் நூலகம்

# முன்னுரை

இயற்கையை வணங்குவதில் துவங்கிய தெய்வ வழிபாட்டு நெறி, அதற்கெனத் தனியிடம்கொண்டு கோயில்களாக மலர்ந்தன. துவக்கத்தில் மண் தளிகளாகவும் கூரைவேயப்பெற்றனவாகவும் திகழ்ந்த கோயில்கள் கால வளர்ச்சியில் குடைவரைகளாகவும், கற்றளியாகவும் உருப்பெற்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை குடைவரைகளும், கற்றளிகளும், பல்லவர், பாண்டியர், அதியர் போன்றவர்களால் சமைக்கப்பெற்றன. பின்வந்த சோழர்கள் இக்கலைக்கென ஒரு பொற்காலத்தையே உருவாக்கினார்கள். சோழர்களுக்குப் பின்பு விஜயநகரப் பேரரசர்களும், அவர்களது ஆளுநர்களான நாயக்கர்களும் பழைய கலை மரபுகளுக்குப் புதிய உத்வேகம் அளித்தனர். தமிழகத்தின் ஒருபகுதியை ஆட்சிசெய்த மராட்டியர்களும் தங்களுக்கென ஒரு புதிய நெறியினை வகுத்துக்கொண்டு கோயிற்கலையை வகுத்தனர். இவ்வாறு பல்வேறு மரபினர்களாலும் ஆக்கமும் பொலிவும் பெற்றது தமிழகக் கோயிற்கலை மரபு.

உலகமே வியக்கும் ஒப்பரிய இம்மரபினைப் பல்வேறு கோணங்களில் கண்டு நான்கு பெரும் தலைப்புகளில் இந்நூலில் எனது கணிப்பைத் தந்துள்ளேன். முதல் தலைப்பில் தமிழகத்துக் கோயில்களில் விஜயநகர, நாயக்க, மராட்டிய மன்னர்களின் பணிகளையும், பாணிகளையும் விளக்கியுள்ளேன். பதங்களில் தொடங்கி ரிஷபக்கொட்டில்கள் ஈறாக அவர்கள் தந்த கொடையினைத் தெளிவாகக் காட்டியுள்ளேன்.

இரண்டாம் தலைப்பு முழுவதும் தமிழகத்துக் கோபுரங்களைப் பற்றியதே. கோபுரக்கலை வளர்ந்த விதமும் அங்கு இடம்பெறும் சிற்பங்கள் குறித்தும் விரிவாகக் கூறியுள்ளேன். மூன்றாம் தலைப்பில் பள்ளிப்படைக்கோயில்கள் என்ற ஒரு தனி மரபு பேசப்படுகிறது. நடுகல் வழிபாட்டில் துவங்கி, இன்று தமிழகத்திலுள்ள சோழப்பெருமன்னர்களின் பள்ளிப்படை

வரை விவரிக்கப்பெற்றுள்ளது. நிறைவு செய்யும் கட்டுரையாக அமைந்த நான்காம் பகுதியில் தஞ்சை மராட்டிய மன்னர்தம் ஆக்கத்தால் உதித்த சிற்பம், ஓவியம் ஆகியவை பற்றிப் பேசப்படுகிறது.

இந்நூலில் தமிழகக் கோயிற்கலை மரபின் அனைத்து அங்கங்களும் துவக்கத்திலிருந்து வரிசையாகக் கூறப் பெறவில்லை. ஆயினும் குறிப்பிட்ட சில கூறுகள் மட்டும் தொடர்ச்சியாக விவரிக்கப்பெற்றுள்ளன. தமிழகக் கோயிற்கலை குறித்துப் பயில விரும்புவோருக்கு இந்நூல் ஓரளவேனும் துணைபுரியும் என நம்புகிறேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த நிருவாக அலுவலரும்(பொ.) நூலகர் மற்றும் பதிப்பு மேலாளருமான திரு. அ. பஞ்சநாதன்,எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்., அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்ட இந்நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிப்புப் பணியின்போது உறுதுணையாய் இருந்த தமிழ்த்துறை நண்பர் திரு. ய. மணிகண்டன்,எம்.ஏ.,எம்.ஃபில்., அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

சரசுவதிமகால் நூலகத்தின் சிறந்த நூல்களில் ஒன்றாக இதனை வெளியிடும் இந்நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான திருமிகு தி. சண்முகராஜேஸ்வரன்,இ.ஆ.ப., அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடப்பாடுடையேன் ஆவேன்.

தஞ்சாவூர்,
20-5-93

**குடவாயில் பாலசுப்ரமணியன், எம்.ஏ.,**
***சரசுவதி மகால் நூலகம்.***

# உள்ளுறை


பக்க எண்.

1. **தமிழகத்துக் கோயில்களில் விஜயநகர, நாயக்க, மராட்டிய மன்னர்களின் பணிகள்** 1 - 21

*கட்டடக்கலை - பதங்கள்விரிவு - திருமதில்கள் - திருக்கோபுரங்கள் - கருவறை விமானங்கள் - மண்டபங்கள் - கொடுங்கை - விதானத்துச் சிற்பங்கள்-புஷ்யமண்டபங்கள்-அழிந்த கலைமரபு-திருக்கோயில்-நெற்களஞ்சியங்கள்- திருப்பாலைத் துறைக் களஞ்சியம் - திருத்தேரோற்றுக் கூடங்கள் - இஷபக்கொட்டில்கள்.*

2. **தமிழகக் கோபுரச் சிற்பங்கள்** 22-43

*கோபுரமே ஒரு சிற்பம்-கோபுரங்களின் வளர்ச்சி நிலைகள்- ஓவியத்தில் காணும் தில்லைக்கோபுரம் - இராஜராஜனின் பணி-பிற்காலச் சோழர்களின் கோபுரப்பணி - விஜயநகரப்பேரரசர்களும் நாயக்கர்களும் - தஞ்சைக் கோபுரச் சிற்பங்கள் - சதாசிவமூர்த்தம்- தமிழகத்திலேயே மிகப்பெரிய கோபுரச்சிற்பங்கள்-தில்லைக் கோபுரச்சிற்பங்கள் - சூரியதேவன் - தாராசுரத்துக் கோபுரச் சிற்பங்கள் - திருவாரூர், பழையாறை கோபுரச்சிற்பங்கள் - கோபுரச் சிற்பங்களில் மனித உருவச்சிலைகள் - கோபுரச் சிற்பங்களில் குடமுழவம் - கரணச் சிற்பங்கள்-வரலாறுகூறும் கோபுரச் சிற்பங்கள் - கோபுரச் சிற்பங்களில் தேர்கள் - திருக்கழுக் குன்றத்துச் சிற்பங்கள் - சிற்பங்கள் வடித்த சிற்பிகளின் சிற்பங்கள்.*

3. **தமிழகத்தில் பள்ளிப்படைக் கோயில்கள்** 44-79

*தமிழகம் கண்ட நடுகற்கள்-தமிழ் இலக்கியங்களில் நடுகற்கள்-தொல்காப்பியம் காட்டும் படிமநெறிகள்-பள்ளிப்படைகள் - பள்ளிப்படை கோதண்ட இராமேசுவரம் - மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரம் - இராஜராஜசோழன் திணை வாலயம்-பள்ளிப்படை பஞ்சவன் மாதேவிச்சரம்-இரட்டைக் கோயில்.*

4. **தஞ்சை மராட்டியக்காலச் சிற்பங்கள், ஓவியங்கள்** 80-100

*கருங்கற்சிற்பங்கள்-கல்லில் இராமகாதை - ராணுபாய் சட்டுபாய் சிற்பங்கள் - சிலேந்திரர் படிமங்கள்-மன்னர்களின் படிமங்கள் - செப்புத் திருமேனிகள்-முதலாம் சரபோஜியின் பித்தளைத் திருமேனி-திருவிடைமருதூர் பாவை விளக்கு - இடைமருதில் கலைக்கூடம் - சுதைச்சிற்பங்கள் - சர்ஜாமாடி அடித்தளச் சிற்பங்கள் - மரச்சிற்பங்கள் - மராட்டியர்கால ஓவியங்கள் - சுவரோவியங்கள் - திருவாரூர்த் தேவாசிரிய மண்டப ஓவியத் தொகுப்பு-தேவிமகாத்மியம்-திருவிளையாடல் புராணம்-செப்பேட்டு ஓவியங்கள்-காகிதம், துணி ஓவியங்கள்- மரம், கண்ணாடி, மைக்கா, தந்த ஓவியங்கள்.*

# தமிழகத்துக் கோயில்களில் விஜயநகர,நாயக்க,மராட்டிய மன்னர்களின் பணிகள்

## கட்டடக்கலை

பல்லவர், பாண்டியர், சோழர், அதியர், போசளர் போன்ற பல்வேறு மரபினரால் கி. பி. 7ஆம்நூற்றாண்டில் தொடங்கி கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை கற்றளிகளாக உருவான தமிழகக் கோயிற் கட்டடக்கலை, தழைத்துச் செழித்துத் தலை நிமிர்ந்து நின்றது. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட மாற்றாரின் குறையாடல்களாலும், மதுரையம்பதியின் மாறுபட்ட ஆட்சியாளர்களாலும் கோயில்கள் அழிக்கப்பெற்றுப் பூசைகள் முட்டுப்பாடுற்றுப் பல ஆண்டுகள் செயலிழந்து கிடந்தன. எண்ணற்ற செப்புத்திருமேனிகள், கொள்ளைபோனவை போக எஞ்சியவை புதைக்கப்பெற்றன. இத்தகைய காலகட்டத்தில் மீண்டும் திருக்கோயில்கள் தழைக்கத் தமிழகம் வந்தவர்களே விஜயநகரப் பேரரசர்கள்.

விஜயநகரப் பேரரசின் சங்கமகுலத் தலைமன்னர்களான ஹரிஹரர், புக்கர் இவர்களது ஆட்சிக்காலத்தில் தமிழக ஆட்சியாளராக நியமிக்கப்பெற்றவரே புக்கரின் மகனான இரண்டாம் கம்பண்ணன் எனும் குமார கம்பண்ணர் ஆவார். சுமார் 132க்கும் மேலான இவரது கல்வெட்டுகள் சித்தூர், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம் பகுதிகளில் உள்ளன. இவை அவரது தமிழக ஆட்சியை உறுதிப்படுத்துவதோடு, தமிழகக் கோயிற்கலை பெற்ற ஆக்கங்களையும் விவரிக்கின்றன. இவரின் மனைவியான கங்கமாதேவி யாத்த “ மதுரா விஜயமும்”, இராஜநாத திண்டிம கவியின் “ சாளுவாப்யுதயமும் ” குமார கம்பண்ணரின் தமிழகப் பணிகள் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

.தானேற்ற மாகச் சகாத்தங்க ளாயிரத்து
நானூற்றுத் தொண்ணூற்று நாலின்மேல்-மானேற்ற
தென்னருணை நாதருக்குச் செல்வமகி பன்கயிலை
யன்னதொரு கோபுரங்கண் டான்.

மருவு சிவநேசன் மகிழுலக நாதன்
இருவரும் பேரன்பா லியற்ற-அருணையிலே
மானபரன் செல்வ மகிபால னப்பதினொன்
றானநிலைக் கோபுரங்கண் டான்

-எல்லப்பநயினார் சொன்னது.

என்ற கல்லெழுத்துக்களால் கிழக்குக் கோபுரம் தஞ்சை நாயக்க மன்னர் செவ்வப்பநாயக்கரால் எடுக்கப்பெற்றது என்பதை அறிகிறோம். இதனை இங்குள்ள பல வடமொழிக் கவிதைக் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. 135 அடி நீளம் 98 அடி அகலம் 217 அடி உயரம் உடைய இந்தப் பதினொரு நிலைக் கோபுரம் தஞ்சை நாயக்க மன்னரின் மகத்தான பணி என்பதில் ஐயமில்லை.

கிருஷ்ணதேவராயரின் சிறந்த கோபுரப் பணிகளுள் குறிப்பிடத்தக்கது தில்லை வடக்குக் கோபுரப் பணியாகும். இங்கு அக்கோபுர வாயிலிலேயே அவரது உருவச் சிலையோடு அத்திருப்பணியை மேற்கொண்ட சிற்பிகளின் உருவச் சிலைகளும் அவர்தம் பெயர்களும் கல்வெட்டுப் பொறிப்புகளோடு உள்ளன. அவை முறையே

." விருத்த கிரியில் சேவகப் பெருமாள்"

" இந்த சேவகப் பெருமாள் மகன் விசுவமுத்து "

" இவன்தம்பி காரணாகாரி"

" திருப்பிறைக்கொடை ஆசாரி திருமருங்கன் "

என்பவையாகும்

இவற்றை நோக்கும்போது தமிழகத்தில் உள்ள நெடிதுயர்ந்த கோபுரங்களை எடுக்கக் காரணமாய் இருந்தவர்கள் கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர், சதாசிவராயர் போன்ற

திருச்சுற்றுக்கள் (பிரகாரங்கள்) அமைப்பது, அவற்றின் நான்கு திசைகளிலும் வாயில்களாம் கோபுரங்கள் எடுப்பது, கோயிலுக்கு வெளியில் உள்ள திருவீதிகளையும் கோயிலின் அங்கமான புறத்திருச்சுற்றுக்களாகவே கொள்வது ஆகிய புதிய நெறிகளை வகுத்தனர்.

திருவரங்கம் திருக்கோயிலுக்கு ஏழு பிரகாரங்களும், மன்னார்குடித் திருக்கோயிலுக்கு ஆறு பிரகாரங்களும் விரிவுபடுத்தியதைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இதுபோன்று திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்), திருவானைக்கா, திருக்கோயிலூர் போன்று பல இடங்களிலும் பதங்கள் விரிவுபெற்றுள்ளன என்று குறிப்பிடலாம். திருக்கோபுரவாயில், புறமதில் இவைகளுக்கு வெளியில் உள்ள புற வீதிகளும் கோயில்களின் பிரகாரங்களாகவே மதிக்கப்பெற்றன என்பதை மன்னார்குடி, ஸ்ரீ முஷ்ணம் போன்ற ஊர்களில் ராஜவீதிகளில் பலிபீடமும், துவஜஸ்தம்பமும் அமைத்துள்ளமை கொண்டு அறியலாம். தில்லையில் அட்டதிக் தேவதைகளுக்குப் பலியிடும் பலிபீடங்கள் ராஜவீதியில் மிகப் பெரிய அளவில் வகுத்துள்ளமையும் இதற்குச் சான்றாகும்.

### *திருமதில்கள்*

" திருவாரூர் தேரழகு, திருவிடைமருதூர் தெருவழகு, மன்னார்குடி மதிலழகு " என்பது சோழநாட்டுப் பழமொழி. சிறப்பிற்குரிய மன்னார்குடி திருமதிலை எடுத்தவர் தஞ்சை விஜயராகவ நாயக்கர் ஆவார். விஜயநகர-நாயக்க மன்னர்கள் எடுத்த திருமதிற் பணிகள் மிகப் பலவாயினும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை தஞ்சாவூர் பெரியகோயில், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில், அருளாளப்பெருமாள் கோயில், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, மதுரை, திருவரங்கம் போன்ற பெரிய திருக்கோயில்களின் திருமதில்களாகும்.

இவர்கள் செய்த திருமதில்களின் நிருமாணத்தில் மூன்று வகைப்பாடுகளைக் காணமுடிகின்றது. (1) முழுதும் கருங்கற்களைக்கொண்டு எடுக்கப்பெற்றவை, (2) செம்புறாம்

பாறைக் கற்களைக் கொண்டும் (Laterite), செங்கற்களைக் கொண்டும் எடுக்கப்பெற்றவை, (3) செங்கற்களை மட்டுமே கொண்டு எடுக்கப்பெற்றவை என்பவை ஆகும்.

கருங்கற்களால் எடுக்கப்பெற்ற விஜயநகர நாயக்கர்களின் மதில்களில் விஜயநகர அரசின் இலச்சினையான வராகம், குத்துவாள், சூரிய சந்திரர்கள் போன்ற உருவங்களையும், இராகு சந்திரனை விழுங்குதல், மகரங்கள், கண்ட பேரண்டப்பறவை, கயல்கள், உடும்பு போன்ற சிற்ப வடிவங்களையும் பொறிப்பது வழக்கமாகும். இஃது இவர்களது தனித்தன்மையாகவே காணப்பெறுகின்றது.

சோழநாட்டில் கந்தர்வக்கோட்டைப் பகுதியில் கிடைக்கும் *செம்புறாங் கற்களினால்* எடுக்கப்பெற்ற திருமதில்களில் சிற்பத்திறனைக்காண இயலாது. இவ்வகையில் எடுக்கப்பெற்ற மதில்களில் குறிப்பிடத்தக்கது தஞ்சாவூர் பெரியகோயிலுக்கு வெளியேயும், அகழிக்கு உட்புறமாகவும் *அமைந்துள்ள* மதிலாகும். தஞ்சை நாயக்க மன்னரான செவ்வப்பர் அவரது மகன் அச்சுதப்பநாயக்கர் ஆகியோரால் எடுக்கப்பெற்ற இம்மதிலில் கொத்தளங்களும், சாளரங்களும் உண்டு. இது கோட்டை மதிலாகும். இதனை ஒத்த கோட்டைமதில் வேலூர் திருக்கோயிலுக்கும் உண்டு.

இம்மதில்கள் *சிறிய* கோயில்களாய் இருப்பின் முழுச்செங்கற்கள் கொண்டும், பெரியகோயில்களாயின் இருபுறமும் முழுச்செங்கற்கள் கொண்டும், உள்ளே உடைந்த துண்டுச் செங்கற்கள், முண்டுக்கற்கள் கொண்டும் எடுக்கப் பெற்றுத் திகழ்கின்றன. இத்தகைய மதில்களில் வெளி அடுக்குக் கற்கள் சுண்ணச்சாந்துகொண்டு கட்டப்பெற்று, உள்ளே மண்சாந்துக் கலவையோடு முண்டுக் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர். அடிப்பகுதி பருத்தும், மேலே செல்லச் செல்லக் குறுகியும் காணப்படுகின்றன. தலையீடு (Caping) சுண்ணச்சாந்து கொண்டு பத்திருப்பு(Cornice) என்ற வடிவமைப்போடு கட்டப்பெற்றிருக்கும். மதிலின் தலைப் பகுதியின் உச்சியில் மழைநீர் தேங்கா வண்ணம் சரிவான ஏற்ற

அமைப்பு உருவாக்கப்பெற்றுள்ளது. இச்சரிவுகளும் (Coping) விரிந்த தலைப்பகுதியும் (Caping) உள்ளே நிரப்பப்பெற்றுள்ள மண்சாந்து பாதிக்கப்பெறாவண்ணம் காப்பவையாகும். குறைந்த செலவீட்டில் (Low Costing) அமைக்கப்பெறும் தனிச்சிறப்பு இதற்குண்டு.

*திருக்கோபுரங்கள்*

பல்லவர்களுடைய கோயில்கள் ஆகம அடிப்படையில் தோற்றுவிக்கப்பெற்றவையாயினும் அங்கு நெடிதுயர்ந்த கோபுரங்கள் எடுக்கப்பெறவில்லை. முற்காலச் சோழர் கோயில்களிலும் மகாதுவாரம் எனும் திருவாயில்கள் அமைக்கப்பெற்று இருந்தனவேயன்றி உயர்ந்த கோபுரவாயில்கள் அமைக்கப்பெறுவதில்லை. மாமன்னன் இராஜராஜனின் படைப்பான தஞ்சை ராஜராஜீச்சரத்தில் இரண்டு கோபுரவாயில்கள் இருப்பினும் அவை உயரம் குறைந்தவையே. ஏழு நிலைகளோ பதினோரு நிலைகளோ கிடையாது. இப்பெருமன்னன் காலத்தில் தில்லைக்கோயிலில் கேரளத்துக் கோயில் வாயில்கள் போன்றே ஓடு வேயப்பெற்ற திருவாயில்களே இருந்தன என்பதைத் தஞ்சை ஓவியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. முதன் முதலாகச் சோழர் கோயிற் கட்டடக் கலையில் முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரமசோழன் எடுத்த தில்லைக்கோயிற் கோபுரங்கள் தாம் ஏழுநிலைகள் பெற்று உயர்ந்து விளங்கின.

" பலன் கொள் மைந்தனார் எழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந்தார் " என்பன போன்று சேக்கிழார் பெரியபுராணத்தில் பல இடங்களில் "நீடுநீள் நிலைக்கோபுரமாக" ஏழுநிலைகள் உள்ள கோபுரங்களையே காட்டுகிறார். இதுதான் நெடிதுயர்ந்த கோபுரங்கள் எடுக்கும் தமிழகக் கோயிற் கட்டடக் கலைக்குத் தோற்றுவாயாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. மதுரைச் சொக்கநாதர் திருக்கோயில் கிழக்குக் கோபுரம் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இங்குள்ள கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு இது ஜடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியனால் (கி. பி. 1256) எடுக்கப்பெற்றது என

ஆய்வாளர்கள் குறிப்பர். இத்திருக்கோபுரங்கள் அடிப் படையிலேயே விஜயநகரப் பேரரசர்களும், நாயக்கர்களும் உயர்ந்த கோபுரங்கள் எடுக்கும் கலையைப் போற்றி வளர்த்தனர்.

திருவண்ணாமலைத் திருக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்திற்கு முன்பாக உள்ள கற்பலகை ஒன்றில் கி. பி. 1517இல் வெட்டுவிக்கப்பெற்ற கிருஷ்ணதேவராயரின் சாசனமொன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது. (வரிகள் 52-75) "... உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கும் நாச்சியார் உண்ணாமுலை நாச்சியாருக்கும் இராயர் கிருஷ்ணராயர் மகாராயர் தன்மமாகப் பண்ணுவித்த திருப்பணி ஆயிரக்கால் மண்டபம். இதற்கு முன்பாக வசந்தன் தெப்பத் திருநாளுக்கு வெட்டின திருக்குளம் இதற்குத் தண்ணீர் வரத்து விழ வெட்டின திருமலைதேவி அம்மன் சமுத்திரம், பதினொரு நிலைக் கோபுரம் ஏழாந் திருநாள் மண்டபம், விநாயகர்க்குப் பண்ணுவித்த திருத்தேர் வாணவதரையன் சோழன் வாசல் கதவு கதவுக்கால் மேற்படி உத்தமசோழன் திருவாசல் கதவு மேற்படி பலகணி வாசல் பொன் பூசினதும் இந்த வாசல் முன்னதாகவும் பத்திரமாத்திற் கெட்டிக் கொடுங்கைத் தகடு பொன் பூசினதும், உண்ணாமுலை நாச்சியார் *கோயில்*, சடைப்பெருமாள் நாயினார் சன்னதிக்கு மேற்குவாசல் கால்கதவு மேற்படி வெங்கலமும், வாசல் கால்கதவு மேற்படி பொன் பூசினதும் தூவிப் பொன் பூசினதும் நாச்சியார்கோயில் மடப்பள்ளி முன் வெட்டின ஆராவமுதக் கிணறும் ........." - என்று தொடர்கின்றது. இக்கல்வெட்டின் வழியாகப் பதினொரு நிலைக்கோபுரம் எடுக்கும் விஜயநகர பாணி பற்றி அறிவதோடு ஒரு திருக்கோயிலில் அப்பேரரசர்கள் எந்தெந்த விதமான திருப்பணிகள் புரிந்தார்கள் என்பதையும் தெளிவாக அறிகின்றோம்.

திருவண்ணாமலையில் பதினொரு நிலைக்கோபுரத்தையும் ஆயிரக்கால் மண்டபத்தையும் எடுத்ததாகப் பேசும் இந்தக் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டின் முற்பகுதி ஸ்ரீ காளஸ்தி கோயிலில் நூற்றுக்கால் மண்டபமும் பெரிய கோபுரத்தையும் இதே பேரரசர் எடுத்தார் எனக்குறிப்பிடுகிறது. திருவண்ணாமலை கிழக்குக் கோபுரத்தில் உள்ள கல்வெட்டுப் பாடல்களில்

ஏறத்தாழ கி. பி. 1380ஆம் ஆண்டுக்குப் பிறகே கம்பண்ணரால் தமிழகக் கோயில்கள் முட்டுப்பாடு அகன்று மீண்டும் தழைக்கத் தொடங்கின.

கம்பண்ணரின் சங்கம குல ஆட்சியின்போதும், பின்பு சாளுவ குல ஆட்சியின்போதும் அதனை அடுத்துத் துளுவகுல மன்னர்களின் விஜயநகரப் பேரரசு தொடர்ந்த ஆட்சியின்போதும், கி. பி. 1535இல் தோன்றிய தஞ்சை, மதுரை, செஞ்சி நாயக்கர்கள் ஆட்சியின்போதும், கி. பி. 1675இல் தஞ்சை நாயக்க அரசு முடிவு எய்தி, பின்பு தொடர்ந்த தஞ்சை மராட்டிய அரசர்கள் ஆட்சியின்போதும் தமிழகக் கோயில்கள் பெற்ற வளர்ச்சி நிலைகள் பற்றியும், அவர்களின் கட்டடக்கலை பற்றியும், அவரவரின் தனித்தன்மையுடைய கலைப்பாணிகள் பற்றியும் இனி விரிவாகக் காண்போம்.

### *பதங்கள் விரிவு*

திருக்கோயிற் கட்டடக்கலையின் முதல் அங்கம் பதமாகும் (Layout). இவை ஆகமங்களின் அடிப்படையில் வகுக்கப்பெறுவனவாகும். பல்லவர், பாண்டியர், அதியர் போன்ற மன்னர் மரபினர் வகுத்த குடைவரைக் கோயில்களில் கருவறையும், மண்டபமும் மட்டுமே இருக்கும். இராஜசிம்ம பல்லவன் தோற்றுவித்த கச்சிப்பேட்டுப் பெரியதளி, சோழப் பெருமன்னன் இராஜராஜன் எடுத்த தஞ்சை ராஜராஜீச்சரம் ஆகியவற்றுள் மகாசாயிகாபதம் வகுக்கப்பெற்று அவற்றுள் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று (பிரகாரம்), திருச்சுற்று மாளிகையோடு 32 பரிவாராலயங்கள், திருவாயில்கள் போன்ற பல்வேறு திருக்கோயில் அங்கங்களை அமைத்திருப்பதைக் காணலாம். கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை எடுக்கப்பெற்றவையும், விரிவுபடுத்தப்பெற்றவையுமான தமிழகக் கோயில்களில் ஒன்று அல்லது இரண்டு திருச்சுற்றுகளுக்கு மேலாக இருப்பதில்லை.

விஜயநகரப் பேரரசர்களும், நாயக்க மன்னர்களும் திருப்பணி புரிந்த கோயில்களில் இரண்டுக்கு மேற்பட்ட பல

பேரரசர்களும், அவர்களது நாயக்கர்களுமே என்பது தெளிவாக விளங்குவதுடன் இப்பெரும் பணிகளைப் புரிந்தவர்கள் சேவகப்பெருமாள்விருத்தாசலத்து விசுவமுத்து, காரணகாரி போன்ற தமிழகத்துச் சிற்பிகளே என்ற பேருண்மையும் புலப்படுகின்றது.

விஜயநகரத் தலைநகரமான ஹம்பியில் உள்ள பல கோயில்களிலும், மண்டபங்களிலும் கற்களில் தமிழ் எண்கள் இடம்பெற்றுக் காணப்படுகின்றன. தமிழகம் கடந்து பெல்லாரிக்கு அருகில் உள்ள இத்தலைநகரில் தமிழ்ச் சிற்பிகளின் குறியீடுகளைக் காணும்போது அவர்களது கட்டடக்கலைத் திறன் எந்த அளவு விஜயநகரப் பேரரசர்களால் போற்றப்பெற்றது என்பதை அறியமுடிகிறது. மெக்கன்சி சேகரிப்பு ஓலைச்சுவடிகளில் ஒன்றான "கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்" எனும் நூலில் செஞ்சிக்கோட்டை கட்டுமானத்திற்காக வையப்ப நாயக்கர் என்பவர் விஜயநகரம், கோல்கொண்டா நகரம் முதலான இடங்களிலிருந்து பல ஆயிரக்கணக்கான கல் தச்சர்களை அழைத்து வந்ததாகவும், கல்தச்ச போலாரி ஆசாரி, விருத்தகிரி ஆசாரி, ராஜுசங்கமயன், கன்னாரு பாபய்யன் என்ற நாலு சர்தார்களுக்கும் பல்லக்கும், விருதுகளும் கொடுத்துச் சிறப்பித்ததாகக் கூறுகிறது. இங்குக் குறிப்பிடப்பெறும் விருத்தகிரி ஆசாரி பற்றிய கல்வெட்டும், உருவச்சிலையும் தில்லைக்கோபுரத்தில் உள்ளதை முன்னரே கண்டோம். தமிழகச் சிற்பிகளின் கட்டுமானக் கலை ஆற்றலை விஜயநகர நாயக்கர் கோயிற்கலையைப் பரிணமிக்கச் செய்தது என்பது மகிழ்ச்சியளிக்கும் வரலாற்று உண்மையாகும். இச்சிற்பிகள் தமிழகத்திற்கே உரிய கலை ஆற்றலோடு, காகதியர், போசளர், மலையாளர் முதலிய பல மரபுகளை எல்லாம் நுகர்ந்ததால் அவர்தம் படைப்புகளில் பல்வேறு கலைப் பரிமாணங்களைக் காணமுடிகின்றது.

தஞ்சை செவ்வப்பநாயக்கரின் திருக்கோயிற் பணிகளாக சங்கீத சுதா எனும் நூலில் கோவிந்ததீட்சிதர் நீண்ட பட்டியல் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். காஞ்சிபுரம், திருநெடுங்குன்றம், விருத்தாச்சலம், ஸ்ரீசைலம், திருமலை திருப்பதி போன்ற

இடங்களில் கோபுரங்கள் எடுத்ததை விவரிக்கின்றார். இது போன்று விஜயநகரப் பேரரசர்களின் ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும், தஞ்சை, செஞ்சி, மதுரை நாயக்க மன்னர்கள் எண்ணற்ற கோபுரங்களை எடுத்தனர். காஞ்சி, திருவண்ணாமலை, தில்லை,திருவரங்கம், ஆலவாய், திருவில்லிப்புத்தூர், வேலூர், திருக்கோவிலூர், விரிஞ்சிபுரம், கும்பகோணம் போன்ற இடங்களில் எடுக்கப்பெற்ற கோபுரங்கள் குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்தமையாகும்.

உபபீடம், அதிஷ்டானத்திலிருந்து சிகரம் ஸ்தூபி வரை சோழர், பாண்டியர் எடுத்த கோபுரங்களுக்குரிய அனைத்து அங்கங்கள் இருப்பினும் ஒவ்வொரு அங்கத்திலும் சிற்பவேலைப்பாடுகள் மிக அதிகமாக இருப்பதே விஜயநகர நாயக்கர்களுடைய கோபுரங்களின் கலைச்சிறப்பாகும். சோழர் கோபுரங்களின் அதிஷ்டானத்தில் காணப்படும் குமுதம் விருத்த அல்லது திரிபட்ட குமுதமாகவே வேலைப்பாடுகள் இன்றிக் காணப்படும். ஆனால் இவர்களுடைய படைப்புக்களில் குமுதம் பல மடிப்புக்களுடனும் அதனிடையே கொடிக்கருக்குகளும் பூ வேலைப்பாடுகளுடனும் காணப்பெறும். அதிஷ்டானங்கள் பெரும்பாலும் கபோதபந்த அதிஷ்டானங்களாகவே காணப்பெறும். கால்களும், பலவகைகளும் பல மடிப்புகளுடன் நுண்ணிய வேலைப்பாடுகள் மிகுந்து திகழும். பஞ்சரங்களிலும் மிக அதிகமான மடிப்புகளும், வளைவுகளும் இருக்கும். கோஷ்டங்களின் தலைப்பகுதி மகர தோரணமாக இருப்பின் மகரவாய்களிலும் மற்ற இடங்களிலும் கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் அதிகமாக இருக்கும். சில இடங்களில் கோஷ்டங்களில் கபோதக அமைப்பு நீண்டு, கொடுங்கை என்ற பெயரில் மரவேலைப்பாடுகள் போன்று குறுக்கு நெடுக்குச் சட்டங்கள் தாங்கி நிற்கும்.

முதல்தளம் முழுவதும் கருங்கற்பணியாகவும் அதற்குமேல் ஒவ்வொரு தளமும் செங்கற்பணியாகவும் திகழும். ஒவ்வொரு நிலையின் உட்புறம் திராவி என்ற மர உத்திரங்களாலும் மரப்பலகைகளாலும் மூடப்பெற்று அவற்றின்மேல் செங்கல் பரப்பப்பெற்றே தளங்கள் தொடரும்.

கோபுரவாயில்களைத் தாங்கி நிற்கும் நிலைக்கால்களில் மன்னர்கள் உருவச்சிலைகள், நாட்டிய அணங்குகள், புராணச் சிற்பங்கள், காமக்கலை காட்டும் சிற்பங்கள் ஆகிய வேலைப்பாடுகள் செதுக்கப்பெற்றுத் திகழ்வது இவர்களது தனிப்பாணியாகும். வாயில்களின் உட்புற விதானங்களில் தாமரைமலர்கள், இராசிச் சக்கரங்கள், மலர் கொத்தும் கிளிகள், பீஜங்களுடன் அமைந்த எந்திரங்கள் ஆகிய சிற்பங்களை வடிப்பதும் இவர்கள் பின்பற்றிய சிற்ப இலக்கணங்களாகும்.

தமிழகத்திலுள்ள விஜயநகர - நாயக்கர்கள் காலக் கோபுரங்கள் அனைத்தையும் தொகுப்பாக நோக்கும்போது அவற்றின் வடிவமைப்பின் அடிப்படையில் அவைகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விருத்தாச்சலம், திருக்கோவிலூர், கும்பகோணம் போன்ற இடங்களில் உள்ள கோபுரங்கள், அகன்ற அடித்தளம் ஒரே சீரான குறுகும் உடற்பகுதி, வட்டமான பக்க அமைப்புகளுடைய சிகரம் ஆகியவற்றோடு இருக்கும். இவ்வகைக் கோபுரங்களே தமிழகம் முழுதும் காணப்படுகின்றன.

திருவில்லிப்புத்தூர், மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் கிழக்குக் கோபுரம், மதுரை தெற்குக் கோபுரம் ஆகியவை அடிப்பீடம் நீளம் அதிகமாகவும், அகலம் குறைவாகவும், உடற்பகுதி நடுவில் வளைவுபெற்றுக் குறுகியும், சிகரம் நீள்வட்டப் பக்க அமைப்போடு சற்று மாறுபட்டுக் காணப்படும்.

மூன்றாவது வகையாகக் குறிப்பிடப்பெறும் கோபுரங்களாகத் திகழ்பவை, திருவரங்கம் வெள்ளைக்கோபுரம், திருக்கழுக்குன்றம் பெரியகோபுரம் ஆகியவையாகும். இவற்றில் சாலை மற்றும் ஒவ்வொரு தள துவாரங்கள், சிகரத்திலுள்ள மகாநாசிக் கூடு போன்றவை மிக அதிக அளவான பிதுக்கம்பெற்று முன்னோக்கித் திகழும்.

***கருவறை-விமானங்கள்***

கோபுரங்கள் போன்ற கருவறைக் கட்டுமானங்களிலும் உபபீடம், அதிஷ்டானத்தில் தொடங்கி சிகரம், ஸ்தூபி வரை உள்ள எல்லா அங்கங்களிலும் மிக அதிகமான வேலைப்பாடுகளான

அதிக மடிப்புக்கள், கொடிக்கருக்குகள், இதழ்கள், மரச்சட்ட வேலைப்பாடுகள் போன்ற பல அம்சங்களைக் காணமுடிகின்றது. கோஷ்டங்களுக்கு இடையே உள்ள பகுதிகளில் (கால்) புராணச் சிற்ப உருவங்களும் சில இடங்களில் காணப்படுகின்றன.

இவர்களின் காலக் கருவறைகள் அமைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக மூன்று கோயில்களைக் கூறலாம். மதுரை ஆலவாய்ப்பெருமான் உறையும் கருவறை மதுரை நாயக்கர்களில் முதலாமவரான விசுவநாத நாயக்கரால் எடுக்கப்பெற்றது எனக் கலை வல்லுநர்கள் குறிப்பர். திருமாலிருஞ்சோலை மாபலி வானாதிராயனால் கி. பி. 1452இல் எடுக்கப்பெற்றதாகத் "திருப்பணி விவரம்" எனும் நூல் குறிக்கும். எப்படி இருப்பினும் இது விஜயநகரப் பேரரசர்களின் ஆக்கத்தால் எழுந்ததே. கபோதபந்த அதிஷ்டானத்திற்கு மேலாகக் கால்களில் சிம்மங்கள் மிக எழிலோடு காணப்படுகின்றன. விமானத்தை எட்டு பெரிய யானைகள் தாங்கி நிற்பதாகப் படைக்கப்பெற்றுள்ளது. இது விஜயநகர பாணி கருவறை படைப்புகளுள் தனித்தன்மை வாய்ந்தது. இவர்கள்காலப் படைப்பான மதுரை கூடலழகர்கோயில் விமானம் தஞ்சைப் பெரியகோயில் விமானத்தைப் போன்ற எடுப்போடு உயரம் குறைந்த மிக அழகிய படைப்பாகும். மூன்றாவதாகவும் ஈடு இணையற்ற ஒரு படைப்பாகவும் கொள்ளத்தக்கது. தஞ்சை நாயக்கர்கள் காலத்து விஜயநகரப் படைப்பான தஞ்சைப்பெரியகோயில் முருகப்பெருமான் திருக்கோயிலாகும்.

அரிய கலைப்பெட்டகமாகத் திகழும் இக்கோயிலை எடுத்த சிற்பி தமிழகத்தைச் சேர்ந்த படைப்பாளன் என்பதை இங்கு அணிசெய்யும் துவாரபாலகர் சிற்பத்திற்கு அருகே பொறிக்கப்பெற்ற கல்வெட்டால் அறியலாம்.

அதிஷ்டானவர்க்கத்தில் தொடங்கிக் கோயில் முழுவதும் மிக நுண்ணிய எழில்கொஞ்சும் வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. கோஷ்டங்களில் தனித்தன்மையுடைய கபோதகங்கள்: சுவர் முழுவதும் முருகப்பெருமானின் வள்ளித்திருமணம், தேவியின் வீரக்காட்சிகள்,

மார்க்கண்டேயனின் சிவலிங்கத்தழுவல், காலனைக்காய்தல் போன்ற பல சிற்பத்தொகுப்புகள், களிறுகளும், சிம்மங்களும் சுமந்துகொண்டிருக்கும் படிகள், நடராஜர்திருமேனி, சங்கு சக்கரம் ஏந்திய திருமாலின் காளிங்கநர்த்தனம், அனுமனின் பணிவு போன்ற உள்ளம் மயக்கும் வடிவங்களையும் காணலாம்.

மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் நாம் காணும் இப்படைப்புக்களில் முழுவதுமாகத் தமிழகத்தின் தனிக்கலைப் பாணியையே காணமுடிகிறது. பல்லவர், சோழர், பாண்டியர் கலைகளின் தாக்கம் புதிய பரிமாணத்தில் இங்கு மிளிர்கின்றன. விஜயநகர ஹம்பியில் உள்ள இராமசாமிகோயில், தஞ்சை முருகன் கோயிலையே முழுதும் ஒத்துக் காணப்பெறுவதாலும், தமிழ் எண் குறியீடுகள் அங்குக் கல்வெட்டுக்களாக திகழ்வதாலும் தமிழகச் சிற்பக்கலையின் புதியகோணம் அங்கும் பரிணமிப்பதை யாரும் மறுக்க இயலாது.

*மண்டபங்கள்*

விஜயநகர-நாயக்கர்களின் கட்டடக்கலையின் சிறப்பித்துக் கூறப்பெறும் கலைக்கொடையாகத் தமிழகத்திற்குக் கிடைத்தவை கோபுரங்களும், மண்டபங்களுமேயாகும். சோழ சாளுக்கிய பாணியான தாராசுரத்துத் தூண்களைத் தவிர மற்ற கலைப் பாணியாக அமைந்த தூண்களில் மிக அதிகப்படியான வேலைப்பாடுகளையோ சிற்பங்களையோ காணமுடியாது. அவை எளிமையானவை அழகுடையவை. கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் மற்றும் தமிழகத்து நாயக்கமன்னர்களின் கொடையாகக் கிடைத்த மண்டபங்களில் உள்ள தூண்கள் அந்தந்தப் பகுதிகளுக்குரிய கலை மரபுகளோடு இணைந்து புதியபாணிகளை உருவாக்கியுள்ளன. பழைய மரபோடு போசளர் கலைப் பாணிகளும், காகதீயர் கலைப்பாணிகளும் மற்றும் சேரநாட்டுக் கலைப்பாணிகளும் இங்குச் சங்கமித்துள்ளன.

இவர்கள் நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களை எடுத்தல் திருக்கோயில் பிரகாரங்கள் முழுவதையுமே மண்டபங்களாக மாற்றுதல் ஆகியவற்றில் அதிக நாட்டம்



மதுரை நாயக்கர் மண்டபம்

செலுத்தினர். காஞ்சி ஏகாம்பரநாதர்கோயில் மண்டபம், திருவண்ணாமலை ஆயிரக்கால்மண்டபம், திருக்கழுக்குன்றம் ஆமை மண்டபம், மதுரை கம்பத்தடி மண்டபம், நாயக்கமண்டபம், கிளிகட்டி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், புதுமண்டபம், அஷ்டசக்தி மண்டபம், திருவரங்கம் சேஷராயர் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், வசந்தமண்டபம், கருடமண்டபம், மன்னார்குடி ஆயிரக்கால்மண்டபம், கும்பகோணம் இராமசாமிகோயில் மண்டபம் ஆகியவை தனிச்சிறப்புகள் பல பெற்ற குறிப்பிடத்தக்க மண்டபங்களாகும். இவற்றுள் சில மண்டபங்கள் அதிஷ்டானவர்க்கத்தோடு கூடிய மேடையாக அமைந்த உயர்ந்த மண்டபங்களாகும். சில தரைமட்டத்திலேயே குறைந்த உயரமுடைய தளங்களின்மேல் எழுப்பப்பெற்றுள்ளன.

எழில்கொஞ்சும் விஜயநகர நாயக்கர் கால மண்டபத் தூண்களில் பல்வேறு கலைப்பாணிகளைக் காண இயலுகிறது. காஞ்சி ஏகாம்பரநாதர் மண்டபம், திருவண்ணாமலை மண்டபம், திருவரங்கம் சேஷராயர் மண்டபம், மதுரை மண்டபங்கள் இவ்வகையில் முதலிடம் வகிக்கின்றன. பாயும் குதிரைகளின்மேல் வாளேந்திய வீரர்கள், பாயும் புலிகள், தெய்வத்திருவுருவங்கள், காமச்சிற்பங்கள், நடன மாதர்கள், கலைநயம் மிகுந்த போதிகைகள் எனப் பல்வேறு கூறுகள் இவற்றில் காணமுடிகிறது.

திருக்கழுக்குன்றத்து ஆமைமண்டபம் செஞ்சி நாயக்கர்களின் உன்னதப்படைப்பாகும். ஓர் ஆமை மீது எழுப்பப்பெற்றது போன்று பல அழகிய சிற்பத்தொகுதிகளைச் சுமந்தவண்ணம் திகழ்வது இம்மண்டபமாகும். மதுரை நாயக்கர்களின் மண்டபங்கள் சிலவற்றில் பாயும் குதிரை, யாளிகள், சிம்மங்கள் இருப்பது போன்று சில மண்டபங்களில் மிகப்பெரிய அளவில் தெய்வத்திருவுருவங்கள் திகழ்கின்றன. கம்பத்தடி மண்டபத்தில் உள்ள காளி, வீரபத்திரர் போன்ற தூண் சிற்பங்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. விஸ்வநாதநாயக்கரிலிருந்து அனைத்து நாயக்கமன்னர்களின் உருவங்களையும் இங்குத் தூண்களில் காணமுடிகிறது. இதுபோன்றே திருவரங்கம் கருடமண்டபத்திலும் மதுரை நாயக்கர்கள் பலரது உருவங்கள் இடம்பெற்றுள்ளன.

திருவரங்கத்து மண்டபத்து உருவச்சிலைகளில் போசளர்களின் கலைப்பாங்கு காணப்பெறும். இதற்குக் காரணம் இங்குள்ள போசளர்களது வேணுகோபாலர் திருக்கோயிலேயாகும். மதுரையில் பின்வந்த நாயக்கர்களின் படைப்புகளாகத் திகழும் தூண்களின் கலைநயம் சற்றுக் குறைவுபடத் தொடங்கியதைத் திருப்பரங்குன்றம் போன்ற திருக்கோயில் மண்டபங்கள் வாயிலாக உணரமுடிகின்றது. கும்பகோணம் இராமசாமிகோயில் மண்டபத்தூண்கள் தஞ்சை நாயக்கர்களின் தனித்திறனை வெளிப்படுத்துகின்றன. இங்குச் சோழநாட்டு மரபுச் சிற்பக்கலை சற்று மாறுபாடுகளோடு பரிணமிக்கின்றது.

அழகர்கோயில், தாடிக்கொம்பு, தாரமங்கலம், குடுமியாமலை, கிருஷ்ணாபுரம் போன்ற இடங்களில் விஜயநகர காலத்தில் எடுக்கப்பெற்ற மண்டபத்தூண் சிற்பங்கள் இதுவரை நாம் கண்ட சிற்பத்தூண்களின் கலைத்தன்மையிலிருந்து சற்று மாறுபட்ட கலை மரபை உடையனவாய்த் திகழ்கின்றன. இங்கு நாம்காணும் தெய்வ உருவங்களிலும், மனித உருவங்களிலும் சேரநாட்டுப் பிற்காலக் கலைமரபின் தாக்கத்தைக் காணமுடிகிறது.

### *கொடுங்கை*

திருக்கோயில் கருவறைகளின் கால்பகுதிக்கு மேலாக உச்சியில் திகழும் பூதவரிமானத்தினை அடுத்துக் காணப்பெறும்வளைந்த தளத்தின் விளிம்பிற்குக் கபோதகம் எனப்பெயர். இது கூடுகள் பல பெற்றுத்திகழும். இதே பகுதி மண்டபங்களில்திகழும்போது கொடுங்கை என அழைக்கப்படும். கட்டடக்கலை வளர்ச்சியில் விஜயநகர நாயக்கர்களின் கலைப் படைப்புக்களுள் மிகச் சிறந்த இடத்தைப் பெறுவது கொடுங்கை அமைப்புகளே. சோழர் காலத்திய மண்டபங்களில் சுமார் ஒரு அடி நீளமே வெளிநோக்கி நிற்கும் இந்தக்கொடுங்கை விளிம்புகள் இவர்களது படைப்புகளில் சுமார் 6 அடி நீளம் வரை நீண்டு வளைந்து திகழ்கின்றன. இவை மட்டுமின்றி உட்புறம் முழுதும் மரவேலைப்பாடுகள் போன்று குறுக்கு நெடுக்குச் சட்டங்கள், உத்திரங்கள், இரும்புக்குமிழ் ஆணிகள் போன்று அனைத்தும் கல்லிலே படைக்கப்பெற்றிருக்கும்.

தஞ்சைப் பெரியகோயிலின் கருவறையின் முதல்தளத்துக் கபோதகத்தின் உட்பகுதியில் மர வேலைப்பாடுகள் போன்ற குறுக்கு நெடுக்குச் சட்டங்கள், ஆணிகள் போன்ற கருங்கல் வேலைப்பாடுகளைக் காணலாம். இதே அமைப்பு மூன்றாம் குலோத்துங்கன் காலக் கோயில்களான மாத்தூர், கீழப்பழையாறை போன்ற இடங்களில் வளர்ச்சிபெற்ற நிலையில் காணமுடிகிறது. இவை அனைத்தையும் விஞ்சும் வண்ணம் மிகச்சிறந்த நேர்த்தியான ஒரு கலை மரபை விஜயநகர நாயக்கர்களின் மண்டபக் கொடுங்கைகளின் காணலாம். தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சுப்பிரமணியசுவாமிகோயில் முக மண்டபத்தின் கொடுங்கைகளில் இத்தகைய வேலைப்பாடுகளின் நளினத்தைக் காணமுடிகிறது. தமிழகம் முழுவதும் இத்தகைய வேலைப்பாடுகளைக் கண்டுகளிக்கலாம்.

கல்லில் கொடுங்கைகளிலும், விதானங்களிலும் மரவேலைப்பாடுகள் போன்று செதுக்கப்பெறும் ஒரு கலைப்பாணி சேரர் கலையின் தாக்கமேயாகும். சேரநாட்டு அம்பலங்களும், இத்தகைய மண்டபங்களும் மரவேலைப்பாடுகள் உடையவையே சோழநாட்டிலும், பாண்டியநாட்டிலும் இதன் தாக்கம் கி. பி. 10-13ஆம் நூற்றாண்டுகளிலேயே ஏற்பட்டன. இதன் விளைவால்தான் பிற்கால விஜயநகர-நாயக்கர் மண்டபங்களில் மரவேலைப்பாடொத்த கலைப்பணிகளைக் காணமுடிகின்றது

*விதானத்துச் சிற்பங்கள்*

மண்டபங்களின் உட்புறக் கூரையான விதானங்களில் பலவகையான சிற்பங்களைப் படைப்பது விஜயநகர-நாயக்கர் காலத்துக் கலை சிறப்புகளுள் ஒன்றாகும். சோழர்காலத் தாராசுரம் கோயிலில் விதானத்துச் சிற்பங்கள் மிகுந்து இருப்பினும் இது சாளுக்கியக் கலைமரபின் தாக்கமே. இத்தாக்கம் பின்னாளில் மேலும் வளர்ச்சிபெற்றது. தாமரை மலர்கள், மலர்கொத்தும் கிளிகள், எண்திசை தெய்வங்கள், இராசி மண்டலங்கள், பத தேவைதைகள், பத மண்டலங்கள், கற்சங்கிலிகள், பாம்பு வளையங்கள் போன்ற பலவகைப் படைப்புகளைக் காணலாம். சாளுக்கியர், காகதீயர் மண்டபங்களில் இத்தகைய

வேலைப்பாடுகள் மிகுதியாக உண்டு. எனவே விஜயநகர-நாயக்கர்களின் பணிகளாகக் கிடைக்கும் மண்டபங்களில் சேரர், சாளுக்கியர், காகதீயர் போன்ற பிற கலைப்பாணிகளின் சங்கமித்த நிலையை நுகரமுடிகின்றது.

*புஷ்ய மண்டபங்கள்*

நீர்த்துறைகளில் திருக்கோயில்களோடு தொடர்புடையதாக எடுக்கப்பெறும் மண்டபங்களே புஷ்ய மண்டபங்களாகும். இவ்வகையில் அமைந்த மண்டபங்கள் தஞ்சை நாயக்கர்களால் எடுக்கப்பெற்றன. தஞ்சை அச்சுதப்பநாயக்கர், திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், மயிலாடுதுறை ஆகிய இடங்களில் காவிரிக் கரையில் எடுத்த மண்டபங்கள் பற்றிக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் பேசுகின்றன. நடுவே இறைவன் திருமேனியை எழுந்தருளச் செய்ய அழகிய மேடை, நாற்புறத்தாழ்வாரங்கள், அழகிய கொடுங்கைகளோடு விதானம், நடுவே விமானம் ஆகியவற்றோடு சிற்பங்கள் எழில் செய்யத்திகழும் மண்டபங்கள் மேற்குறித்த ஊர்களில் காவிரிக் கரையில் உள்ளன. திருவிடைமருதூர் புஷ்யமண்டபம் அனைத்தையும் விஞ்சும் வண்ணம் செறிவுடையதாகும்.

கும்பகோணம் மகாமகக் குளத்தைச் சுற்றிலும் சோடச மகாதான மண்டபங்கள் என்ற பெயரில் 16 மண்டபங்கள் உள்ளன. இங்குப் பதினாறு வகையான மகாதானங்களைத் தஞ்சை இரகுநாதநாயக்கர் செய்ததாகக் கல்வெட்டுகளும், இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இம்மண்டபங்களுள் மிகவும் சிறப்புவாய்ந்தது துலாபுருஷ மண்டபமாகும். தூண்களிலும், விதானத்திலும் அழகு மிகுந்த சிற்பத்தொகுதிகள் அடுக்கடுக்காய் உள்ளன. மன்னன் துலாபாரம் ஏறும் காட்சி, தெய்வத்திருவுருவங்கள், அழகுப்பாவைகள் போன்றவை இம்மண்டபத்தில் காணப்பெறும் சிறப்புமிகு சிற்பங்களாகும். இம்மண்டபம் போன்றே மற்ற 15 மண்டபங்களும் சிறிய கோயில்களுடன் இணைந்து காணப்பெறுகின்றன. தடாகங்களையும் கட்டடக்கலையின் திறத்தால் அழகு செய்த நாயக்கர்களின் கலைப்பணி போற்றுதற்குரியதாகும்.

*அழிந்த கலைமரபு*

இதுகாறும் விஜயநகர நாயக்க மன்னர்களின் கட்டடக்கலையின் பல்வேறு கூறுகளைக் கண்டோம். ஆனால் தஞ்சை நாயக்கர்களுக்குப் பின்பு அரசபீடம் ஏறிய தஞ்சை மராட்டிய மன்னர்களின் கோயிற் கட்டடக்கலையில் கருங்கல் பணியாக அமைந்தவை எதுவும் குறிப்பிடத்தக்க சிறப்புகள் பெறவில்லை. தூண்களாயினும், மண்டபங்களாயினும் கலைநயம் மிகுந்தவையாய் அமையவில்லை. மாறாக இக்கலைகள் நசிந்தன. ஆனால் நாயக்கர்கள் போற்றி வளர்த்த செங்கல் மண்டபக்கலையை மிகவும் போற்றிவளர்த்தனர். கருங்கற்றூணில் போதிகைகளில், உத்தரங்களில் காணப்படும் சிற்ப நுணுக்கங்களை இவர்கள் செங்கல் சிற்பங்களாக அமைத்துக் காட்டினர். தமிழகத்தில் அபூர்வமாக மலர்ந்த இக்கலை இன்று முற்றிலுமாக மறைந்து அழிந்துவிட்டது. அவர்கள் கண்ட நுணுக்கங்களைத் தற்போது யாரும் அறிந்திலர்.

கும்பகோணத்திலுள்ள வீரசைவ மடமான பெரியமடம், நாச்சியார்கோயில் பெருமாள்கோயில் முகமண்டபம் ஆகிய செங்கல் மண்டபங்கள் தஞ்சை நாயக்க அரசர் இரகுநாதநாயக்கர் எடுத்தார் என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். " வௌவால்நத்தி " என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப்படும் இவ்வகை மண்டபங்கள் சோழநாட்டில் பல உண்டு. நாகை மாவட்டம் திருவீழிமிழலையில் உள்ள வௌவால்நத்தி மண்டபம்தான் இவ்வகை மண்டபங்களில் தமிழகத்திலேயே மிகப் பெரியதாகும். மிகச்சிறந்த இந்த அரங்கம் (Auditorium) நாயக்கர் கட்டடக்கலையின் சிறப்பு முத்திரையாகும்.

இவ்வகை மண்டபங்களுக்கெனத் தயாரிக்கப்பெற்ற செங்கற்கள் தனித்தன்மை வாய்ந்தவை. இவற்றின் தயாரிப்புப் பற்றிய குறிப்புகள் கிடைக்காதது பேரிழப்பேயாகும். நற்பயனாக இவ்வகைச் செங்கல் மண்டபங்கள் கட்டுவதற்கு உபயோகித்த சுண்ணாம்புச் சாந்துக் கலவை பற்றிய குறிப்புகள் ' மதுரை திருப்பணிமாலை ' மூலம் அறியமுடிகிறது.

" அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறு விட்டு நன்றாய்க் குழைத்த செங்கல்லும் அடுக்காகப் பரப்பிக் கடுக்காயோடு ஆமலகம் அரிய தான்றிக்காய் உருந்து ஒருக்கால் இருக்கால் இடித்து நன்னீரில் ஊறிய கடுஞ்சாறும் விட்டு ஊழிக்காலங்களிலும் அசையாத வஞ்சிரக்காரையிட்டு..." என்ற இப்பழம்பாடல் அக்கட்டுமான நுட்பம் பற்றி விவரிக்கின்றது.

இதுபோன்று அண்மையில் தஞ்சை மராட்டியர் காலச் செங்கற்கட்டடம் ஒன்று இடிக்கப்பெற்றபோது மர உத்திரங்கள் சுவரினுள் பொதிக்கப்படும் இடங்களில், மரத்தின்மேல் தாமரை இலைகளை அடுக்கி மெலிந்த கயிறுகொண்டு சுற்றிப் பின்பே சுவரினுள் புதைத்துள்ளதைக் கண்டோம். வெளிமரம் மடித்து மக்கியிருக்கும் நிலையில், சுவரினுள் இருந்த மரப்பகுதி புதுமை குலையாமல் இருந்தது கண்டோம். கட்டடக்கலையில் நாயக்கர்கள் ஆட்சிக்காலங்களில் சோழநாட்டுக் கட்டடக்கலைஞர்கள் போற்றிய இத்தகைய பல நுணுக்கங்கள் வியப்பூட்டுகின்றன.

தஞ்சை நாயக்கர்கள் மற்றும் மராட்டியர்களின் கோயிற் கட்டடங்களின் தூண்கள் செங்கற்களால் அடுக்கப்பெற்றுச் சுண்ணாம்பு கொண்டு கட்டப்பெற்றவையாயினும், ஒரு கல்லுக்கும் மறுகல்லுக்கும் இடையே சுண்ணச்சாந்து இல்லாமல் இணைக்கப்பெற்றது போன்ற தோற்றத்தையே ஏற்படுத்துவது இப்பாணியின் தனிச்சிறப்பாகும். அடுத்து இவ்வாறு கற்களால் உருவான தூண்களில் பல வகையான சிற்பங்களை உருவாக்கியுள்ளது வியப்பிலும் வியப்பாகும். கொடிப்பெண்கள், பறவைகள், ஆடல் அணங்குகள், தெய்வத்திருமேனிகள், காமச் சிற்பங்கள் என அத்தனையும் இத்தூண்களிலும், போதிகைகளிலும், உத்தரங்களிலும் காணமுடிகிறது. ஒரு செங்கல்லிலும் சிற்பம் உண்டு. மூன்றடி உயரத்திற்கும் மேலான சிற்பங்களும் உள்ளன. கருங்கல்லில் அமைந்த கொடுங்கைகளில் எத்தனை வேலைப்பாடுகளோ அத்தனையும் செங்கற்களை அடுக்கியே கொடுங்கைகளாகக் காட்டியுள்ளனர்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நாயக்கர் பாணியாக அமைந்த மண்டபங்கள் கரைவீரம்,

திருக்கண்ணமங்கை,திருவாரூர், மாத்தூர் போன்ற ஊர்களில் உள்ளன. மராட்டியர்களின் படைப்புக்களாகத் திகழும் நீடாமங்கலம் யமுனாம்பாள் சத்திரம், ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரம் போன்ற கட்டடங்கள் இவ்வரிய கலையின் இறுதித் தடயங்களே.

### *திருக்கோயில் நெற்களஞ்சியங்கள்*

விஜயநகர நாயக்கர்களின் திருக்கோயில் கட்டடக் கலையில் நெற்களஞ்சியங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. பெரும்பாலான திருக்கோயில்களில் களஞ்சியங்களாகத் தனி அறைகள் உண்டு. திருவரங்கம் திருக்கோயிலில் மூன்றாம் திருச்சுற்றில் கொட்டாரம் என்ற சேமிப்புக் கிடங்கும், நான்கு மிகப்பெரிய களஞ்சியங்களும் உள்ளன. செங்கல்லால் மிகப்பெரிய வட்ட அமைப்பாக எடுக்கப்பெற்ற இக்களஞ்சியங்களில் சுண்ணாம்புப் பூச்சுப் பூசப்பெற்றுக் காணப்பெறுகின்றது. வெளிப்புறங்களில் மூன்று அடுக்காகக் " கொசிலி " என்றழைக்கப்பெறும் கபோத அமைப்பு வெவ்வேறு உயரங்களில் காணப்பெறுகின்றன. ஒவ்வொரு நிலையிலும் தானியங்கள் கொட்டவாசல்கள் உள்ளன. மேலே கூரை வேய்ந்து மழைநீர் இறங்காவண்ணம் காத்தனர். தமிழகத்துத் திருக்கோயில்களில் உள்ள களஞ்சியங்களிலேயே மிகப்பெரிய களஞ்சியங்கள் இவையே.

### *திருப்பாலைத்துறை களஞ்சியம்*

தஞ்சை நாயக்கர்களின் மிகச்சிறந்த கட்டடக்கலைத் திறனைக் காட்டும் ஓர் அமைப்பாகத் திகழ்வது தஞ்சை மாவட்டம் திருப்பாலைத்துறை திருக்கோயில் திருச்சுற்றில் உள்ள நெற்களஞ்சியமே. அச்சுதப்பநாயக்கர், இரகுநாதநாயக்கர் போன்ற தஞ்சை நாயக்க மன்னர்களின் ஆட்சியின்போது அமைச்சராய்த் திகழ்ந்த கோவிந்ததீட்சிதரின் ஆக்கத்தால் எழுந்ததே இக்களஞ்சியம்.

வட்ட அமைப்பில் கற்கூரையோடு செங்கல்லால் உள், வெளிப்பூச்சின்றி (Plaster) எடுக்கப்பெற்றுள்ளதே இதன் தனிச் சிறப்பாகும். இரண்டு நிலைகளில் அமைக்கப்பெற்றுள்ள

கொடுங்கை போன்ற கொசிவி மழைநீரால் வெளிப்புறச்சுவர் அதிகம் ஈரமாகாமல் தடுப்பதற்கேற்றவண்ணம் உள்ளது. கூம்பு வடிவில் காணப்பெறும் கூரை (Conical Roof) செங்கல் அடுக்குமுறையில் (Brick Corbelling) கட்டப்பெற்றுள்ளது. இவ்வமைப்பு முறையைக் கட்டடக்கலை வல்லுநர்கள் Self Supporting Structure என அழைப்பர். வட்டச்சுவரில் வெளிப்புறம் Brick Ribs எனக் கூறப்பெறும் தூண் அமைப்புகள் காணப்பெறுகின்றன. இவை சுவருக்கு வலுவூட்டும் (Stiffner) தன்மை உடையவை. முதல் அடுக்கிலும் இரண்டாம் அடுக்கிலும் பக்கவாட்டில் இரண்டு வாசல்களும், சரிந்த கூம்புக் கூரையில் சிறப்பு அமைப்புடன் ஒருவாசலும் உள்ளன. இவை நெல் நிரப்பப்பெறுவதற்காக உள்ளவையாகும். நானூறு ஆண்டுகள் கடந்தும் நிமிர்ந்து நிற்கும் இக்களஞ்சியக் கட்டுமானத்திறன் எதிர்காலத்திலும் கட்டடக்கலை வல்லுநர்களுக்கு உதவிடும் என்பதில் ஐயமில்லை.

### *திருத்தேரேற்றுக்கூடங்கள்*

செம்பொன்னார்கோயில் சோழர்காலக் கல்வெட்டொன்று "திருத்தேரேற்றுக்கூடம்" என்றசொல்லாட்சியை செப்பிடுகின்றது. நகரும் திருக்கோயில்களாகத் திகழும் திருத்தேர்களுக்கு இறைவன் திருமேனியை எடுத்துச் செல்ல அமைக்கப்பெற்ற மண்டபங்களே தேரேற்றுக் கூடங்கள். தமிழகத்தில் பெரிய கோபுரங்கள் போன்று பெரிய தேர்களுக்கு ஏற்றவாறு பெரிய தேரேற்றுக் கூடங்களையும் அமைத்தனர். உயர்ந்த மேடை, படிக்கட்டுக்கள், மேடைமீது விமான அமைப்புடன் மண்டபங்கள் அமைக்கப்பெற்றன. இவை முழுதும் செங்கல் மண்டபங்களே. நாயக்கர்களது பணிபோன்றே தஞ்சை மராட்டியர்களின் தேரேற்றுக் கூடங்களும் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் படைத்த இத்தகைய கூடங்களில் சுண்ணாம்புச் சுதையில் செய்யப்பெற்ற சிற்பங்கள் மிகுதியாகக் காணப்பெறுகின்றன. தஞ்சாவூர், கும்பகோணம், திருபுவனம், திருவிடைமருதூர், மயிலாடுதுறை போன்ற ஊர்களில் நாயக்கர், மராட்டியர் கலை மரபில் தோன்றிய திருத்தேரேற்று மண்டபங்களைக் காணமுடிகின்றது.



திருப்பாலைத்துறைக் களஞ்சியம்

*இஷபக்கொட்டில்கள்*

"இஷபக்கொட்டில்" (ரிஷபக்கொட்டில்) என்பது நந்திமண்டபங்களைக் குறிப்பிடும் கல்வெட்டுச் சொல்லாட்சியாகும். மாட்டுக்கொட்டில் எனத் தற்போது அழைக்கப்பெறும் இம்மரபு திருக்கோயிற் கட்டடக்கலையில் 'ரிஷபக்கொட்டில்' என அழைக்கப்பெற்றது. சோழர் காலத்திலேயே சிறந்து திகழ்ந்த இக்கட்டட மரபு விஜயநகர, நாயக்கர், மராட்டியர் காலங்களிலும் சிறப்புற்றுத் திகழ்ந்தது.

இவ்வாறு விஜயநகரப் பேரரசர்களும், நாயக்கர்களும், மராட்டியர்களும் திருக்கோயில்களில் பல வகையான கலைப்பாணிகளுடன் கட்டடக்கலை மரபைப் போற்றிக் காத்தனர். போசளர், காகதியர், மலையாளர், கலைப்பாணிகளும் சோழர், சாளுக்கியர், பாண்டியர் மரபுகளும் கலந்து புதிய புதிய கோணங்களில் பரிணமிக்கத் தொடங்கின. மராட்டியர் பணிகளில் ஆங்காங்கே தக்காணக் கலையும் கலந்தது. பெரும்பாலும் திருக்கோயில் ஓவியங்களிலும், சுதைச் சிற்பங்களிலும் இத்தாக்கம் காணப்படுகிறது. துவக்கத்தில் காணப்பெற்ற செறிவு இறுதியில் குறைந்தது என்பதும் உண்மை. பிற தாக்கங்கள் இருப்பினும் இதனைப் படைத்தவர்கள் தமிழகக் கட்டடக்கலை வல்லுநர்களே என்பது வரலாற்றுச் சான்றுகளால் மெய்யாகின்றது. கி. பி. 1625இல் ஜான் ஒலெஃப்ஸன் என்ற டென்மார்க்கு கலைஞர் ஒருவர் தரங்கம்பாடியிலிருந்து டென்மார்க்கு அரசுக்கு எழுதிய கடிதத்தில் தமிழகக் கட்டடக்கலைஞர்களின் திறனைக் கண்டு வியந்து எழுதியுள்ளார். அதில் தமிழகக் கொத்தனார்களின் தொழில் நுணுக்கம், விரைந்து செயல்படும் ஆற்றல் இவைகள் குறித்துப் பலபட வியந்து பாராட்டியுள்ளார். மன்னார்குடியில் இன்று நாம் காணும் 54 அடி உயரமுடைய கருடத்தம்பம் எனும் கருங்கல் கொடிமரம் ஒன்றே இவர்களின் ஆற்றலுக்குச் சான்றாகும்.

# தமிழகக் கோபுரச் சிற்பங்கள்

கல்லில் கவினுறு சிற்பங்கள் வடித்தல், செப்புத்திருமேனிகள் வார்த்தல், ஓவியம் வரைதல் போன்ற கலைகள் பல்லவர், முற்காலப் பாண்டியர், முற்காலச் சோழர் ஆகிய மன்னர்களின் காலங்களில் உன்னத நிலையை அடைந்து, இராஜராஜனுக்குப் பிறகு சற்றுத் தொய்வுபெற்றுப் பிற்காலச் சோழர்களின் மறைவிற்குப் பின்னர் தளர்வுற்று நிற்பதை உலகக் கலைவல்லுநர்கள் நன்கறிவர். ஆனால் பல்லவர்கள் காலத்தில் ஏற்றம் பெறாமல், முற்காலச் சோழர்களின் கவனத்தைக் கவராமல், இராஜராஜனால் ஏற்றம்பெறத் தொடங்கிய கோபுரக் கட்டுமானக் கலை பிற்காலச் சோழர்கள் காலத்தில் இமயமென உயர்ந்து நின்றது. பின்னர் விஜயநகர மன்னர்களின் ஆக்கத்தாலும், நாயக்க மன்னர்களின் கலை ஆர்வத்தாலும் கோபுரச்சிற்பங்களின் கலை நயம் சற்றுக் குறைவு பெற்றாலும், மாறாகக் கோபுரக்கட்டுமானக் கலை மிகவும் ஏற்றம்பெற்றது. கோபுரத் தத்துவமும், அக்கலை வளர்ந்த திறமும் கண்ட பின்னர் கோபுரச் சிற்பச் சிறப்புகள் காண்போம்.

திருவாயில், மகாதுவாரம் என்றெல்லாம் சிற்ப ஆகம நூல்கள் குறிப்பிடும் திருக்கோயில்களின் நுழைவுவாயில் பீடத்திலிருந்து சிகரம் வரை கோபுரம் என்ற பெயரால் குறிக்கப்பெறுகின்றது. பீடம், உபபீடம், அதிஷ்டானம், கால், வேதிகை, பிரஸ்தளம் என்ற அங்கங்கள் உடைய முதல்தளத்தின்மேல் , கூடுகள், சாலைகள், துவாரங்கள் உடைய பலதளங்கள் தொடர்ந்து சிகரம், கலசம் என்ற அமைப்புகளோடு திகழ்வது கோபுரமாகும். இத்தகைய கோபுரங்களில் பெரும்பாலும் பிரஸ்தளம் வரை உள்ள பகுதி கருங்கற் கட்டுமானமாயும், அதற்கு மேல் செங்கற் கட்டுமானமாயும் திகழும். இவ்விரு அமைப்புகளால் அதில் இடம்பெறும் சிற்பங்கள் (1) கருங்கற் சிற்பங்கள் (2) சுதை சிற்பங்கள் என்ற இருவகையில்

அடங்கும். இத்தகைய சிற்பங்களின் செய் நேர்த்தி, அவைதம் சிறப்புகள் பற்றிப் பேசும் முன்பு " கோபுரமே ஒரு சிற்பம் " என்ற தத்துவம் அறிவோம்.

**கோபுரமே ஒரு சிற்பம்**

சிற்ப ஆகமநூல்களை ஆழ்ந்து நோக்கும்போது கோபுரம் என்பது ஒளிவடிவான ஈசனின் தோற்றத்தை உணர்த்தும் ஓர் உருவக அமைப்பு என்பது நன்கு விளங்கும். திருக்கோயில்களில் கடவுண்மங்கலம் செய்யும் போதும் மற்ற மங்கல நிகழ்வுகளிலும் ஹோம குண்டத்தில் தீமூட்டி அவிசொரிந்து வேள்விகள் நிகழ்த்துதல் ஆகம மரபாகும். ஹோம குண்டங்களில் தீமூட்டும் முன்பு மகாசிவனின் ஒரு நிலையான வாகீஸ்வரரையும், வாகீஸ்வரியையும் அக்குண்டத்தில் முன்பு ஆவாகித்து, பீடத்தில் எட்டுத்திசை பாலகர்களையும் நிறுத்தி, குண்டத்தில் புனித மரங்களின் சமித்துக்களைப் பரப்பி, அதன்மேல் தர்ப்பைப் புல்லால் தளிர்ப்படுக்கை செய்து, பின் நெய் சொரிந்து தீ எழச்செய்வர். மந்திர ஒலிகள் முழங்க எழும் வேள்வித் தீ ஒளிமயமான ஈசனின் வடிவாகக் கருதப்பெற்று, அத்தீப்பிழம்பிற்கு அவிஸ நல்குவது மரபாகும்.

ஹோம குண்டமும், அதிலிருந்து எழும் தீப்பிழம்பும் இணைந்த வடிவே நமது கோபுரவடிவாகும். பீடத்திலிருந்து பிரஸ்தளம் வரை உள்ள கோபுர அங்கமே ஹோம குண்டமான வேதிகையாகும். எனவேதான் பிரஸ்தளத்திற்குக் கீழ் உள்ள தாமரை இதழ் போன்ற கோபுர அங்கத்திற்கு " வேதிகை " எனப்பெயரிட்டனர். ஹோம குண்டமான வேதிகையின் அங்கங்களுக்கு என்ன பெயரோ அதே பெயர்கள்தான் கோபுர அங்கங்களுக்கும் உரியதாயிற்று. அடுத்து பிரஸ்தளம் என்பது ஹோமகுண்டத்தின் மேல் பரப்பப்பெறும் தளிர்ப்படுக்கையான தர்ப்பையாகும். அதே பெயரோடுதான் கோபுரத்தின் முதல்தளம் திகழ்கின்றது. வேதிகையான குண்டத்தில் எவ்வாறு எட்டுத்திசை பாலகர்களுக்கு இடம் அளிக்கப்பெறுகின்றதோ அதே அமைப்பில் கோபுரத்திலும் எட்டுத்திசை பாலகர்களுக்கு இடமுண்டு. ஹோமகுண்டத்தில் பிரஸ்தளத்திலிருந்து தீப்பிழம்பு எவ்வாறு

வெளிவருகின்றதோ அதோபோன்று கோபுரத்தில் பிரஸ்தளத்திற்கு மேலுள்ள பல தளங்களும், சிகரமும், கலசமும், சிகரமகாநாசிகளின் கூர்முனைகளும் தீ நாக்குகளின் வடிவிலே அமைக்கப்பெறுகின்றன.

எனவே கோபுரமாகத் திகழும் கட்டுமான அமைப்பு ஓமகுண்டத்திலிருந்து எழும் சோதி வடிவமான ஈசனின் உருவமே. ஒரு திருக்கோயிலில் ஈசனின் திருமேனிக்கு எவ்வாறு பூஜைகள் உண்டோ அதேபோன்று கோபுரத்திற்கும் பூஜை முறைகள் உண்டு. இது சிருஷ்டி, சம்ஹாரம் என்ற இருவகைகளில் ஒவ்வொரு அங்கமும் மந்திர சாஸ்திரத்தின் அஷரங்களின் வடிவேயாகும்.

எல்லையிலாப் பெருவெளியான பிரபஞ்சமே ஈசன். அதுவே ஆனந்தம். அதுவே பரமானந்தம். அதுவே அனைத்தையும் இயக்கும் ஒரு மகாசக்தி. அந்த சக்தியின் வெளிப்பாடு நெருப்பு. அதுவே இயக்கம் என்ற உன்னத தத்துவம், எனவே கோபுரம் என்பது உன்ந்த தத்துவம் உரைக்கும் ஒரு சிற்பவெளிப்பாடு.

**கோபுரங்களின் வளர்ச்சி நிலைகள்**

தமிழகத்தில் உள்ள கோபுரங்களில் மிகத்தொன்மையானது காஞ்சியிலுள்ள கயிலாயநாதர் கோயிலின் நுழைவாயிலேயாகும். இராஜசிம்மபல்லவன் எடுத்த இக்கற்றளியின் நுழைவாயில் பிற்காலத்தில் தமிழகத்தில் விண்ணைத்தொடுமளவு எழுந்த கோபுரங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. இந்நுழைவாயிலுக்கு அடுத்து உள்ளே திகழ்வது இராஜசிம்மனின் மகன் எடுத்த " மகேந்திரவர்மேஸ்வரம் " எனும் சிறிய கோயிலாகும். இதன் விமானம் வட்டவடிவில் அமையாமல் இருதளமுடைய கோபுரத்தைப் போன்றே உள்ளது.

பிற்காலத்தில் நுழைவாயிலில் ஒருகோயில் (விமானம்) எடுக்கும் மரபை மாற்றி அந்த இடத்தில் இரண்டாம் இராஜகோபுரத்தை எடுத்தனர். இந்த மகேந்திரவர்மேஸ்வர விமானஅமைப்பு பிற்காலத்தில் எழுந்த கோபுர அமைப்புகளுக்கு

முன்மாதிரியாக அமைந்தது. இதில் காணும் சிற்ப அமைப்புகளே பின்னாளில் கோபுரச்சிற்பங்களுக்கு வித்திட்டது.

பல்லவர்களுக்குப் பிறகு கோயில் எடுக்கும் கலையைப் போற்றியவர்கள் முற்காலச் சோழர்களேயாவர். இதில் ஆதித்தனின் பங்கு போற்றுதற்குரியது. இவர்கள் கோபுரம் அமைப்பதில் அவ்வளவாக நாட்டம் செலுத்தவில்லை இருப்பினும் திருவாரூரில் முதல் ஆதித்தசோழன் எடுத்த திருமூலட்டானத்து கோபுரம் (அணுக்கன் திருவாயில்) அவர்கள் கால கோபுர அமைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மிகச்சிறிய கோபுரமான இதில் தென்புறக் கோஷ்டத்தில் உள்ள ஆலமர் செல்வர் (தட்சிணாமூர்த்தி) சிற்பம் கோபுரச் சிற்பங்கள் வரிசையில் உன்னத இடம்பெறக்கூடிய ஒன்று.

**ஓவியத்தில் காணும் தில்லைக்கோபுரம்**

தஞ்சை பெரியகோயிலில் உள்ள இராஜராஜன் காலத்து ஓவியத்தொகுப்பில் தில்லைப்பொன்னம்பலத்தில் இராஜராஜன் ஆடவல்லானை வணங்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இக்காட்சியில் தில்லைக்கோபுரங்கள் நான்கும் காட்டப்பெற்றுள்ளன. இவை தற்போதைய தமிழகக் கோபுரங்களில் இருந்து மாறுபட்டுக் கேரளநாட்டுக் கோபுரங்களைப் போன்றுள்ளன. தற்போது தில்லையில் உள்ள நான்கு கோபுரங்களும் பிற்காலச் சோழர்களால் எடுக்கப்பெற்றவையாகும். எனவே தஞ்சை ஓவியத்தில் காணும் அமைப்பிலேயே தில்லைக்கோபுரங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் பின்பு எழுந்த தில்லைக்கோபுரங்கள் கோபுர சிற்பக் கருவூலமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். இராஜராஜன் காலத்தில் இருந்த நிலை பற்றி முதலில் காண்போம்.

'திருத்தமாந்தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே நிருத்தம் நான் காணவேண்டி நேர்பட வந்தவாறே' -என்று நாவுக்கரசரும், தில்லைச் 'சிற்றம்பலமேய நட்டப் பெருமானை நாளுந் தொழு வோமே' எனத் திருஞானசம்பந்தரும், 'கடுத்தாடு கரதலத்தில் தமருகமும், எரி அகலும், கரிய பாம்பும் பிடித்தாடிப் புலியூர் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாமன்றே' என்று

சுந்தரரும், பொன்னம்பலம் கூத்து உகந்தானே-என்று மணிவாசகரும் தெள்ளு தமிழ்ப்பாக்களால் பாடிப்போற்று கின்றனர். இப்பாடல்களைக் கூர்ந்து நோக்குவோமாயின் அவர்கள் வாழ்ந்த காலமான கி. பி. 7-9ஆம் நூற்றாண்டுகளில் தில்லைத் திருக்கோயிலில் அம்பலமேடையும் அங்கு ஆடல்வல்லான் திருமூர்த்தமும் சிறப்புறத் திகழ்ந்தமையை அறிகிறோம். ஆடும் பரமமூர்த்தியைப் பணியப்போந்த நால்வர் பெருமக்களும் தில்லைக்கோயிலின் நான்கு கோபுரவாயில்கள் வழியாக வந்ததாகக் கூறுவது தொன்மையான மரபாகும். இக்கோபுரவாயில்களில் நுழையும்போது அவ்வவர்களை அங்கு நினைந்து வணங்குவது சைவப்பெருமக்கள் இன்றும் போற்றும் நெறியாகும். இந்நான்கு கோபுரங்களும் மாமன்னன் இராஜராஜன் காலத்தில் எவ்வாறு இருந்தன என்பதை இனிக்காண்போம்.

தற்போது நாம் காணும் தில்லைக் கோபுரங்களில் மேற்குக் கோபுரத்தை அநபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்க சோழனும், கிழக்குக் கோபுரத்தை பிற்கால பல்லவ மரபினனான கோப்பெருஞ் சிங்கனும், தெற்குக் கோபுரத்தை கோப்பெருஞ் சிங்கனும், சுந்தரபாண்டியனும், வடக்குக் கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயரும் எடுத்தனர் என்பதை சாசனங்கள் வழி உறுதிசெய்ய இயலுகின்றது. இவை கி. பி. 11ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு நிகழ்ந்த பணிகளாகும்.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்பு இக் கோபுரங்கள் எவ்வாறு இருந்தன என்பதற்கு நமக்குக் கிடைக்கும் ஒரே காட்சிச் சான்று தஞ்சை பெரியகோயிலில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜன் தீட்டிய வண்ண ஓவியங்களே. இங்கு இரண்டு இடங்களில் தில்லைக்கோயிலைப் பற்றிய முழுக் காட்சித்தொகுப்புகள் உள்ளன. முதலாம் காட்சியில் சுந்தரர் தில்லைப்பொன்னம்பலத்தில் நடராஜப்பெருமானை வணங்கும்நிலை சித்திரிக்கப்பெற்றுள்ளன. பொன் ஓடுகள் வேயப்பெற்ற அம்பல மண்டபம், அதில் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆடவல்லான் முன்பு இசைபாடும்காட்சி ஆகியவை உள்ளன.

இதனை அடுத்துள்ளது, மாமன்னன் இராஜராஜன் தன் தேவியருடன் அம்பலத்து ஆடும் சபாபதியை வணங்கும் காட்சித்

தொகுப்பாகும். இதுதான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜன் காலத்தில் தில்லைக்கோயில் எவ்வாறு இருந்தது என்பதை நமக்குக்காட்டும் அரிய ஓவியமாகும். இங்கு திருமதிலுடன் நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் உள்ளன. திருமதிலின் ஒருபகுதியில் இரண்டு அடுக்குடைய திருச்சுற்று மாளிகை திகழ்கிறது. தற்போதும் தெற்கு மற்றும் மேற்குத் திசைகளில் இத்தகைய திருச்சுற்று மாளிகையை நாம் காணலாம். இக்காட்சித் தொகுப்பின் நடுவே திருச்சிற்றம்பலமாம் பொன்னம்பலம் காணப்படுகிறது. இவ்வண்ண ஓவியத்தில் இவ்வம்பலத்து மேற்கூரை முழுவதும் மஞ்சள் வண்ணத்தில் பொற்றகடுகளால் வேயப்பெற்றுள்ளதையும், பொற்கலசங்கள் அலங்கரிப்பதையும் காணலாம். சபாநாயகர் முன்பு உள்ள மேடைமீது இராஜராஜனும் அவனது தேவியரும் வணங்கி நிற்கின்றனர். தஞ்சை ஓவியத்தில் நாம் காணும் பொன்னம்பலம் அப்படியே இன்று நாம் தில்லையில் நேரில்காணும் நிலையிலேயே எந்தவித மாற்றமும் இன்றி திகழ்வது வியப்பளிக்கின்றது.

ஆனால் இங்கு நாம் ஓவியத்தில் காணும் கோபுரங்கள் சோழர்களின் கோபுர அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தற்போது தமிழகத்தில் எங்கும் காணமுடியாத வடிவமைப்பில் உள்ளன. இத்தகைய கோபுரங்களை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று நாம் யோசிக்கும்போதே, இவை சேரநாட்டுக் கலைப்பாணியில் அமைந்த கோபுரங்கள் என்ற உணர்வு ஏற்படும். ஆம்... ... ! இருஞ்சாலக்குடா, திருச்சூர் போன்ற கேரளநாட்டுக் கோயில்களின் கோபுரவாயிலோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவை பழந்தமிழகச் சேரர் கலைப்பாணி என்பது தெள்ளிதின் புலப்படும். இங்கு நுழைவாயிலுக்குமேல் இரண்டு அடுக்குகள் உள்ளன. அவற்றின் கூரைகள் மரவேலைப்பாடுகளோடு ஓடுகள் வேயப்பெற்றுள்ளன. உச்சியில் கலசங்கள் இல்லை கீர்த்தி முகம் மட்டும் உள்ளது.

இவ்வோவியம் தஞ்சையில் தீட்டப்பெற்ற அதே காலத்தில் தஞ்சை பெரியகோயில் இராஜராஜன் எடுத்த இரண்டு நுழைவுக் கோபுரங்களையும் (இராஜராஜன் திருவாயில், கேரளாந்தகன் திருவாயில்) தில்லைக்கோபுரங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் இவை தனித்தனிக் கலைப்பாணி உடையவை

என்பதைக் காணமுடியும். இராஜராஜன் காலத்தில் சோழர்பாணிக் கோபுரக்கலை தோற்றம் பெற்றுவிட்டதால், சேரர் பாணியில் அமைந்த தில்லைக்கோபுரங்கள் இம்மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே தில்லையில் இருந்திருக்கவேண்டும். இதே அமைப்பு பின்னாளில் இரண்டாம் குலோத்துங்கன் கோபுரம் எடுக்கும்வரை நீடித்திருக்கவேண்டும்.

பல்லவர்கள் காலத்திலும், முற்காலச்சோழர்கள் காலத்திலும் திருக்கோயில்களில் கோபுரங்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இராஜராஜன் காலத்தில் முக்கியத்துவம் பெறத்துவங்கிய கோபுரக்கலை முதல் குலோத்துங்கனால் ஏற்றம் பெற்றது. பின்னர் விஜயநகரப் பேரரசின் ஆட்சியில் நாயக்கர்கள் எடுத்த கோபுரங்கள்தான் மிக உயர்ந்து, சிறப்புகள் பலபெற்றுத் திகழ்ந்தன. இவற்றிற்கு மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், திருவண்ணாமலை கோபுரங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

தில்லைக்கோயிலில் இருந்த சேரர்பாணிக் கோபுர அமைப்பு மட்டுமின்றி, 'அம்பலம்' எனும் கூத்துமேடையமைப்பும் சேரர் கலையில் முக்கிய அங்கமாகும். திருச்சூர் இருஞ்சாலக்குடா போன்ற கோயில்களில் 'கூத்தம்பலம்' எனும் அம்பலமும், 'கூடியாட்டம்' என்ற சாக்கையர் கூத்தும், தற்பேரது வழக்கில் உள்ளன. தமிழகத்தில் பொற்சபை, தாமிரச்சபை என்றெல்லாம் அழைக்கும் மரபுஇருப்பதன்றி 'அம்பலம்' என்று அழைக்கும் மரபு பிற கோயில்களில் இல்லை. சோழர்காலக் கல்வெட்டுக்களில் சபையோர் கூடும் 'அம்பலம்' பற்றிய குறிப்புகள் உண்டு. ஆனால் அவ்வழக்கு தற்போது இல்லை. தென்மாவட்டங்களில் ஊர்த்தலைவரை அம்பலக்காரர் என்று அழைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. தில்லைவாழ் அந்தணர்களின் சிகை முடிப்பு கேரளத்து நம்பூதிரிகளை ஒத்தே காணப்படுவது. இரு பகுதிகளுக்கும் பொதுவான ஒரு இணைப்பைக் காட்டுகின்றது.

தில்லைவாழ் அந்தணர்கள் சேரநாடு சென்று, பின்பு தில்லைக்கு மீண்ட வரலாற்றைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் விரிவாகக் கூறுகின்றார். களந்தை என்ற ஊரின் தலைவரான கூற்றுவநாயனார் தம் பெருவீரத்தின் செருக்கால் பல



தஞ்சை ஓவியத்தில் தில்லைக் கோபுரம்
(கி. பி. 10-ஆம் நூற்றாண்டு)



கோபுரச்சிற்பத்தில் தேர்கள் - திருக்கோடிக்கா

மன்னர்களை வென்று நாடு பல கவர்ந்தார். பெருமன்னனாக மகுடம் சூட விரும்பித் தில்லைவாழ் அந்தணர்களிடம் முடிசூட்ட வேண்டினார். ஆனால் தில்லை மறையவர்கள் 'சோழப்பெருமன்னனின்றிப் பிறர் யாருக்கும் முடிசூட்டமாட்டோம் ' என்று மறுத்துவிட்டுக் கூற்றுவரின் தொல்லைக்கு ஆளாகாமல், ஒரே ஒரு குடியை மட்டும் தில்லையில் விட்டுவிட்டு அனைவரும் சேரர் நாட்டுக்குச் சென்றுவிட்டனர்.

இதனை,

*'மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்*
*தில்லை வாழ் அந்தணர் தம்மை வேண்ட அவரும்,*
*'செம்பியர்தம்*
*தொல்லை நீடுங் குல முதலோர்க்கு அன்றிச் சூட்டோம்*
*முடிஎன்று*
*நல்காராகிச் சேரலன்றன் மலைநாடணைய நண்ணுவார்.*
*ஒருமை உரிமைத் தில்லைவாழ் அந்தணர்கள் தம்மில் ஒரு*
*குடியைப்*
*பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும்படி இருத்தி*
*இருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டில் எய்தியபின்'*

என்று கூறுகின்றார்.

இவ்வாறு சேரநாடு ஏகிய தில்லைவாழ் மறையோர் பின்பே மீண்டும் சோழநாடு திரும்பினார். இவ்வாறு பழந்தமிழகத்தின் ஒருபகுதியான சேரநாட்டுக்கும் தில்லைக்கும் தொடர்பு இருந்திருக்கிறது. இதனால் சேரர் கலையின் பல கூறுகள் தில்லையில் நிலைபெறலாயிற்று. இதனை நமக்குத் தெளிவாகக் காட்டுபவையே தஞ்சை ஓவியங்களாகும்.

சகம் 1606 இரத்தாட்சி வருடம் கார்த்திகை மாதம் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை, தசமி திதி, அஸ்த நட்சத்திரம், கும்பலக்கினம் உடைய நாளில் (கி.பி. 1684ஆம் ஆண்டு) மராட்டிய மன்னன் சாம்போஜியின் ஆதரவால் குலகுரு முத்தையாதீட்சதரால் பொன்னம்பலத்துத் திருப்பணியைக்

கேரளத்துச் சிற்பி ஒருவன் செய்ததாகவும் திருவாரூர் திருக்கோயிலில் உள்ள செப்பேட்டின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே சேரநாட்டுக் கலைத்தாக்கமே தில்லையில் பின்னாளிலும் தொடர்ந்தது என அறிகிறோம்.

**இராஜராஜனின் பணி**

உயர்ந்த கோபுரங்கள் எடுப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவன் மாமன்னன் இராஜராஜனே. இவன் தஞ்சைப் பெருங்கோயிலை எடுப்பதற்குக் காரணமாய்த் திகழ்ந்தது காஞ்சி இராஜசிம்மேஸ்வரமே (கயிலாயநாதர் கோயில்) ஆகும். காஞ்சியில் உள்ள கல்வெட்டொன்றில் அத்திருக்கோயிலைக் "*கச்சிப்பேட்டுப் பெரிய திருக்கற்றளி*" என மிக உயர்வாகக் குறிப்பிடுகிறான். மகாசாயிகாபத அமைப்பில் எழுப்பப்பெற்ற கயிலாயநாதர்கோயில் அமைப்பிலேயே தான் எடுத்த இராஜராஜஸ்வரத்தையும் எடுத்தான். காஞ்சியில் உள்ள சிறிய நுழைவாயிலுக்குப் பதிலாக கேரளாந்தகன் திருவாயிலையும், மகேந்திரவர்மேஸ்வரத்திற்கு இணையாக இராஜராஜன் திருவாயிலையும் அமைத்தான். இவை இரண்டுமே கிழக்குப்புறம் அமைந்த கோபுரங்கள், இதே திருக்கோயிலில் தெற்கு, மேற்கு மற்றும் வடக்குப் புறங்களில் மூன்று நுழைவாயில்களை அமைத்தாலும் அங்கு கோபுரங்களை எடுக்கவில்லை. இவன் எடுத்த கோபுரங்களோ அத்திருக்கோயிலின் விமானத்தின் உயரத்தை மிஞ்சவில்லை.

**பிற்காலச் சோழர்களின் கோபுரப்பணி**

முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் ஆகியோர் காலத்தில் இருந்து, சோழர்களின் இறுதிக்காலம்வரை கோபுரக்கலை மிக உயர்ந்த இடத்தைப் பெறலாயிற்று. திரிபுவனம், தாராசுரம் போன்ற இடங்களில் உயரம் குறைந்த கோபுரங்களும், தில்லை, திருவாரூர் போன்ற இடங்களில் உயர்ந்த கோபுரங்களும் எடுத்தனர். இவர்கள் காலக் கோபுரங்களில் கற்சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த அளவில் இடம்பெறலாயிற்று. இக்கலையில் இது ஒரு பொற்காலம் என்றே கூறலாம். இவர்களைப்

பின்பற்றிப் பிற்காலப் பாண்டியர்களும், ஹொய்சாளர்களும் திருவானைக்கா, திருவரங்கம் போன்ற இடங்களில் கோபுரங்கள் எடுத்தனர்.

### விஜயநகரப் பேரரசர்களும், நாயக்கர்களும்

கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்றவர்கள் எடுத்த தமிழகக் கோபுரங்களும், செஞ்சி, தஞ்சை, மதுரைநாயக்கர்கள் எடுத்த கோபுரங்களும், தென்காசிப் பாண்டியர் எடுத்த கோபுரமும் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர்கள் காலப்பணியாக வெளி மதிலில் நான்கு மிகப்பெரிய கோபுரங்கள் எடுத்தோடு உள்மதிலிலும் நான்கு கோபுரங்கள் எடுத்தனர். கற்சிற்பங்களுக்கு ஓரளவு முக்கியத்துவமும் சுதைச் சிற்பங்களுக்கு மிகுந்த ஆக்கமும் அளித்தனர். திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், குடந்தை சாரங்கபாணி, மன்னார்குடி, மதுரை மீனாட்சி ஆலயம், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருவரங்கம், தென்காசி, பட்டீச்சரம் போன்ற திருக்கோயில் கோபுரங்கள் இவர்கள் வளர்த்த கலையின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவற்றில் கோபுரச்சிற்பங்களின் நயம் சோழர்கள் காலத்திற்குச் சற்றுக் குறைவுபடினும், கட்டட நிர்மாணக்கலை விண்ணளவு உயர்ந்தது.

### தஞ்சை கோபுரச் சிற்பங்கள்

தஞ்சை பெரியகோயிலின் கேரளாந்தகன் கோபுரத்தில் கருங்கற் சிற்பங்கள் இடம்பெறாமல் சுதைச் சிற்பங்களே உள்ளன. இதில் இராஜராஜன், நாயக்க மன்னன் செவ்வப்பன், பின்வந்த மராட்டியர்கள் காலக் கலைப்படைப்புகளாக மூன்று வெவ்வேறு வகைத் தனித்தன்மையுடைய சிற்பங்களைக் காணமுடிகிறது. இராஜராஜன் காலத்துச் சுதைச் சிற்பங்களில் ஐந்து தலைகள் உள்ள சதாசிவமூர்த்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றுள்ளதைக் காணலாம்.

**சதாசிவ மூர்த்தம்**

சிற்பக்கலை ஆய்வோர்க்கு சதாசிவமூர்த்தங்கள் பற்றி ஆராய்வது மிக இன்றியமையாததாகும். சோழர்கள் காலத்தில் ஈசனை ஐந்துமுகம் உடையாராக, நான்குமுகம் உடையாராகக் கோபுரச்சிற்பங்களில் காட்டும் நிலையைக் காணமுடிகிறது. ஆனால் வைத்தீஸ்வரன்கோயில் கோபுரத்தில் காட்டப்பெற்றுள்ள 18ஆம் நூற்றாண்டுச் சதாசிவமூர்த்தியின் திருவுருவத்தில் முப்பத்திரண்டு தலைகள் உள்ளன. பல்லவர்கள் மற்றும் சோழர்காலத்தில் பத்மத்தில் அமர்ந்தவண்ணம் நான்கு தலையுடன் அமர்ந்த வடிவில் காட்டப்பெற்றுள்ள சிற்பங்களைப் பிரமன் என்று பலர் கருதிவிடுகின்றனர்.

தஞ்சை, கண்டியூர், செந்தலை போன்ற பகுதியில் மிகுதியாகத் திகழும் இத்தகைய நான்கு முகங்களுடைய சிற்பங்களையும் (பல்லவர் காலம்) தஞ்சை கோபுரத்து நான்குமுகச் சிற்பங்களையும் கூர்ந்து நோக்குவோமாயின் எல்லாமுகங்களிலும் நெற்றிக்கண், ஒருகாதில் மட்டும் குழை, தலைகளில் பிறைச்சந்திரன் போன்ற சிவனார்க்குரிய பல அம்சங்களைக் காணலாம். இக்கோலம் வாகீச சிவனார் வடிவாகும். அண்மையில் கண்டியூருக்கு அருகில் உள்ள வீரசிங்கம்பேட்டையில் (பண்டைய நந்திபுரம்-ஆயிரத்தளி எனும் ஊர்) வாகீச சிவனாரோடு வாகீஸ்வரி சிலையும் புதைந்திருந்து வெளிப்பட்டது கண்டோம். இக்கோல நிலையை ஞானசம்பந்தப்பெருமான் "பவமலி தொழிலது நினைவொடு பதும நன்மலரது மருவிய சிவனது சிவபுரம்" என்று பாடுகின்றார்.

சிவனாரை நான்முகனாக, ஐம்முகனாகக் காட்டும் பல கோலங்களை இராஜராஜன் தான் எடுத்த கோபுரத்தில் இடம்பெறச்செய்ததோடு அல்லாமல் "பஞ்சதேகமூர்த்தி" எனப்பெயரிட்டு ஒரு செப்புத்திருமேனியையும் தஞ்சைக் கோயிலில் இடம்பெறச் செய்ததைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. தமிழகக் கலை வரலாற்றில் எவருமே செய்யாத புதுமைப் படைப்பாகும் இது. சதுரமான பத்மபீடத்தின் மேல் பத்துக்கரங்களுடன் நின்ற கோலத்தில் சிவபெருமான் திகழ

அவரது உடலில் இடுப்பளவில் நான்கு திசைகளிலும் நான்கு திருவுருவங்கள் இணைந்து ஐந்துடல் மூர்த்தியாக (பஞ்சதேகமூர்த்தி) படைத்து வழிபட்டான் என்பதை அறிகிறோம். எனவே சதாசிவமூர்த்தம் இராஜராஜனால் எவ்வளவு போற்றப்பெற்றது என்பதும், அவனது கேரளாந்தகன் கோபுரத்தில் இம்மூர்த்திக்குக் கொடுத்த முக்கியத்துவமும் ஈண்டு நோக்குதற்குரியதாம்.

இராஜராஜன் திருவாயிலாகத் திகழும் இரண்டாம் கோபுரத்தில் கற்சிற்பங்களும், சுதைச் சிற்பங்களும் நிறைந்து காணப்பெறுகின்றன. கற்சிற்பங்களில் லிங்கோத்பவர், சண்டீசர் கதைக்காட்சிகள், ஈசனின் திருமணக்காட்சி, மார்க்கண்டேயர் கதை, வள்ளித் திருமணக்காட்சிகள், அர்ச்சுனன் தவம், கிராதார்சுனர் விற்போர், மன்மத தகனம், கண்ணப்பர் கதை, திரிபுரதகனம், ஆகிய காட்சிகளும், வேழம் உரித்தகோலம், கங்காளமூர்த்தி ஆகிய ,சிற்பங்களும் உள்ளன. திரிபுர அசுரர்களுக்கு உபதேசிக்கும் காட்சி தஞ்சைக் கோபுரத்திலன்றி வேறு எங்கும் காணமுடியாத ஒன்றாகும். மேல்நிலையில் எட்டுத்திசைக் காவலர் சிற்பங்கள் கோஷ்டங்களில் உள்ளன.

**தமிழகத்திலேயே மிகப்பெரிய கோபுரச் சிற்பங்கள்**

இதே இராஜராஜன் திருவாயிலில் இரண்டு மிகப்பெரிய துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. பதினெட்டு அடி உயரமுடைய இவை இரண்டும் தமிழகக் கோபுரச்சிற்பங்கள் வரிசையில் மிகப்பெரியவையாகும். இச்சிற்பங்களின் எழிலும், செய்நேர்த்தியும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவையாகும்.

மேல்நிலையில் எழில்மிகுந்த சுதைச்சிற்பங்கள் உள்ளன. இவை தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்பன் காலத்தில் புதுப்பிக்கப்பெற்றவை. இங்கு முதல்தளத்தில் ஓர் இடத்திலும், சிகரத்திற்குக் கீழ் உள்ள தளத்தில் ஓர் இடத்திலும் செவ்வப்பநாயக்கரின் வணங்கும் கோல உருவச்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

*தில்லைக்கோபுரச் சிற்பங்கள்*

தில்லைத் திருக்கோயிலின் நான்கு கோபுரங்களும் பிற்காலச்சோழர்களின் கோபுரக்கலைப் பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மேலைக்கோபுரம் இரண்டாம் குலோத்துங்கனாலும், கிழக்கு மற்றும் தெற்குக் கோபுரங்கள் கோப்பெருஞ்சிங்கனாலும், எடுக்கப்பெற்றுப் பின்னாளில் வடக்குக்கோபுரம் கிருஷ்ணதேவராயராலும், தெற்குக்கோபுரம் சுந்தரபாண்டியனாலும் திருப்பணிகள் செய்யப்பெற்றவையாகும்.

தில்லைக்கோபுரங்களில், சிற்பங்கள் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கோஷ்டத்திலும், அத்தெய்வத்தின் பெயர் தமிழ், கிரந்த எழுத்துக்களால் கல்வெட்டாகப் பொறிக்கப்பெற்றுள்ளது. தமிழகக் கோபுரச் சிற்ப வரலாற்றில் இது ஒரு புதுமையாகும். மேலும் நுழைவு வாயிலின் இருபுறமும் பரதக்கலையின் கரணங்களைச் சிற்பமாக்கி, ஒவ்வொரு சிற்பத்திற்குக் கீழும் பரதசாத்திர சுலோகங்கள் குறிக்கப்பெற்றிருப்பதும் நோக்குதற்குரியதாம்.

இங்குள்ள நான்கு கோபுரங்களிலும் கீழ் வரிசையில் இடம்பெற்றுள்ள சிற்பங்களின் எண்ணிக்கை நாற்பத்திஆறு ஆகும். எண்திசைக் காவலர்கள், ஒன்பது கோள்கள், ரிஷிகள், கணபதி, சுப்ரமண்யர், மகிஷவதம் செய்யும் தேவி, பிரமன், விஸ்வகர்மா, நாரதர், கங்கை, யமுனை, சேத்ரபாலர், சண்டீசர், தன்வந்திரி, நாகராஜர் அஸ்வினி தேவதை, பத்ரகாளி, ஞானசக்தி, திரிபுரசுந்தரி போன்ற திருவுருவங்கள் உள்ளன. மேல்நிலைக் கோஷ்டங்களில் சிவபெருமான், உமை, திருமால் போன்ற தெய்வங்களின் பல்வேறு கோலங்கள் இடம்பெற்றுள்ளன. மேல்நிலையில் உள்ள கதைச் சிற்பங்கள் அண்மைக்காலத் திருப்பணிகளால் புதுமைப்பெற்றுவிட்டன.

தில்லைக் கோபுரச் சிற்பங்களைப் பொறுத்தவரை மிக அதிக அளவு (46 கோஷ்டங்களில்) பரிவார தேவதைகளுக்கு இடம் அளித்திருப்பதோடு சோழர்கால வரலாற்றில் 12 இராசிகளுக்கும் கோஷ்டத்தில் இடம் அளித்துப் பெயரும் பொறிக்கப்

பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நதி தெய்வங்கள், விஸ்வகர்மா, அஸ்வினி, தன்வந்திரி ஆகிய சிற்பங்கள் உள்ளமையும் சிறப்பு அம்சமாகும்.

### *சூரியதேவன்*

தில்லைக்கோபுரங்களில் உள்ள சூரியதேவன் சிற்பங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. சாயா உஷாதேவியருடன் நின்றகோலத்தில், எட்டுக்கரங்கள்பெற்று, ஒளிவட்டத்துடன் கூடிய மூன்று முகங்களுடன் காட்சி அளிக்கின்றனார். பின்புற முகம் சுவருள் இருக்குமாறு காட்டப்பெற்றுள்ளது. பீடத்தில் ஓராழியை ஏழு புரவிகள் இழுக்க, அருணன் தேர் ஓட்டும் சிற்றுருவத் தொகுதியும் உள்ளது.

இவ்வாறு சூரியதேவனை நான்முகனாகக் காட்டும் சிற்பங்களைத் தமிழகத்தில் வேறு திருக்கோயில்களில் காண்பது அரிது. தில்லையில் உள்ள இவ்வடிவங்களைத் தாராசுரத்தில் உள்ள ஒரு சிற்பத்தோடு ஒப்பிட்டு நோக்கவேண்டும். அங்கு ராஜகம்பீரன் திருமண்டபத்தில், நின்ற கோலத்தில் உள்ள திருவுருவம் கரண்ட மகுடத்துடன், மூன்று முகங்கள், ஒளிவட்டம், எட்டுக்கரங்கள், வலக்கரங்கள் அக்கமாலை, கத்தி, கட்வாங்கம், தாமரை மலரையும், இடக்கரங்கள் பாசம், அபயம், தண்டம், கபாலத்தையும் தாங்கியுள்ளன. வலப்பாகம் ஆண் உருவாகவும், இடப்பாகம் பெண் உருவாகவும் திகழ்கிறது. இக்கோஷ்டத்திற்கு மேலாகச் சோழர்கால எழுத்துக்களாகச் செந்தூர எழுத்துக்கள் உள்ளன. இவை கல்வெட்டு வெட்டுவதற்கு முன்பு எழுதப்பெறுபவையாகும். அதில் "அர்த்தநாரி சூரியன்" என்று எழுதப்பெற்றுள்ளது. தமிழகத்தில் இதனை ஒத்த வடிவம் எங்கும் கிடையாது. ஆனால் சூரியனையும் அர்த்தநாரியாக நான்கு முகத்துடன் வணங்கும் மரபு மிகப் பழங்காலம்தொட்டு இருந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவ்வகையில் இந்த அர்த்தநாரி சூரியன் சிற்பமும், தில்லையில் திகழும் நான்குமுக சூரியதேவன் சிற்பங்களும், தமிழகக்கலை வரலாற்றில்

தனி இடம் பெறும் சிற்பங்களாகத் திகழ்கின்றன. இதே தில்லைக்கோயிலில் உள்ள பிறிதோர் சூரியதேவன் சிற்பத்தில் பன்னிரு இராசி மண்டலங்களின் உருவங்கள் மலர்ந்த தாமரை வடிவோடு உள்ளன. இதுவும் ஒரு வகை அரிய சிற்பமே.

*தாராசுரத்துக் கோபுரச்சிற்பங்கள்*

தாராசுரத்து இராஜராஜேஸ்வரத்தில் கிழக்குக்கோபுரம் தற்போது மேல்நிலைகள் முற்றிலுமாக அழிந்து பிரஸ்தளம் வரை உள்ள கருங்கற் கட்டுமானப் பகுதியே உள்ளன. அதிஷ்டானப் பகுதியில் உள்ள 46 கோஷ்டங்களில் தெய்வத் திருவுருவங்கள் இடம்பெற்று இருந்தன. இவற்றில் பல சிற்பங்கள் அழிந்தன. எஞ்சியவை தஞ்சைக் கலைக்கூடத்திலும், தாராசுரத்துக் கலைக்கூடத்திலும் உள்ளன. இக்கோபுரம் விக்கிரமசோழனின் பேயரனான இரண்டாம் இராஜராஜனால் எடுக்கப்பெற்றது.

*தில்லை போன்றே கோபுரக் கோஷ்டங்களில் 46 சிற்பங்கள்* இருப்பினும் இங்கு ஒன்பது கோள்களின் சிற்பங்கள் இடம்பெறவில்லை. மாறாகச் சக்தி வழிபாட்டிற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பெற்றுள்ளது. எல்லா கோஷ்டங்களுக்கும் மேலாகத் தமிழ்-கிரந்த எழுத்துக்களில் கோஷ்ட தெய்வத்தின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றிருப்பதால் பல தெய்வ உருவங்களைப் பற்றி அறியமுடிகிறது.

வடகிழக்கு மூலையில் ஆதிசண்டேஸ்வரரில் தொடங்கி கங்கை, தும்புரு நாரதர், பிரமன், குபேரன், சந்திரன், மகாசாஸ்தா, நாகராஜர், வாயு ஹர்லேகாதேவி, ருத்ராணி, வைஷ்ணவி, பிராமி, வருணன், ரிஷி, சாந்தியாதித்தசக்தி, சாந்திசக்தி, வித்யாசக்தி பிரதிஷ்தாசக்தி, நிவ்ருத்தி சக்தி, நிருதி, தன்வந்திரி, அஸ்வினி வீரபத்திரர், யமன், ரதிமன்மதன், அக்னி, அகஸ்தியர், ஸ்ரீதேவி, துர்க்கை, கணபதி, இந்திரன், சங்கநிதி, பதுமநிதி, சூரியன், சுப்ரமண்யர், க்ஷேத்ரபாலர், சரஸ்வதி, விஸ்வகர்மா, ஈசான் என்ற 46 தெய்வ சிற்பங்களும் இடம்பெற்றிருந்தன. இங்குள்ள சக்தி வடிவங்கள் சிற்பக்கலை ஆய்வோர்க்குப் புதுமையானதாகும்.

### *திருவாரூர்-பழையாறைக் கோபுரச் சிற்பங்கள்*

சோழர்களின் இறுதிக்காலக் கோபுரச்சிற்பங்கள் சிறப்புடன் திகழும் இடங்கள், திருவாரூர், பழையாறை மற்றும் திருபுவனம் திருக்கோபுரங்களாகும். இங்கு தில்லை, தாராசுரம் போன்று கோஷ்ட சிற்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பெறவில்லை. மாறாகக் காஞ்சி கயிலாயநாதர்கோயில் போன்று பாயும் சிங்கங்கள், யாளிகள், கற்பனை விலங்குகள், கும்ப பஞ்சரங்கள், கோஷ்ட பஞ்சரங்கள் ஆகியவை மிகச்சிறந்த நுணுக்கத்தோடு படைக்கப்பெற்றுள்ளன. இவற்றோடு நாட்டியத் தாரகையரின் எழிற்சிற்பங்களும் இடம்பெற்றுத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

### *கோபுரச் சிற்பங்களில் மனித உருவச்சிலைகள்*

மனிதர்களுக்கு உருவச்சிலை எடுக்கும் மரபு தமிழகத்தில் சங்க காலத்திலேயே தோன்றியதாகும். நடுகற்களில் உருவம் சமைத்துப் பெயரும் பீடும் எழுதுவது தொன்மைப் பண்பாடு. இது கோபுரச்சிற்பங்களிலும் பின்னாளில் தொடர்ந்தது. தில்லை மேற்குக் கோபுர வாயிலின் உட்புறம் இரண்டாம் குலோத்துங்கன் மற்றும் சேக்கிழாரின் உருவங்களும், வடக்குக்கோபுரத்தில் கிருஷ்ணதேவராயர் உருவமும் தாராசுரத்துக் கிழக்குக் கோபுரத்தில் 'பெரியதேவர்' என்ற எழுத்துப்பொறிப்புகளோடு இரண்டாம் குலோத்துங்கன் உருவமும் திருவாரூரில் எழுத்துப்பொறிப்புகளோடு மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் அவனது குரு ஈஸ்வரசிவர் எனும் சோமேஸ்வரர் உருவமும், சீர்காழி கோபுரத்தில் முதலாம் குலோத்துங்கன் உருவமும், தென்திருவாலங்ககாட்டுத் திருக்கோபுரத்தில் திருநாவுக்கரசர் என்ற சோழர்கால அடியவர் ஒருவர் உருவமும் கற்படிமங்களாக இடம்பெற்றுள்ளன.

இதேபோன்று மன்னார்குடி கோபுரங்களில் தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதன், அவனது மனைவியர், விஜயராகவன், கோவிந்ததீட்சிதர் போன்றவர்களின் சுதை உருவங்களும், தஞ்சைப்பெருங்கோயில் இராஜராஜன் திருவாயிலில்

செவ்வப்பநாயக்கனின் கதை உருவங்களும், திருவாரூர் வடக்குக்கோபுரத்தில் செவ்வப்பன் மற்றும் கமலை ஞானப்பிரகாசர் கற்சிற்பங்களும் இடம்பெற்று இக்கோபுரங்கள் உள்ளளவும் அவர்கள் புகழ் பாடுபவையாகத் திகழ்கின்றன.

### *கோபுரச் சிற்பங்களில் குடமுழவம்*

தமிழர்தம் கலாச்சாரத்தில் இசையும் கூத்தும் பண்டுதொட்டு இடம்பெற்ற பண்பாட்டுக் கூறுகள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆடற்கலையில் "ஜதி" என்ற முக்கிய அங்கத்தை ஏற்படுத்தியவர்களும் தமிழர்களே. ஈரோட்டுக்கு அருகிலுள்ள அறச்சலூர் கல்வெட்டில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஜதி எனும் "தை த தைத தை" போன்ற சொற்கட்டுகள் முறையாகக் குறிக்கப்பெற்றுள்ளன. பின்பு, கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தேவாரம் பாடும் அப்பர் அடிகள் "குடமுழவச் சதி வழியே அனல் கையேந்திக் கூத்தாட வல்ல குழகனாகி" என்று பாடுகிறார். மேலும் "தேம், தாம்" என்ற ஜதி சொற்களை ஞானசம்பந்தர் அப்படியே குறிப்பிட்டுப் பாடுகின்றார்.

"குடமுழவ சதிவழியே" என்ற அப்பரின் கூற்றால் ஜதி சொற்கட்டுகளை ஆடலுக்கென்று குடமுழவத்தில் ஒலிக்கச்செய்த பழம்பெரும் மரபு நன்கு புலனாகின்றது. இத்தகைய குடமுழவம் பண்டுதொட்டு எவ்வாறெல்லாம் இருந்திருக்கிறது என்பதனைக் கோபுரச்சிற்பங்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. பாலர்கள், இராட்டிய கூடர்கள், சாளுக்கியர்கள், கங்கர்கள், காகதீயர்கள் போன்ற பல்வேறு அரசமரபினர் படைத்த சிற்பங்களையும் தமிழகத்துச் சிற்பங்களையும் ஒப்பிட்டு அண்மையில் குடமுழவம் பற்றிய ஆய்வு மேற்கொண்டேன். இதில் 'குடமுழவம்' கி.பி.5ஆம் நூற்றாண்டுச் சிற்பங்களிலிருந்து தொடர்ந்து காணப்படுகிறது. தமிழகத்தைத் தவிர மற்ற பகுதிகளில் இரண்டு, மூன்று குடமுழவங்களைக் கயிற்றால் பிணைத்து மூன்றுமுகங்களையும் இயக்கும் மரபு இருந்துள்ளது. ஆனால் தமிழர்கள் தங்கள் ஆற்றலால் குடமுழவம் இசைத்தலையும்; அக்கருவியை அமைப்பதிலும் ஒரு சாதனை படைத்தனர். தனித்தனி முழவங்களுக்குப் பதிலாக இரண்டு முழவங்களில்

நான்கு வாய்கள் உள்ள முழவங்கள், ஒரே முழவத்தில் ஐந்து வாய்களுடைய பஞ்சமுகவாத்தியம் எனப் புதிய அரிய தாளக் கருவிகளை கி.பி.11-12ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கி வரலாறு படைத்தனர். "நான்முகம் தட்டி நடுமுகம் உரப்ப" என்று கல்லாடம் பேசும். இந்த அரிய தாளக்கருவி பற்றிய இரண்டு கோபுரச்சிற்பங்கள் இவ்வாய்வுக்குத் துணைபுரிகின்றன.

தில்லை மேலைக் கோபுரத்தில் நாட்டிய கரண சிற்பங்களில் வரிசையில் ஒரு கலைஞன் இரண்டு குடமுழவங்களில் நான்கு வாய்களுடைய அரிய தாளக்கருவியை இயக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இதே போன்று கும்பகோணம் சார்ங்கபாணி கோயில் கோபுரத்தில் உள்ள சிவபெருமானின் ஊர்த்துவதாண்ட சிற்பத்தில் கணமொன்று பஞ்சமுகவாத்தியம் இசைக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது.

### *கரணச்சிற்பங்கள்*

ஆடற்கலையின் பல நிலைகளைக் காட்டும் சிற்பங்கள் எல்லாம் பெரும்பாலும் கோபுரச் சிற்பங்களாகத்தான் உள்ளன. தில்லைக்கோபுரங்கள் குடந்தை சார்ங்கபாணி கோபுரம், திருவாரூர் ஆகியவை சிறந்த எடுத்துக்காட்டுக்கள். தில்லையிலும், குடந்தையிலும் இத்தகைய சிற்பங்கள், புடைப்புருவச் சிற்பங்களாகத்தான் (Bas Relief) உள்ளன. ஆனால் திருவாரூர் கோபுரத்திலோ நாட்டிய நங்கையர்தம் சிற்பங்கள் முழு உருவச் சிற்பங்களாக உள்ளன. இவை யாவும் சோழர்காலப் படைப்புகள். குடந்தைக்கு அருகில் உள்ள திருக்கோடிக்கா திருக்கோயில் கோபுரத்தில் 15ஆம் நூற்றாண்டு நாட்டியத் தாரகையர்தம் சிற்பங்கள் உள்ளன. இதேபோன்று பட்டீச்சரம் கோயில் கோபுரக் கதவில் விஜயநகர காலத்து ஆடல் நங்கையரின் சிற்பங்கள் உள்ளன. மன்னார்குடி கோபுரங்களில் நாயக்கர்கள் கால நாட்டிய சிற்பங்கள் கதை வடிவில் உள்ளன. இவை யாவும் பல்வேறு காலங்களில் ஆடற்கலை பெற்ற ஏற்றத்தின் சான்றுகளாக நிற்கின்றன.

திருவரங்கம் வெள்ளைக்கோபுரத்தில் தோளில் மிகப்பெரிய அரிவாள் சுமந்துகொண்டு நிற்கும் "பெரியாழ்வார்" என்பவரது உருச்சிலையும், எதிரே இரண்டு ஜீயர்களின் உருவச்சிலைகளும், இவை அருகே தமிழ் மற்றும் தெலுங்கு கல்வெட்டுக்களும் உள்ளன. இதுபோன்று தெற்குக் கோபுரவாயிலில் அப்பாவய்யங்கார் உருவச்சிலையும் கல்வெட்டுக்களும் உள்ளன. இக்கல்வெட்டுக்களும், திருவரங்கத்துக் கோயிலொழுகு எனும் வரலாற்றுச் சுவடியும் கூறும் செய்திகளிலிருந்து, இந்நால்வரும் கோபுரத்திலிருந்து வீழ்ந்து உயிர்துறந்தவர்கள் என்பதையும், இவர்கள் கோனேரிராயன் என்ற மன்னனின் செய்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து உயிர்துறந்த செய்திகளையும் அறியமுடிகிறது.

இதே திருவரங்கத்திலுள்ள சொர்க்கவாசல் கோபுரத்திலுள்ள கோனேரிராயன் என்ற மன்னனின் கல்வெட்டு, அம்மன்னன் தன்பெயர் பொறித்து வெளியிட்ட தமிழ்க்காசு தமிழகம் மற்றும் திருப்பதி திருமலையில் உள்ள அவனது கல்வெட்டுக்கள் ஆகியவற்றை ஆராய்ந்து 'கோனேரிராயன்' என்ற தமிழ் மன்னன் வரலாறு இந்நூலாசிரியரால் வெளியிடப்பெற்றுள்ளது. 1472 முதல்1496 வரை விஜயநகரப்பேரரசை எதிர்த்துத் திருச்சியையும், காஞ்சியையும் தலைமை இடங்களாகக்கொண்டு, சோழமண்டலம் மற்றும் தொண்டைமண்டலப் பகுதிகளை ஆட்சி செய்தவன் இவன். இவனது இயற்பெயர் வயித்தியநாத காலிங்கராயன் என்பதாகும்.

விஜயநகர அரசில் முக்கிய இடம் வகித்த நரசநாயக்கனுக்கும் கோனேரிராயனுக்கும் பகைமை ஏற்பட்டுத் தமிழ்நாட்டில் தனியாட்சி நடத்தும் நாளில் நரசனோடு உடன் பிறந்த இராமராஜா என்பவர் துறவறம் பூண்டு "கந்தாடை இராமானுஜதாசர்" என்ற தாஸ்யநாமத்துடன் திருவரங்கம் கோயில் முக்கிய பொறுப்பில் இருந்தார். அப்போது கோனேரிராயனுக்கும் கந்தாடை இராமனுஜதாசருக்கும் பகைமை மூண்டது. இதனால் சில மோதல்களும் நிகழ்ந்தன. கந்தாடை இராமானுஜதாசரின் சீடர்களான பெரியாழ்வார், அப்பாவய்யங்கார், ஜீயர்கள் இருவர் கோனேரிராயனுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோபுரமேறி வீழ்ந்து

உயிர்துறந்தனர். இதனால் நரசனுக்கும் கோனேரிராயனுக்கும் போர்மூண்டது. 1496இல் கோனேரிராயன் தோல்வியுற்றான். மீண்டும் தமிழகம் நரசனின் ஆளுகைக்கு உட்பட்டது. இத் தமிழ்மன்னன் பல்லக்கில் தனது பரிவாரங்களோடு பவனிவரும் காட்சியும் கல்வெட்டுக் குறிப்புகளும் திருவோத்தூர் கோபுரத்தோடு இணைந்துள்ள மதிலில் உள்ளன. மன்னனும் சிற்பமானான். எதிர்த்து உயிர்துறந்தவர்களும் கோபுரச் சிற்பமானார்கள்.

இவ்வாறு கோபுரமேறி வீழ்ந்து உயிர்துறந்த பெரியாழ்வாரின் சிற்பத்தின் தோளில் ஒரு பெரிய அரிவாள் இருப்பதைக்கண்டோம். இச்சிற்பம் தமிழகத்துப் பண்பு ஒன்றை உணர்த்தும் வடிவாகும். திருவரங்கத்தில் அரங்கப்பெருமான் திருமேனியை உலா வரும்போது பாதுகாக்கும் உரிமை ஒரு சில குடும்பத்தார்க்கு உண்டு. இவர்கள் சோழமன்னர்கள் காலத்தில் திருக்கோயில்களைக் காத்த "திரிசூல வேலைக்காரர்கள்" போன்றவர்கள். ஏதேனும் ஒரு காரணத்தினால் அத்திருமேனிக்கு ஒரு தீங்கு நேரிட்டால் அடுத்த கணம் அரிவாள் சுமந்துவரும் அந்த அடியவர் தன் கழுத்தைத் தானே அரிந்துகொண்டு உயிர்த்தியாகம் செய்துவிடுவார். எனவே உயரிய நோக்கத்திற்காகத் தனது உயிரை இழக்கத் துணியும் உயர்ந்த நோக்கு தமிழகத்தில் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக நிற்கும் இக்கோபுரச் சிற்பங்கள் நமது வரலாற்றையும் பண்பாட்டையும் தெளிவாகக் காட்டும் ஆடிகளாகத் திகழ்கின்றன.

### *கோபுரச்சிற்பங்களில் தேர்கள்*

தமிழகத்தில் தேர்கள் உருவாக்கும் கலை மிகத் தொன்மையானது. "ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே" என அப்பர் சுட்டும் அந்தத்தேர் இன்றும் ஆரூரில் ஆழித்தேர் என்றுதான் அழைக்கப்பெறுகின்றது. தில்லையில் விக்கிரமசோழன் ஆடவல்லானுக்குத் திருத்தேர் செய்து அதில் செம்பொன் வேய்ந்து திருவீதியில் உலா வரச்செய்ததைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. உயர்ந்த கலை நயத்தோடு செய்யப்பெற்ற பழமையான தேர்கள் இன்று இல்லை. சுமார் 300 ஆண்டுகளுக்குட்பட்ட தேர்கள்தான்

தற்போது தமிழகமெங்கும் உள்ளன. பழமையான தேர்கள் எவ்வாறு இருந்தன என்பதற்குத் திருக்கோடிக்கா (தஞ்சை மாவட்டம்) திருக்கோபுரத்துச் சிற்பங்கள் துணை நிற்கின்றன. இக்கோபுரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட தேர்ச்சிற்பங்கள் உள்ளன. அவை மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் திகழ்கின்றன.

### *திருக்கழுக்குன்றத்துச் சிற்பங்கள்*

திருக்கழுக்குன்றத்தில் மலைமேல் உள்ள கழுகாசலமூர்த்தி கோயிலுக்கு அருகில் நாள்தோறும் இரண்டு கழுகுகளுக்கு உணவு அளிப்பது அவ்வூரின் சிறப்புகளுள் ஒன்றாகும். இவ்வழக்கம் 300ஆண்டுகளுக்கு முன்பும் இருந்துள்ளது என்பதை பக்தவத்சலேஸ்வரர் கோயில் மேற்குக் கோபுரத்துச் சிற்பங்கள் வாயிலாக அறியமுடிகிறது. செஞ்சி நாயக்கர்களின் படைப்பான இக்கோபுரத்தில் கழுகுகளுக்கு உணவூட்டும் காட்சி கற்சிற்பமாகவும், ஓவியமாகவும் திகழ்கின்றன.

### *சிற்பங்கள் வடித்த சிற்பிகளின் சிற்பங்கள்*

உலகமே வியக்கும் தமிழகச் சிற்பக் கலைக்கு உயிர்நாடியாய்த் திகழ்ந்தவர்கள் சிற்பிகளே. அவர்களை நம் தமிழ் மன்னர்கள் முறையாக மதித்தனர். மாமல்லையில் அங்குச் சிற்பம் வடித்த சிற்பிகளின் பெயர்கள் கல்வெட்டாகத் திகழ்கின்றன. தஞ்சைக் கோயிலை உருவாக்கிய குஞ்சரமல்லனுக்கு மாமன்னன் இராஜராஜன் "இராஜராஜப் பெருந்தச்சன்" என விருதளித்துத் தஞ்சைக் கல்வெட்டுகளில் என்றும் அவன் பெயர் அழியாவண்ணம் நிலை நிறுத்தினான். செம்பியன்மாதேவியார் சக்கடி சமுதியன் என்ற சிற்பியைப் போற்றினார்.

கோப்பெருஞ்சிங்கன் எடுத்த தில்லைக்கோபுரத்தில் (கிழக்குக் கோபுரம்) இரண்டு சிற்பிகளின் உருவங்களும், அவர்களருகே அளவுகோல் ஒன்றின் உருவமும் இடம் பெற்றுள்ளது. தாங்கள் உபயோகித்த கோலின் அளவு அதில் காட்டப்பெற்றுள்ளது. இதேபோன்று வடக்குக் கோபுரத்தில் நான்கு

சிற்பிகளின் உருவங்களும், அவர்களது பெயர்கள் கல்வெட்டாகவும் உள்ளன. அக்கல்வெட்டில் "விருத்தகிரியில் சேவகப்பெருமாள்" "சேவகப்பெருமாள் மகன் விசுவமுத்து" "இவன் தம்பி காரணாகாரி" "திருப்பிறைக்கோடை ஆசாரி திருமருங்கன்" - என்னும் நால்வர் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. தமிழகத்துக்குச் சிறந்த கோபுரச்சிற்பங்களைத் தந்த அச்சிற்பிகளின் உருவங்களையும் காணும்பேறு நமக்குக் கிடைக்கின்றது.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது உயரிய சிந்தனையுடனும் சிறந்த கற்பனை வளத்துடனும், உன்னதக் கட்டுமான ஆற்றலுடனும் எடுக்கப்பெற்ற தமிழகக் கோபுரங்கள் உலகக் கலை அரங்கில் இமயமென உயர்ந்து நிற்றல் கண்கூடு. அவை தமிழனின் ஆற்றல், பண்பு, கலாச்சாரம் ஆகியவை இணைந்த உருவகமே. தமிழகத்தின் கோயிற் கோபுரங்கள் பற்றியும் அதில் உள்ள சிற்பங்கள் பற்றியும் விரிந்த நூல் எழுத மலையளவு செய்திகள் உள்ளன. அது தமிழனின் பெருமையை மேலும் உலக அரங்கில் உயர்த்தும் என்பது திண்ணம்.

# தமிழகத்தில் பள்ளிப்படைக் கோயில்கள்

வரலாறு படைக்கும் தமிழ்மகனைத் தெய்வமாகப் போற்றும் மரபு மிகத்தொன்மைக் காலத்திலிருந்தே இருந்துவந்துள்ளது. முதலில் நடுகற்களில் தொடங்கிய இம்மரபு பின்பு பள்ளிப்படைக் கோயில்களாகவே வளர்ச்சிபெற்றன. நடுகற்களில் தொடங்கிப் பின்னாளில் தமிழகத்தில் எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயில்களைப்பற்றி வரலாற்றுச் சான்றுகளோடு இனிக்காண்போம்.

### *தமிழகம் கண்ட நடுகற்கள்*

கடுஞ்சமர் புரிந்து போர்க்களத்தில் மாண்ட தமிழ் மகனுக்குச் சிலை எடுப்பது தமிழகத்தின் தனிச்சிறப்பு. இதற்கு வீரக்கல் அல்லது நடுகல் என்று பெயர். நடுகற்கள் அனைத்திலும் உருவச் சிற்பங்கள் காணப்படவில்லை எனினும் வரலாற்றுச் சாதனைகள் புரிந்த பலரது நடுகற்களில் இறந்தவனது உருவம் பொறிக்கப்பட்டே காணப்படுகிறது. மாற்றார் நாட்டிற்குச் சென்று ஆநிரை கவர்தல், மாற்றார் கவர்ந்து செல்லும் ஆநிரைகளை மீட்டல், மாற்றார் அரணைக் கொள்ளல், தம் கோட்டையைக் காத்தல், வருகின்ற படையைத் தாக்குதல் போன்ற தீரச்செயல்களில் மறவர்கள் ஈடுபடுவர். இவற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு பூவின் பெயரையிட்டு அதைத் திணை என்று அழைப்பது தமிழர் மரபு.

ஆநிரை கவர்ந்து கோடலுக்கு வெட்சித்திணை என்றும் மீட்டலுக்குக் கரந்தைத் திணை என்றும் பெயர். இவை இலக்கிய ஆட்சிகள். இம்மரபுகள் எல்லாம் இலக்கிய இலக்கணங்களில் மட்டுந்தானா அல்லது வாழ்க்கை நடைமுறையிலும் நடைபெற்றவையா என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை இறுக்கும் வண்ணம் எண்ணிலா நடுகற்களும் - வீரக்கற்களும் நமக்குக் கிடைத்து உள்ளன. இலக்கியம் காட்டும் பல்வேறு





நடுகற்கள்



கொடுங்கை



கோபுர ஓவியத்தில் கழுகுகள் - திருக்கழுக்குன்றம்

திணைகளுக்குரிய நடுகற்களை இன்று நாம் காணும்போது தமிழ் இலக்கியத்தை மட்டுமன்றித் தமிழகம் போற்றிய ஒரு பண்பு நலனையும் சுவைக்கமுடிகிறது.

களத்தில் பொருதுபட்ட வீரர்களின் நினைவாக நிற்கும் இந்நடுகற்களில் மாண்ட வீரனது உருவம் திகழும். பெருவீரன் தன்கரத்தில் வில்லோ வாளோ அன்றிச் சூலமோ ஏந்தி வீரச்சமர் புரிவது போன்று உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அருகில் மங்கலச் சின்னங்களும் காணப்படும். சில வீரர்களுடன் துணைநின்ற நாய் போன்ற விலங்கினங்கள் கூட வீரர்களின் உருவங்களுக்கு அருகே காட்டப்பட்டிருக்கும்.

நாட்டிற்கோ, ஊருக்கோ இடுக்கண் ஏற்பட்ட காலத்துத் தன் இன்னுயிரையும் மதியாது தோள்வலி காட்டி அவ்விடுக்கண் களைந்தவனுக்கு அவன் உயிருடன் இருக்கும்போதே நினைவுச்சின்னம் ஏற்படுத்துவது தமிழக மரபுகளில் ஒன்றாகும். களத்தில் மாண்டவனுக்கும் வீரக்கல் எடுக்கப்பட்டதைப் பல சான்றுகளால் அறிகிறோம்.

### *தமிழ் இலக்கியங்களில் நடுகற்கள்*

நீத்தாரின் இறுதிச் சடங்குகளாகச் சங்ககாலத்தில் பலவகை முறைகளைப் பேணினர். இறந்தாரின் சடலங்களைத் தீயிலிட்டுச் சுடுதலும், வறிதே இடுதலும், தொடுகுழியில் புதைத்தலும் எனப் பலவகை முறைகளைப் பின்பற்றினர். இதனை மணிமேகலை சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில்

*"சுடுவோர் இடுவோர், தொடுகுழிப் படுப்போர்,*
*தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப்போர்."*
(650,651)

எனக் குறிப்பிடுகின்றது.

பெருங்கதை எனும் காப்பியம்

*....................... நடுகல் உழலையும்*
*ஆளிடு பதுக்கையும் அரிப்பிணைங்க அடுக்கமும்*

*தாளிடு குழியும் தலைசுரந்து யாத்த*
*புல்லும் பொள்ளலும் வெள்ளிடைக் களரும் (உஞ்சைக் 52:27-30)*

என நல்லடக்க முறைகளைப் பேசுகிறது. எத்தகைய ஈமச்சடங்குகளைப் பின்பற்றினும் இறந்துபட்டவருக்காக நடுகல் நாட்டி, பின்பு தெய்வமாக வழிபடும் பாங்கை அகப்புறப் பாடல்களால் நன்கறிய இயலுகிறது.

போர்க்களத்தில் இறந்து வீழ்ந்த மறவனின் உடலின் மேல் கற்களை அடுக்கி அவ்விடத்திலேயே நல்லடக்கம் செய்தனர். இவ்வாறு கற்குவைகளால் மூடப்படுவதைக் 'கற்பதுக்கை' 'கற்றிட்டை' என்றெல்லாம் குறிப்பிட்டனர். போர்க்களத்தில் அம்புபட்டு ஒரு வீரன் இறந்தால் அவனது உடலைக் கற்குவியலால் மூடி மறைத்தனர். இக்கற்பதுக்கையின் அருகிருந்த ஓர் உன்ன மரத்தின் மீது கழுகுகள் அமர்ந்து அவற்றுக்கு உணவு கிட்டாமல் போய்விட்டதற்காக வருந்தி நிற்பதாக ஒரு காட்சியை இரும்பிடர்த்தலையார் எனும் பெரும்புலவர் தம் புறநானூற்றுப் பாடலிலே காட்டுகிறார்.

"*அம்புபட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்*
*திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்*
*உன்ன மரத்த துன்னருங் கவலை*" (புறநா.3:21-23)

"*வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை*" (அகநா.157:5)

என வேம்பற்றூர்க் குமரனாரும்,

"*ஆளழித்து உயர்ந்த அஞ்சுவரு பதுக்கை*"
(அகநா.215:1-4)

என இளங்குடி குன்றநாடனும், குறிப்பிடுவதால் சங்க காலத்தில் போர்க்களங்களில் வீரர்கள் மாய்ந்த இடத்திலேயே கற்பதுக்கைகளாகிய கற்குவியல்களால் மூடி ஈமக்கடன் செய்தனர் என்பதை அறிகிறோம்.

இவ்வாறு இறந்துபட்ட வீரன் உடல்மீது குவிக்கப்பட்ட கற்பதுக்கையில் அவ்வீரனின் நினைவாக நடுகல் ஒன்றை நட்டு அதில் அவ்வீரனின் பெயரினைப்பொறித்து அதற்கு மயிற்பீலியும் மாலையும் சூட்டினர் என்பதை உறையூர் இளம்பொன் வணிகனார்

*"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி*
*மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு*
*அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து*
*இனி நட்டனரே கல்லும்"* என்று குறிப்பிடுகின்றார்.
(புறநா.264:1-4)

பகைவர்களால் ஆநிரை கவரப்படவே ஒரு வீரன் தான் ஒருவனாகவே அவற்றை மீட்டுக்கொணர்ந்தான். அவ்வாறு ஆநிரை மீட்கும்போது பகைவரது அம்புகளால் அவனது உடல் துளைபட்டுக் குறியிலக்கம் போன்று சிற்றாற்றின் கரையிலே வீழ்ந்தது. அவனது பெயர், மயிற்பீலி சூட்டிப் பிறர் இடங்கொளாத சிறு வழியிலே புடவையால் செய்த பந்தலின் கீழ் நட்டிருக்கும் கல்லிலே விளங்குவதை,

*" மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி*
*இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்*
*படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே"*

எனவடமோதங்கிழார் எனும் சங்கப்புலவர் அழகு தமிழ்ப்பாவால் காட்டுகிறார்.

புறங்காட்டிலுள்ள ஒரு நடுகல்லுக்கு வேங்கைப் பூவினைப் பனையோலையாலே அழகாகத் தொடுத்துக் கோவலர் சூட்டி மகிழ்வதாகச் சிறுகருத்தும்பியாரின் குறிப்பு உணர்த்துகிறது. கோப்பெருஞ்சோழனின் நடுகல்லைக் கண்டு பொத்தியார் பாடியது, அதியமான் நெடுமானஞ்சியின் நடுகல்லைக்கண்டு ஔவையார் அரற்றியது, மற்றும் தம் குல முன்னோர்களின் நடுகற்களை மக்கள் வழிபட்டது ஆகியன சுட்டப்படும் சங்கப்பாடல்களின் வாயிலாகப் போரில் இறந்துபட்ட வீரர்களுக்கன்றி, பலருக்கும் நடுகல் எடுக்கப்பட்டதை உணரமுடிகிறது.

ஈமச்சின்னங்களாக நடப்பட்ட நடுகற்களில் வீரர்களின் பீடும் பெயரும் அவர்தம் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளதை இன்று நமக்குக் கிடைத்துள்ள பல நடுகற்களின் வாயிலாக அறிகிறோம். பந்தலின் கீழ்க் காணப்படும் நடுகற்களுக்கு மயிற்பீலியும் மாலையும் சூட்டப்பட்டிருப்பதை முன்பே கண்டோம். இவ்வாறு போற்றப்பட்ட நடுகற்களை வணங்குதற்குரிய தெய்வமாகக்கொண்டனர்.

> "*கல்லே பரவின் அல்லது*
> *நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே*"
> (புறநா. 335:11-12)

எனக் களிறு எறிந்து தானும் வீழ்ந்து கல்லான ஒரு பெருவீரனின் நடுகல்லைப் பார்த்து மாங்குடி மருதனார் கூறும் கூற்றால் அன்றைய தமிழ்மக்கள் நடுகல்லை எவ்வளவு உயர்ந்த ஒரு தெய்வச்சின்னமாகவே வழிபட்டனர் என்பதை அறியலாம். நடுகல்லுக்குப் பலியூட்டி, நன்னீராட்டி, நெய்விளக்கு ஏற்றுவதால் எழும்புகை முகிலெனப் படர்ந்து தெருவெல்லாம் மணக்கும் சிறப்புடையது என்று மதுரை அறுவை வணிகன் இளவேட்டனாரின் புறப்பாடல் சிறப்பிக்கின்றது.

> "*புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி*
> *நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய*
> *மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்*" (புறநா. 329:2-4)

> "*தொழாதனை கழிதல் ஓம்புமதி*" (புறநா.263:3)

எனக் குறிப்பிடும் புறப்பாடல் ஒன்றில் நடுகல்லை வழிபடுவதால் கானம் மழைபெய்யக் குளிரும். வண்டுகள் மேம்படும் என்ற நம்பிக்கையுணர்வு தெரிகிறது. போருக்குச் சென்ற தன் கணவன் பகை ஒழித்து விரைந்து திரும்பிவர வேண்டுமெனத் தன்குடி முன்னோரின் நடுகற்களை வழிபடும் நங்கையின் காட்சியை அள்ளூர் நன்முல்லையார் எனும் புலவர் காட்டுகிறார்.

வணக்கத்திற்குரியனவாகக் கருதப்பட்ட நடுகற்களுக்குப் பந்தல் அமைத்து நீராட்டி, பீலியும் மாலையும் சூட்டி, தூப தீப

ஆராதனைகள் செய்து, நாட்பலியூட்டியது மட்டுமன்றிச் சிறிய கலத்தில் மதுவை வைத்தும் படைத்தனர். இதனை ஔவையார் அதிகமான் நெடுமானஞ்சியின் நடுகல்லைப் பார்த்து,

> *"... .... .... .... நடுகல் பீலி சூட்டி நார் அரி*
> *சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ"*
> (புறநா.232:4-5)

என வருந்தும் பாடலால் அறியலாம். பின்னாளில் வடிக்கப்பட்ட பல நடுகற்களில் வீரனின் உருவத்திற்கு அருகே சிற்பமாகக் காட்டப்பட்டுள்ள கலன்கள் மதுக்கலங்களே எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

### *தொல்காப்பியம் காட்டும் படிம நெறிகள்*

> *"காட்சி கால்கோ ணீர்ப்படை நடுதல்*
> *சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தலென்*
> *றிருமூன்று வகையிற் கல்லொடு புணர"*

என்பது தொல்காப்பிய சூத்திரம். இதனை,

**காட்சி**: கல்செழு சுரத்திற் சென்று கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டி பின்னர்க் கற்காண்டலும் என இருவகையாம்.

**கால்கோள்**: கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருதற்குக் கால்கோடலும் என இருவகையாம்.

**நீர்ப்படை**: கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும் பின்னர் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டுதலுமென இருவகையாம்.

**நடுதல்**: கல்லினை நடுதலும், அக்கல்லின்கண் மறவனை நடுதலுமென இருவகையாம்.

**சீர்த்தகு மரபிற் பெரும்படை**: அவன் செய்த புகழைத் தரும்படி பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ்சிறப்புகளைப் படைத்தலுமென இருவகையாம்.

**வாழ்த்தல்:** கால்கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச்செய்து வாழ்த்தலும் பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலுமென இருவகையாம் எனப்பிரித்து விளக்கம் கூறுகிறார். நச்சினார்க்கினியர், பீடங்கள் வகுத்துத் தீபமேற்றி வழிபடுமாறு செய்யும் நிகழ்ச்சியை மேற்கோள் காட்டுகிறார். நாட்டிய கல்லிற்குக் கோயிலும், மதிலும், வாயிலும் அமைத்துச் சிறப்புகள் செய்வதே 'பெரும்படை' என்று வலியுறுத்துகிறார்.

'சீர்த்தகு மரபின் பெரும்படையாவது நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல்;அஃது இற்கொண்டு புகுதல் என்று உரைத்த துறை'என்று இளம்பூரணர் உரை கூறுகின்றது.

> " *வேத்தமருள் விளிந்தோர் கல்என*
> *ஏத்தினார் துவன்றி இற்கொண்டு புக்கன்று*"
> (பொதுவியல்:14)

என்பத புறப்பொருள் வெண்பாமாலை கொளு. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது நடுகற்களுக்குக் கோயிலெடுத்து வழிபட்ட செய்தி உறுதிப்படுகிறது. இவ்வழக்கே பின்னாளில் பள்ளிப்படைக் கோயில்களாக வளர்ச்சிபெற்றது.

*பள்ளிப்படைகள்*

வீரர்கள் மறைந்த இடங்களில் அவர்கள் நினைவாக எடுக்கப்பெற்ற நடுகற்கள் மற்றும் அவற்றினைக் காக்கும் பந்தலாகிய கோயில்களில் தொடங்கி, பின்னாளில் இறந்தவர்களின் புனித அஸ்தியைப் புதைத்தவிடத்து அத்த கிருஹம் அல்லது பள்ளிப்படை எனும் கோயில்கள் எழுப்பும் மரபு வளரலாயிற்று. இவ்வாறு எடுக்கப்பெறுகின்ற கோயில்களில் இலிங்கப்பிரதிட்டை செய்து, சிவாலாயங்களுக்குரிய எல்லா அங்கங்களுடன் வழிபடத்துவங்கினர். பல்லவ மன்னன் கம்பவர்மனின் எட்டாம் ஆண்டில் கங்கமன்னனான பிருதிவீபதி போர்களத்தில் மாய்ந்துவிட அவனுடைய மகன் இராசாதித்த மகாதேவன் தன் தந்தையைப் பள்ளிப்படுத்தவிடத்து ஆலயமும்

அத்த கிருகமும் சோழபுரத்தில் எடுப்பித்தான் என்ற வரலாற்றுக் கல்வெட்டால் பல்லவ பேரரசர்கள் காலத்தில் தமிழகத்தில் ஒரு கோயிலுக்குரிய அங்கங்களோடு பள்ளிப்படைக் கோயில்கள் எடுக்கப்பெற்றன என அறிகிறோம்.

திருப்புறம்பயத்தில் உள்ள கச்சியாண்டவன்கோயில் என்ற கோயில் ஒரு பள்ளிப்படைக்கோயிலே என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் அவர்களின் கருத்தாகும்.

## *பள்ளிப்படை கோதண்ட இராமேசுவரம்*

தஞ்சையில் சோழராட்சியைத் தோற்றுவித்த விஜயாலய சோழனின் மறைவிற்குப் பின்பு (கி.பி.881இல்) 'இராஜகேசரி' என்ற பட்டம் பூண்டு மாமன்னனாக அரசோச்சத் துவங்கியவன் முதலாம் ஆதித்தசோழனாவான். இவனுக்குக் கோதண்டராமன் என்ற மற்றொரு பெயர் இருந்தமையைக் கன்னியாகுமரிக் கல்வெட்டு (T.A.S. Vol. III No. 34 verse 55) கூறுகின்றது.

சித்தூர் ஜில்லா திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டைமான் பேராற்றூரில் கி. பி. 907ஆம் ஆண்டில் ஆதித்தசோழன் இறந்தான் என கல்வெட்டுகள் இயம்புகின்றன. (S. I. I. Vol. III No. 142) இதன் காரணமாகவே "தொண்டைமான் ஆற்றூர்த் துஞ்சின உடையார்" என கல்வெட்டுகள் பேசும். அவ்வூர் தற்போது "தொண்டை மானாடு" என வழங்கப்பெறுகின்றது.

இவ்வூரில் இப்பெருவேந்தனது மகனான முதலாம் பராந்தகசோழன் தன் தந்தையைப் பள்ளிப்படுத்தவிடத்து (அஸ்திகலசம் புதைத்தவிடத்து) ஒருகோயில் எடுப்பித்தான். அக்கோயில் "பள்ளிப்படை வாகீசுவரபட்டாரர் ஸ்ரீ கோதண்ட ராமேசுவரமாகிய ஆதித்தேசுவரம்" என அழைக்கப்பெற்றது. சோழர்காலக் கோயில்களுள் குறிப்பிடத்தக்கதாகத் திகழும் இப்பள்ளிப்படைக்கோயில் தற்போது ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் காளத்தி (காளகஹஸ்தி)யிலிருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ள தொண்டை மண்டலத்துத் திருவேங்கட கோட்டத்து ஆற்றூர் நாட்டு பேராற்றூர் அல்லது தொண்டைமான் ஆற்றூர் என அழைக்கப்பெற்றதைச் சாசனங்கள் குறிக்கின்றன.

கோதண்ட ராமேசுவரம் எனும் இக்கோயிலில் உள்ள பராந்தகசோழனின் 34ஆம் ஆட்சியாண்டு (கி.பி.941) கல்வெட்டில் பின்வருமாறு விவரிக்கப்பெற்றுள்ளது.

"ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு முப்பத்தினாலாவது திருவேங்கட கோட்டத்து ஆற்றூர்நாட்டு தொண்டைமான் பேராற்றூர் சபையோமும் நகரத்தோமும் பள்ளிப்படை வாகீஸ்வர பண்டித படாரர் ஸ்ரீ கோதண்டராமீஸ்வரமாகிய ஆதித்தேஸ்வரத்து ஆள்வார்க்குப் புரட்டாசித்திங்கள் திருக்கேட்டை முதல் எதிரெழு நாளும் திருநட்சத்திரமாகிய திருச்சதையத்தன்றுந் திருஉத்ஸவஞ் செய்வதற்கும் போஜனத்துக்கும் பள்ளிப்படை வாகீஸ்வர பண்டித படாரர் தொண்டைமான் பேராற்றூர் சபையோமும் நகரத்தோமும் வழி சந்திராதித்தவற்குத் தர்மஞ் செய்வதாக எங்கள் வழி வைத்தபொன் ......... " என்று தொடர்கின்றது.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் அறக்கட்டளையாக 105கழஞ்சு பொன்னும் ஆண்டு வருவாயான 4000 காடி நெல்லும் முதலீடாக வைத்துத் திருவிழாக்கள் எடுப்பதற்கான குறிப்புகளைக் கூறுகின்றது. பள்ளிப்படை கோயில்கள் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பெற்றதோடு மற்ற ஆலயங்களில் நிகழ்வது போன்று எல்லாவகையான சிறப்பு பூஜைகள் ஆகியவை நிகழ்த்தப்பெற்றன என்பதை இதனால் அறிகிறோம்.

ஆதித்தேஸ்வரம் எனும் இப்பள்ளிப்படைக் கோயில் இருதளமுடைய கற்றளியாகத் திகழ்கின்றது. கருவறையும் அர்த்தமண்டபமும் எழிலுடன் திகழ்கின்றன. கருவறையில் உருண்டை வடிவான இலிங்கத் திருமேனி உள்ளது. கருவறையின் வெளிப்புறம் தேவ கோஷ்டங்கள் உள்ளன. இரண்டாம் தளத்தைச் சாலைகளும் கூடங்களும் அணிசெய்கின்றன. சதுர வடிவமான கிரீவமும் சிகரமும், உருண்டை வடிவான ஸ்தூபியும் பின்னாளில் புதுப்பிக்கப்பெற்றவையே. கிரீவத்தின் அடித்தளத்தில் நான்கு மூலைகளிலும் ரிஷபங்கள் உள்ளன. இதுவே சோழமன்னர்கள் வரிசையில் அவர்களுக்காக எடுக்கப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்களில் காலத்தால் முந்தியதாகும்.

இங்கு முன்னால் சுட்டப்பெற்ற கல்வெட்டை ஆழ்ந்து நோக்கும்போது "பள்ளிப்படை வாகீசுவர பட்டாரர் ஸ்ரீ கோதண்டராமேசுவரமாகிய ஆதித்தேசுவரத்து ஆழ்வார்" என்ற சொற்றொடர் குறிக்கப்பெற்றுள்ளதைக் காணலாம். பள்ளிப்படையாகத் திகழும் இந்தக் கோயிலில் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ள "ஆதித்தேசுவரத்து ஆழ்வார்"எனும் சிவலிங்கத் திருமேனிக்குப் "பள்ளிப்படை வாகீசுவரபட்டாரர்" என்ற பெயர் திகழ்ந்ததையும் காண்கிறோம். "வாகீசுவரர்" என்ற சிவனாரின் திருநாமம் இத்தகைய பள்ளிப்படைகளைப் பேணிக்காத்த லகுளீச பண்டிதர்கள் சிறப்பாக வழிபட்ட சிவமூர்த்தங்களுக்குரிய பெயராகத் திகழ்ந்தது என்பதைச் சோழமண்டலத்தில் காணும் பல்வேறு சான்றுகளால் அறிகிறோம். அவற்றை விரிவாகப் பிற்பகுதியில் காண்போம்.

## *மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரம்*

தொண்டை மண்டலத்தில் நீவா எனும் பொன்னி ஆற்றின் கரையில் சித்தூருக்குத் தென்மேற்காக 26 கி. மீ. தொலைவிலும், வடஆற்காடு மாவட்டம் திருவல்லத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் வடக்காகவும் திகழும் சிற்றூர் ஆகும். இவ்வூரில் தற்போது "சோழேச்சுரம்" என்று வழங்கப்படும் திருக்கோயிலே சோழமன்னன் அரிஞ்சயனுக்கு மாமன்னன் முதலாம் இராஜராஜன் எடுத்தப் பள்ளிப்படையாகும்.

சிவஞானச்செம்மல் கண்டராதித்த தேவருக்கு பின்பு அவர் தம்பியான அரிஞ்சயன் சோழர்தம் குலமுடி பெற்றார். இவர் பராந்தக சோழனின் மூன்றாம் புதல்வர். இவர் தன் தமையன் இராஜாதித்த சோழன் சோழநாட்டில் வடபுலத்தில் இருந்தபோது அவருக்குதவியாக மலைய மாநாட்டின் தலைநகராகிய திருக்கோவலூரில் பெரும்படையுடன் தங்கி இருந்தவர் என்பதைக் கல்வெட்டுகள் செப்பும். (Ep. Indica Vol. VII page 141) இப்பெருவேந்தன் வடஆர்க்காடு மாவட்டம் ஆற்றூரில் இறந்தனன். இதனால் இவனை ஆற்றூர் துஞ்சின தேவர் எனக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. (S.I.I. Vol. III Nos. 15, 16 and 17)

இவ்வாறு தமிழகத்தின் வடபுலத்தில் உயிர்துறந்த இம்மன்னனுக்கு இவனது பெயரனான முதலாம் இராஜ ராஜசோழன் மேற்பாடியில் அரிஞ்சயேச்சரம் எனும் பள்ளிப்படைக் கோயிலொன்றை எடுப்பித்தான். அதுவே தற்போது நாம் அவ்வூரில் காணும் "சோழச்சுரம்" எனும் கோயிலாகும்.

இக்கோயிலில் உள்ள இராஜராஜனின் கல்வெட்டு, "ஸ்ரீ கோ ராஜ ராஜ ராஜகேசரிவர்மரான ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 29-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப்பாடி நாட்டு மேற்பாடியான ராஜாச்சரியப் புரத்து ஆற்றூர் துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எடுப்பித்தருளின திருவரிஞ்சயேஸ்வரத்து மகா தேவர்க்கு... " என்று கூறுவதால் மாமன்னன் இராஜராஜன் தன் பாட்டனுக்கு இப்பள்ளிப்படை எடுத்தான் என்பது தெரியவருகிறது.

இதே கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு இப்பள்ளிப்படைக் கோயிலுக்கு அந்த நகரத்தார் கொடுத்த 5136½ குழி நிலக்கொடையைப் பற்றி விவரிக்கின்றது. இறையிலியாக அளிக்கப்பெற்ற செய்தியும் விவரிக்கப் பெற்றுள்ளது.

இம்மன்னனின் மகனான முதலாம் இராஜேந்திரசோழனின் ஆளுகையின் போது இப்பள்ளிப்படைக்கோயில், அதனுடன் இணைந்த லகுளீச மடமொன்றின் தலைவரான லகுளீச பண்டிதரின் மேற்பார்வையில் செயல்பட்டதை விவரிக்கின்றது. இச்சான்றாலும் பள்ளிப்படைக் கோயில்கள் லகுளீச சித்தாந்திகளின் நிருவாகத்தில்தான் இருந்தன என்பது தெளிவாகின்றது.

***இராஜராஜசோழன் நினைவாலயம்***

**(சிவபாதசேகரதேவர் திருமாளிகை)**

தமிழக வரலாற்றில் ஈடிணையற்ற பெருவாழ்வு வாழ்ந்தவன் மாமன்னன் இராஜராஜனாவான். கி. பி. 985இல் முடிசூடி 1014வரை செங்கோலோச்சிய இப்பெருமன்னனின் மறைவுக்குப்

பிறகு ஒரு நினைவாலயம் எழுப்பப்பெற்றுப் பின்னர் கால வெள்ளத்தில் அது அழிந்தது என்பதனை எஞ்சியுள்ள சில சாசனத் தடயங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

சோழப்பெருமன்னர்களின் கோ நகரமான பழையாறை தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கருகில் பல சிற்றூர்களாகச் சிதைவுபெற்றுத் திகழ்கிறது. கீழப்பழையாறை என்ற இன்றைய கிராமத்தினை அடுத்த ஒரு சிற்றூர் உடையாளூர் என்பதாகும். இவ்வூர் பண்டைய முடிகொண்ட சோழபுரமாம் பழையாறையின் ஒரு பகுதி என்பதனை அவ்வூரின் புவி அமைப்பே தெளிவாகக்காட்டிடும். இன்று அவ்வூரில் ஒரு பழமையான சிவாலயம் உள்ளது. தற்போது இது புதுப்பிக்கப்பெற்றுப் புதுமெருகுடன் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தவிர முடிகொண்டான் ஆற்றங்கரையின் பல இடங்களில் இடிபாடுள்ள கோயிற்பகுதிகளும், சிவலிங்கங்களும் காணப்பெறுகின்றன. இவ்வாறு பழமையின் எச்சங்களாகத் திகழ்ந்த கோயிற் கற்களையும், தூண்களையும் எடுத்து வந்து தற்போது புதிய கோயில்கள் எடுத்துள்ளனர். அவ்வாறு கொணர்ந்த தூண்களுள் இரண்டு இவ்வூர் பால்குளத்தம்மன் கோயிலின் முன்மண்டபத்தில் அண்மைக்காலத்தில் வைக்கப்பெற்றன. அவற்றுள் ஒரு வட்டத்தூணில் கல்வெட்டொன்று பொறிக்கப்பெற்றுள்ளது.

**உடையாளூர் - பால்குளத்தம்மன் கோயில் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகல புவந சக்ரவத்திகள் ஸ்ரீகு
2. லோத்துங்க சொழதேவற்கு யாண்டு நாற்ப
3. த்திரண்டாவது ஸ்ரீ சிவபாத சேகரமங்கலத்து
4. எழுந்தருளி நின்ற ஸ்ரீ ராஜராஜ தேவராந ஸ்ரீ
5. சிவபாதசேகர தேவர் திருமாளிகை முன்பில்
6. பெரிய திருமண்டப முன்.... லடுப்பு ஜி

7. நித்தமையில் இம்மண்டபம் எடுப்பி

8. தார் பிடவூர் பிடவூர் வேளான் வேளிர்

9. அரிகேசவனாந கச்சிராஜர் காக இவ்வூர்

10. (நா)யகம் செய்து நின்ற ஜயசிங்க குலகா

11. (ல) வளநாட்டு குளமங்கலநாட்டு சா

12. (த்த) மங்கலத்து சாத்த மங்கலமுடை

13. (யா)ன் நம்பிடாரன் நாடறி புகழன் இ

14. ... டன் விரதங்கொண்டு செய்தார் இ

15. ர்பிடாரர்களில் ராஜேந்திர சோழனுக்

16. ... நாயகநான ஈசான சிவரும் தேவ

17. ... ய மாந அறங்காட்டிப் பிச்சரும்.

இக்கல்வெட்டால் முதலாம் குலோத்துங்கசோழதேவரின் நாற்பத்தி இரண்டாவது ஆட்சியாண்டான கி.பி. 1112-இல் சிவபாதசேகரமங்கலத்தில் சிவபாதசேகரதேவர் திருமாளிகை இருந்ததாகவும், அதில் சிவபாதசேகரன் எனும் இராஜராஜனின் படிமம் இருந்ததாகவும், அந்தத் திருமாளிகையின் பெரிய மண்டபத்தின் முன்பகுதி சிதைந்ததால்(க்ஷீணித்தமையால்) அம்மண்டபத்தைப் பிடவூர் வேளான் வேளிர் அரிகேசவனான கச்சிராஜர் என்பவர் மீண்டும் எடுத்ததாகக் கூறுகிறது. அவருக்காக அவ்வூர்நாயகம் செய்து நின்ற சாத்தமங்கலமுடையான் நம்பிடாரன் நடாறிபுகழன் விரதங்கொண்டு செய்தார் என்ற குறிப்பும், ஈசான சிவர் அறங்காட்டிப் பிச்சர் என்பவர் அதற்குத் துணை நின்றமையும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

முதலாம் இராஜேந்திரசோழர் காலத்தில் இவ்வாலயம் (சிவபாதசேகரதேவர் திருமாளிகை) எடுக்கப்பெற்றிருக்கலாம்



உடையாளூர்க் கல்வெட்டு

என்பதும், பின்பு முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பணி செய்யப்பெற்றதும் அறியமுடிகின்றது. உடையாளூர் எனும் இவ்வூர் பண்டு ஸ்ரீ சிவபாதசேகரமங்கலம் என அழைக்கப்பெற்றது என்பதும் அறிகிறோம். இத்தூண் இன்று இடம்பெயர்ந்து பால்குளத்தம்மன் கோயிலுக்கு வந்தது போன்று, அத்திருமாளிகையில் இடம்பெற்றிருந்த இராஜராஜன் மற்றும் லோகமாதேவி ஆகியோருடைய கற்படிமங்கள் தற்போது இவ்வூர் சிவாலயத்து முகப்பில் வைக்கப்பெற்றுள்ளன.

இக்கல்வெட்டு மற்றும் பிரதிமங்கள் சான்றுகொண்டு நோக்கும்போது இங்குக் குறிப்பிடப்பெறும் திருமாளிகை மா மன்னன் இராஜராஜதேவருக்காக எடுக்கப்பெற்ற நினைவு மாளிகை என்பது உறுதி.

*பள்ளிப்படை பஞ்சவன்மாதேவிச்சரம்*

சோழப்பெருமன்னர்களின் தலைநகரமான பழையாறை நகரின் ஒரு பகுதியான பட்டீச்சரத்தில் "இராமநாதன் கோயில்" என மக்கள் அழைக்கும் கோயிலொன்று முடிகொண்டான் ஆற்றங்கரை ஓரத்தில் உள்ளது. இதுவே வரலாற்றுச் சிறப்புமிக்க "பஞ்சவன் மாதேவிச்சரம்" எனும் பள்ளிப்படைக் கோயிலாகும். சோழப்பெருமன்னன் இராஜராஜனின் தேவியான பஞ்சவன்மாதேவி மறைந்த பிறகு அம்மாமன்னனின் மகனான இராஜேந்திரசோழன் தன் சிற்றன்னைக்காக எடுத்ததே அழகிய கற்றளியான இப்பள்ளிப்படைக் கோயிலாகும்.

பஞ்சவன்மாதேவீச்சரம் அமைந்துள்ள பழையாறை நகரம் சோழப்பெருமன்னர்களின் தலைநகராகவும் சோழ அரசகுடும்பத்தினர் இறுதிவரை வாழ்ந்த இடமாகவும் இருந்த பெருமை உடைய நகரமாகும். இப்பெருநகரம் தற்போது கீழப்பழையார், பட்டீச்சரம், தாராசுரம், ஆரியப்படையூர், பம்பப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சோழன்மாளிகை, நாதன்கோயில் என்ற பெயர்களில் தனித்தனிச் சிற்றூர்களாய்த் திகழ்கின்றன. தமிழகத்தின் தனிக் கலாச்சாரப் பெருமையை உருவாக்கிய சோழப்பெருமன்னர்கள் வாழ்ந்த

வரலாற்றுச் சின்னங்கள் பல அழிந்தபோதும் எஞ்சியுள்ள சில திருக்கோயில்களும் மற்ற சான்றுகளும் பழமையின் பெருமையை நம் கண்முன் கொணர்கின்றன.

பண்டைய பழையாறை மாநகரின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த பட்டீச்சரம் எனும் சிற்றூரில், சிறப்பாகத் திகழ்வது தேனுபுரீச்சரர் திருக்கோயிலும், திருச்சத்தி முற்றமுமாகும். இங்குதான் முறையே ஞானசம்பந்தர் முத்துப்பந்தல் கண்டதாகவும், ஒளிப்பிழம்பாய் அகிலங்களை வருத்திய சிவபெருமானின் அனலைச் சக்தி தழுவிச் சாந்தப்படுத்தியதாகவும் சைவக் காப்பியங்கள் உரைக்கின்றன. இவ்விரு திருக்கோயில்களுக்கும் மேற்காக அரை கி. மீ. தொலைவில் அமைந்திருப்பதே பஞ்சவன்மாதேவீச்சரமாகும்.

*பஞ்சவன்மாதேவி*

சோழப்பெருமன்னர்கள் வரிசையில் திலகமெனத் திகழ்ந்தவன் மாமன்னன் முதலாம் இராஜராஜனாவான். இப்பெருந்தகையின் மனைவியருள் ஒருத்தியே பஞ்சவன்மாதேவி. இத்தேவி சேரர்குலக் குறுநில மன்னர்களுள் ஒருவனாகிய பழுவேட்டரையரின் மகளாவாள். திருச்சி மாவட்டம் உடையார்குடி தாலுகாவிலுள்ள பழுவூரே இச்சிற்றரசர்களின் ஊராகும். மேலப்பழுவூர் திருக்கோயிலில் உள்ள முதலாம் இராஜராஜனின் 27ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இத்தேவியை அவனி கந்தர்ப்புரத்து பழுவூர்தேவனாரின் (பழுவேட்டரையரின்) திருமகள் எனக்கூறுகிறது. பஞ்சவன்மாதேவி என்ற பெயரில் மதுராந்தக உத்தமசோழர் மற்றும் ராஜேந்திரசோழன் போன்ற மன்னர்களின் மனைவியர் இருந்தபோதும் இத்தேவியைப்போல் சோழர்கள் வரலாற்றில் யாரும் புகழடையவில்லை. பஞ்சவன்மாதேவி அளித்த அறக்கொடைகளும் சாதனைகளும் மிகப்பலவாகும். நினைவுகூரத்தக்க வகையில் புகழ்மிகுந்து திகழ்ந்ததால் சோழநாட்டின் ஓர் ஊருக்கே இவளது பெயரால் பஞ்சவன்மாதேவி சதுர்வேதி மங்கலம் எனப்பெயர் மாற்றம் ஏற்பட்டது.

இத்தேவியைப் பற்றித் தஞ்சைப்பெருங்கோயில் கல்வெட்டுகள் தவிர, இராஜராஜசோழனது 7 கல்வெட்டுகள் பிற இடங்களில் மிகச்சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. இவை திருமால்புரம், திருவிடைமருதூர், திருப்புகலூர், மேலப்பழுவூர் போன்ற இடங்களில் உள்ளன. தஞ்சை ராஜராஜேஸ்வரம் கல்வெட்டுகள் முறையே தஞ்சை அழகர், உமாபரமேசுவரி, கணபதி பதஞ்சலிமுனி ஆகிய செப்புத்திருமேனிகளை இத்தேவி செய்தளித்ததாகக் குறிப்பிடுகின்றன. இவை மட்டுமின்றித் திருவிடைமருதூரில் உள்ள இராஜராஜனின் 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில் பஞ்சவன்மாதேவி செய்தளித்த "உமாசகிதர்" தங்கத்திருமேனி பற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்புகலூர்க் கல்வெட்டால் இத்தேவியின் பிறிதோர் பெயர் "நக்கன் தில்லையழகி" என அறியமுடிகிறது. மேலும் இத்தேவியின் பணிப்பெண் ஒருத்தி திருப்புகலூர் இறைவனுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட தாமரை மலர்களை அளித்தாள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு எண்ணிலா இறைப்பணிகள் செய்த இத்தேவியின் தொண்டும் ஆற்றலும் மாமன்னன் இராஜேந்திரசோழனால் நினைவாலயம் எடுக்கும் அளவு தூண்டிநின்றது என்பது மிகையல்ல!

### *பஞ்சவன்மாதேவீச்சரம்*

இத்திருக்கோயிலில் காணப்படும் இராஜேந்திர சோழனின் கல்வெட்டில் இதனைப் "பழையாறையான முடிகொண்ட சோழபுரத்துப் பள்ளிப்படை பஞ்சவன்மாதேவீச்சரம்" என்றே குறிப்பிடுகின்றது. வரலாற்றில் அழியா இடம்பெற்றுள்ள இக்கல்வெட்டு, இம்மன்னனின் தானைத் தளபதி அருண்மொழியான உத்தமசோழ பிரமமாராயன் பற்றியும், சைவமடங்களுள், ஒன்றான லகுலீசமடம் மற்றும் இதன் தலைவரான லகுலீசபண்டிதர் பற்றிய பல சுவையான வரலாற்றுத் தகவல்களைச் சுமந்து நிற்கிறது.

கலை அம்சத்தால் வியத்தகு சிறப்புக்கள் பல பெற்றுள்ள இத்திருக்கோயிலில் சோழர்கள், பல்லவர்கள்,

பழுவேட்டரையர்களின் தனித் தனிக் கலைமணம் ஒருங்கே சேர்ந்து புகழ் மணம் பரப்புகின்றது. திருச்சுவரின் தேவகோஷ்டங்களில் உள்ள விநாயகர், பிச்சைதேவர், ஆலமர்ச்செல்வி, லிங்கோத்பவர், பிரமன், துர்க்கை, அர்த்தநாரி, கங்காதரர் போன்ற சிற்பங்களின் அழகு இராஜேந்திரசோழனின் தனி முத்திரையாகும். இரண்டு சிவபெருமானின் கோல நிலைகளில் பல்லவர்களின் கலைமணம் கமழ்கிறது. இவை கி.பி.710-715வரை ஆண்ட இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் காலத்தில் அவனுத கடிநகரான பழையாறையில் இடம் பெற்றிருந்த சிலைகளாய் இருந்திருக்கலாம்.

கருவறையின் அர்த்தமண்டபத்தில் உள்ள நந்தியும், கலைத்தூண் ஒன்றும் முழுமையான பழுவேட்டரையர்களின் கலைப்படைப்பாகும். இந்த நந்தியும் சிம்மத்தூணும் மேலப்பழுவூரில் உள்ளது போன்றே காணப்படுகின்றன. இவை இரண்டும் சோழநாட்டில் உள்ள சோழர்கள் கலைப்பாணியில் இருந்து மாறுபட்ட சிற்பங்களாகும். பழுவேட்டரையின் மகள் என்பதால் இத்தேவியின் பிறந்த மண்ணின் கலைமமணமும் கருவறையில் வீசுகின்றது.

கீழப்பழையார்- சோமநாதர் ஆலயம், முழையூர்-வடதளி, திருமத்தடிமேற்றளி, பட்டீச்சரம்-தேனுபுரீச்சுவரர் திருக்கோயில், திருச்சக்திமுற்றம், நந்திவனம், பாற்குளம், தாராசுரம் - இராஜராஜேச்சரம், நாதன்கோயில் - நந்திபுர விண்ணகரம், (திருமங்கை மன்னனால் மங்களாசாசனம் பெற்றது) கோனப்பெருமாள் கோயில் (கோபிநாதன் கோயில்) போன்ற திருக்கோயில்கள் இன்னும் சிறப்பாக உள்ளன.

இவை மட்டுமின்றி, தஞ்சைக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பழையாறை தென்தளி, அரை எருமான் தளி, முள்ளூர் நக்கன் தளி, சங்கீச்சரம் போன்ற திருக்கோயில்களும் திருநரையூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பழையாறை அருமொழிதேவீச்சரமும் இரண்டாம் இராஜராஜனின் பள்ளிப்படையான இராஜகம்பீச்சரமும் (தாராசுரம் கல்வெட்டு) முற்றிலும் அழிந்துபட்ட திருக்கோயில்களாகும்.

இவ்வாறு மறைந்த திருக்கோயில்களின் பட்டியலில் இடம்பெறவிருந்த பஞ்சவன்மாதேவீச்சரம் அண்மைக்காலப் பராமரிப்புகளால் ஓரளவு காக்கப்பெற்றுள்ளது.

### *இரட்டைக்கோயில்*

தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் திருக்கண்டியூர் எனும் தலமொன்றுள்ளது. இது சிவனாரின் அட்ட வீரங்களுள் ஒன்று. வீரட்டானமாம் கண்டியூர் சிவாலயத்திலிருந்து தென்மேற்காக இவ்வூரின் பிடாகையான (Hamlet) இரட்டைக்கோயில் எனும் சிற்றூர் உள்ளது. இரட்டைக்கோயில், இதனையடுத்த செங்கமேடு, வீரசிங்கம்பேட்டை ஆகிய ஊர்கள், முன்பு இணைந்ததொரு பெருநகரமாகத் திகழ்ந்தது என்பதனை அண்மைக்கால ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. வரலாற்றுச் சிறப்புடைய நந்திபுரநகரம் இதுதான் என நிருபணமாகியுள்ளது. "நந்திபுரத்து ஆயிரத்தளி" எனும் ஆயிரம் சிவலிங்கங்கள் உள்ள திருக்கோயில் இங்கு இருந்ததால் பின்னாளில் இவ்வூர் "ஆயிரத்தளி" என்றே அழைக்கப்படலாயிற்று. பல்லவர், சோழர், பாண்டியர் போற்றிய அரண்மனை ஒன்றும் இங்கு திகழ்ந்தது என்பதையும் அறிகிறோம்.

ஆயிரத்தளி எனச் சிறப்புப்பெயர் பெற்ற இவ்வூரில் இரண்டு திருக்கோயில்கள் திகழ்ந்தன என்பதைக் கண்டியூர் வீரட்டத்து மங்களாம்பிகை கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. அக்கோயில்கள் முறையே ஸ்ரீவானவன் மாதேவீச்சரம் என்றும், ஸ்ரீபராந்தகதேவேச்சரம் என்றும் பெயருடையவை என்பதை அக்கல்வெட்டுகள் சுட்டுகின்றன. வரலாற்றுச் சிறப்புடைய அக்கல்வெட்டுகளையும், அவை கூறும் செய்திகளையும் முதலில் அறிந்துகொண்ட பின்பு அவ்விரு கோயில்களும் எதற்காக எந்த இடத்தில் எழுப்பப்பெற்றவை என்பதையும், அவை பின்னாளில் பெற்ற மாற்றங்கள் என்ன என்பதையும் காண்போம்.

முதற்கல்வெட்டு

**(மங்களாம்பிகைக் கோயில் கருவறைக் கிழக்குச்சுவரில் உள்ளது)**

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜாதிராஜன்ய மகுடஸ்ரேணி ரத்னேஷுசாசனம் ஏதத்

2. ராஜேந்திரசோளஸ்ய பரகேசரி வர்மண: திருமன்னிவளர

3. இருநில மடந்தையும் போர்செயப் பாவையும்

4. சீர்த்தனிச் செல்வியும் தன்பெருந்தேவியராகி இன்புறு நெடுதுயல் லூழியுள்

5. இடைதுறை னாடும் துடர்வன வேலிப் படர்வன வாசியும் சுள்ளிச்

6. சூழ்மதிள் கொள்ளிப்பாக்கையும் னண்ணற்கருமுரன் மண்ணைக்

7. கடக்கமும் பொருதட ரீழத்தரைசர்தம் முடியும் ஆங்கவன்

8. தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர்

9. வைத்த சுன்தரமுடியும் இன்திராரமும் தென்றிசை ஈழமண்டலம்

10. முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையில் சூடும் குலதன

11. மாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்தொல்

12. பெருங்காவல் பல பழன்தீவும் மாப்பெருள் தண்டாற் கொண்ட கோப்பர

13. கேசரி வருமரான ஸ்ரீ ராஜேந்திர சோள தேவற்கு யாண்டு ஆறாவது ளித்தவிநோதவள

14. ளாட்டுக்கிழார் கூற்றத்து ஆயிரத்தளிபாற் ஸ்ரீ வானவன் மாதே விஸ்வரமுடையார்

15. தேவதானம் இன்னாட்டு முடிச் சோழனாட்டு பட்டகன் கடம்பூர் உள்ளிறங்கல் நிலம் அஞ்சே

16. முக்காலே னான்கு மாவின் கீழ் முக்காலினால் காணிக்கடன் ராஜ கேசரியால் ஆண்டுவர

17. நெல்லு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று அங்கலனே பதக்கு னானாழி இன்

18. நிவன்தஞ் செய்து கல்லில் வெட்டிவிக்க வென்று உய்யக்கொண்டார் வளநாட்டு

19. வெண்ணாட்டு பிரமதேயம் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து இராமன் அருமொழியாந

20. உத்தம சோழ பிரமமாராயன் சொல்ல உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோளதேவர் ……… கைத்து

21. நன்தேவன் குற்றியனும் சங்கரன் சாத்தனும் கண்காணியாக இருந்து கல்லில்

22. வெட்டிவித்தபடி உடையார்க்கு ஸந்தி ஒன்றுக்கு திருவமுது அரிசி நானாழியாக

23. மூன்று சன்திக்குத் திருவமுதரிசி குறுணி னானாழியும் உமா……… தர்க்கு

24. ஸந்தி ஒன்றுக்குத் திருவமுதரிசி குறுணி நானாழியும் அ

25. … … … … … … …

26. ன்றுக்கு திருவமுதரிசி பதக்குக்கு அஞ்சிரண்டு வண்ண

27. த்தால் நெல்லு ஐங்குறுணியும் உடையார்க்கு ஸந்தி ஒன்றுக்கு கறிய

28. முதுக்கு நெல்லு முழக்காக மூன்று ஸந்திக்கு நெல்லு

29. இருநாழி உழக்கும் ஸந்தி ஒன்றுக்கு பருப்புமுது ஆழாக்காக மூன்று

30. ஸந்திக்கு உழக்காழாக்கும் பருப்பு நாழிக்கு நெல்லு முன்னாழியாக

31. நெல்லு நாழி ஆழாக்கும் ஸந்தி ஒன்றுக்கு நெய்யமுது இரு செவிடரையாக மூன்று

32. ஸந்திக்கு நெய்யமுது ஆழாக்கே இரு செவிடரையும் நெய் நாழிக்கு

33. நெல்லுத்தூணியாக நெல்லு அறுநாழியும் ஸந்தி ஒன்றுக்கு தயிரமுது உரியாக

34. மூன்று ஸந்திக்குத் தயிரமுது நாழி உரிக்கும் (இ) ரட்டி நெல்லு முன்னாழியும்

35. ஸந்தி ஒன்றுக்கு அடைக்காயமுது நாலுக்கும் இலையமுது எட்டுக்கும் ஆக

36. நெல்லு முழக்காக மூன்று ஸந்திக்கு இருநாழி உழக்கு திருவமுது கறியமுது அ(ம்)

37. ஸந்தி ஒன்றுக்கு அடைக்காயமுது நாலுக்கும் இலையமுது எட்டுக்கும் ஆக

38. இரவு பகல் எரியுந் திரு நொந்தா விளக்கு இரண்டுக்கு எண்ணை உழக்காழாக்கும்

39. சிறுகாலை எரியும் ஸந்தி விளக்கு இரண்டும் உச்சியம் போதெரியும் ஸந்தி விளக்

40. கிரண்டும் இரவெரியும் ஸந்தி விளக்கு நாலும் ஆக ஸந்தி விளக்கு எட்டுக்கு எண்ணை உழக்கும்

41. ஆக நாள் ஒன்றுக்குத் திருவிளக்கு எண்ணை உரி ஆழாக்குக்கு எணணை நாழிக்கு நெல்லுத்

42. தூணியாக நெல்லுப் பதக்கு நானாழியும் ஆகத் திருச்செண்டைக்கும் நெய் எண்ணை தயிர்

43. கறி விறகு அடைக்காயமுதுக்கும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு இரு தூணிக் குறுணி ஐஞ்ஞாழி

44. உரி யாழாக்காக ஆண்டுவரை நாள் முன்னூற்று அறுபதுக்கு நெல்லு இருநூற்றுத் தொண்

45. ணூற்றொரு கலநே குறுணி ஒரு நாழி ஸங்கிராந்தி ஒன்றுக்கு வேண்டும் பலவிசத்துக்கு

46. நெல்லு இருகலநெ பதக்கு இருநாழியாக தட்சிண மயனமும் ஐப்பிகை விஷுவும் உத்தர

47. மயனமும் சித்திரை விஷுவும் ஆக ஆண்டு வரை சங்கிராந்தி நாலுக்கு நெல்லு என் கலனே இருதூணி

48. க் குறுணி திருமெய்ப்பூச்சுக்கு ஆண்டு வரை சந்தனம் நாற்கலமாக நெல்லு நாற்கலனே

49. காசு ஒன்றே அரைக்காலுக்குக் காசு ஒன்றுக்கு நெல்லு நாற்கலமாக நெல்லு நாற்கலனே

50. தூணிப்பதக்கு திருப்புகைக்கு ஆண்டுவரை குங்கிலியம் தொண்ணூற்றுப் பல

51. த்துக்குக் காசு அரைக்கு நெல்லு இருகலம் ஆண்டுவரை திருப்பரிசட்டம் மூன்றுக்கும் திருமேற்

52. கட்டி ஒன்றுக்கும் திருநமளிகை இரண்டும் உத்தரியப் புடவை நாலுக்குமாகக் காசு இர

53. ண்டுக்கு நெல்லு பதின்கலம் கிரஹணம் முள்ளிட்ட சிறப்புகளுக்கு நெல்லு இருகலனே

54. இரு நாழி உரி புதியி தமுது செய்தருள நெல்லு முக்கலம் கார்த்திகை விளக்கினு

55. க்கு எண்ணை நானாழிக்கு நெல்லுக் கலனே தூணி ஆக

56. ஆண்டுவரை நெல்லு முன்னூற்று இருபத்து இரு கலனே இருதூணி

57. இருநாழி உரியும் இவை யிற்றுக்கு கலத்துவரிக குறுணியாக குத்தக் கூலி

58. நெல்லு இருபத்து அறுகலனே இருதூணிப்பதக்கு முஞ்ஞாழியுரி

59. யும் மடமுடைய லகுளிஸ்வர பண்டிதற்கு ஆசாரிய போகமும்

60. திருவாராதினை செய்வானொரு வனுக்குமாக நாளொன்று

61. ... ... ...யும் பரிசாரகஞ் செயுமாண்

62. ஒன்றுக்கு நெல்லுக்குக் குறுணியாக சிவபிராமணன் கௌசிகன் அமலன்

63. அறுபத்து நால்வ பட்டன் மாண் இரண்டுக்கு நாளொன்றுக்கு

64. நெல்லுக்குப் பதக்கும் சிவபிராமணன் புல்லாலி உறாப்பகை

65. மாணிக்க பட்டன் மாணொன்றுக்கு நாளொன்றுக்கு நெல்லுக் குறுணியும்

66. சிவபிராமணன் பாரத்துவாஜி ஐயடிகள் ஐயாறன் மாணொன்று

67. க்கு நாளொன்றுக்கு நெல்லுக் குறுணியும் காரணத்தான் கிளிநல்லூர்

68. கிழவன் அரங்கன் இராமனுக்கு நாளொன்றுக்கு நெல்லுக்

69. குறுணியும் திருவலகு திருமெழுக்கிடுவாளொருத்திக்கு நெல்லு நாழி

70. உரியும் ஆக நிவந்த காறக்கு நாள் ஒன்றுக்கு நெல்லு இரு துணி ஒரு நாழி

71. உரியாக ஆண்டுவரை நிவந்தக்காற்க்கு நெல்லு இருநூற்று நாற்பத் கேசரியால்

72. தைலங்கலதே ஏழுகுறுணி நானாழியும் ஆக ஆண்டு வரை ராஜகேசரியால்

73. நெல்லு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஐங்கலனே பதக்கு நானாழி நெல்லு

74. அறமறவற்க அறமல்லது கைதாராதே இதுபந் மாஹேஸ்வர

75. ரக்ஷை

வரலாற்றுச் சிறப்புடைய இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திரசோழனின் சாசனமாகும். மாமன்னன் இராஜேந்திர

சோழன் நேரிடையாக ஆயிரத்தளி எனும் பெருநகரில் இருந்த ஸ்ரீ வானவன்மாதேவீஸ்வரம் எனும் கோயிலுக்கு நிவந்தமாக அளித்த கொடை பற்றி விவரிக்கின்றது. மாமன்னனின் இக்கொடையை கி.பி.1018இல் அவனது சேனாபதியான இராமன் அருமொழியான உத்தமசோழ பிரம்மமாராயன் கல்லில் வெட்டுவிக்கவேண்டும் என்று கூற, அந்த நிவந்த கட்டளை இராஜேந்திசோழனின் அதிகாரிகளான நன்தேவன் கூற்றியன், சங்கரன்சாத்தன் என்பவர்களால் கண்காணிக்கப்பெற்று, கல்வெட்டாக வெட்டப்பெற்றது.

ஆண்டொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட நிலத்திலிருந்து காணிக்கடனாக வரும் வருவாயான ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து கலம் நெல்லைக்கொண்டு ஸ்ரீ வானவன் மாதேவீஸ்வரமுடையார் எனும் இறைவனுக்கும், உமாசகிதர்க்கும் பலவகையான அமுதபடிகள், அடைக்காய் அமுது, விறகு, விளக்கெரிக்க எண்ணெய், படிச்செலவுகள், சங்கராந்தி பூஜைகள், கிரஹண பூஜைகள், சந்தனம், குங்கிலியம், பரிச்சட்டம், தமனிகை, உத்தரியப்புடவை, கார்த்திகை விளக்கு போன்றவற்றிற்கும், நெற்குத்த கூலி, இக்கோயிலுடன் இணைந்துள்ள மடத்திலுள்ள லகுளீச பண்டிதர்க்கு ஆசார்ய போகம், திருவாராதனை, பரிசாரகம், மாணி, திருவலகு, திருமெழுக்கிடுவாள் கூலி ஆகியவையும் எந்த எந்த விகிதத்தில் செய்யவேண்டும் என்பதை மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும் விவரிக்கின்றது.

இக்கல்வெட்டால் இத்திருக்கோயில் வானவன்மாதேவி என்ற சோழப்பேரரசியின் பெயரில் எடுக்கப்பெற்ற ஈஸ்வராலயம் என்பதும், இக்கோயில் மடமுடைய லகுளீஸ்வர பண்டிதரால் நிருவகிக்கப்பெற்றது என்பதும் தெளிவாகின்றது. மேலும் மாமன்னன் முதலாம் இராஜேந்திரசோழனே தன் ஸேநாபதி மூலம் இவ்வறக்கட்டளையான நிவந்தத்தினை அளித்துள்ளதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

இரண்டாம் கல்வெட்டு

(முதல் கல்வெட்டு உள்ள இடத்திற்கு அருகிலேயே பொறிக்கப்பெற்றுள்ளது)

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜந்ய மகுடஸ்ரேணி ரத்நே ஷு

2. ஸாஸநம் ஏதத் ராஜேந்திர சோளஸ்யபர

3. கேசரி வம்மண: திருமன்னி வளர இரு நில

4. மடந்தையும் போர் செயற் பாவையுஞ்

5. சீர்த்தனிச் செல்வியுந் தன் பெருந்தேவிய

6. ராகியின் புற நெடுதுய ருழியுளிடை துறை

7. ஞாடுந் துடர்வன வேலிப் படர் வனவாசியுஞ்

8. சுள்ளிச் சூழ் மதிட் கொள்ளிப் பாக்கையும் நண்ணக் கருமு

9. ரண் மண்ணைக் கடக்கமும் பொருகடவிழத்தரையர் தம்முடியும்

10. ஆங்கவள் தேவிய ரோங்கெழில் முடியுமுன்னவர் பக்கல்

11. தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரநாரமும் தெண்டிரை

12. யிழ மண்டலமுழுவதும் மெறிபடைக் கேரளன் துறைமயிற் சூடும்

13. குல தனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையும் சங்கதிர்

14. வேலைத் தொல்பெருங்காவற் பல் பழந்தீவுஞ் செருவிற் சிநவிலிருபத்

15. தொருகாலரைசு களை கட்ட பரசுராமன மெவருஞ சாந்தி மற்றீ வரண் கருதி

16. இருத்திய செம்பொற்றிருத்தரு முடியும் பயங்கொடு பழிமிக

17. முயங்கியில் முதுகிட்டொளித்த ஜெயசிங்களைப் பெரும் புகழோடு

18. பிடிய விரட்டபாடி யேழரை யிலக்கமும் நவநெதிக் குலப்பெரு ம

19. லைகளும் விக்கிரம வீரச் சக்கரக்கோட்டமு முதிர்வட வல்ல மதுர மண்ட

20. லமு ... ... மணைக் கோணயும் வெஞ்சின வீரர் பஞ்சப் பள்

21. ... ... ... மாகணி தேசமு மயர்வில் வண் கிர்த்தி யாதி ந

22. ... ... ந்திரதனை விளையமர்களத்து கிளையோ

23. ... ... ... ற குலதனக் குலையுங் கிட்டரும் செறி

24. ... ... ... கோசலை நாடுன் தன்ம பாலனை வெ

25. ... ... ... தண்ட புத்தியும் இரசுரனைய் முற

26. ணு கத்த ... கீர்த்தித் தக்கண லாடமுங் கோவிந்த சந்தன் மாவழிந்

27. தொட தங்காத சாரல் வங்காள தேசமுந் தொடுகடற் சங்கு வொட்டர் பயிர்வானனை

28. வெஞ்சம வளாகத் தஞ்சவித் தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர்

29. பண்டாரமும் நித்தில நெடுங்கட லுத்திர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்

30. தெறி புநற் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி

31. சங்கிராம விஜயோத்துங்க வந்மநான கிடாரத் தரையனை வாகயம்

32. பொருகடல் கும்பக் கரியொடு மகப் படுத்து ரிமையிற் பிறங்கிய பெரு

33. நெதிப் பிறக்கமு மார்த்தலன் காநெகப் போர்த்தொழில்

34. வாசலில் விச்சாதிர தோரணமும் மொய்த்தொளிர் புனமணிப் புதவ

35. மூங் கன மணிக் கதவமும் நிறை ஸ்ரீ விஷையமுந் முறைநீர்ப் பன்னையும் பொன்மலையூரும் ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமுங் கலங்கா .. யூரேயிலங்

36. கா சோகமுங் காப்புறு நிறைபுதல் மாப்பப்பாளமுங்...

37. கலைத்தக்கோர் புகழ்த் தலைத் தக்கோலமுந்தி த மாவல்வினை மாதமலிங்கமுங் கலா முதிர்

38. கடுந்திறலிலாமுரி தேசமுந் தேனக்க வர் பொழில் மாறக்க வாரமும் தொடுகடற்காலற் கடுமுரட்

39. கடாரமும் மாப் பொரு தண்டாற்கொண்ட கோப்பர கேசரிவர்மரான

40. தேவர்க்கு யாண்டு 30வது நித்த விநோத வளநாட்டுக்கிழார் கூற்றத்து ஆயிரத்தளிப்பால்

41. ஸ்ரீ பராந்தக தேவேஸ்வரத்து நட்டவக் காணியும் மெய்மட்டுக் காணியும்

42 மெராவியக் காணியு முன்பு காணி உடைய நித்தவிடங்கன் மல்லையன்

43. செத்த மயில் இவன் முன்பனுவித்த வண்ணமே இவன் மய்த்துனன்

44. நங்கா தேர்வன் அரையன் ராஜராஜனான முடிகொண்ட சோழ வாச்சியமாராய

45. னுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் நட்டவமும் மெய் மட்டும் மெராவியமும் காணியா

46. கக் குடுத்தோம் கல்லில் வெட்டிக் குடுக்க வென்று இக்கோயில் மடமுடைய ப்ரமஹஸோம்

47. பண்டிதர்களும் ஸ்ரீ கார்யஞ் செய்வார்களுக்கும் இத்தேவர் பதிபாத மூலப்பட்டுடை

48. பஞ்சாசாரியர் தேவகன்மிகளுக்குத் திருமந்திர வோலை அயலூரடி கங்கை

49. கொண்ட சோழந் எழுத்தினால் யாண்டு 26வது நாள் (-) 72-னால் த்திருமுகம் ப்ரஸா

50. தஞ் செய்தருளிவரக் கல்வெட்டியது.

இரண்டாவதாகத் திகழும் இக்கல்வெட்டும் இராஜேந்திர சோழன் தளிக்கவனம் செலுத்தி வெளியிட்ட அரசு ஆணையாகும் மாமன்னன் பரகேசரி ராஜேந்திரசோழனின் சாசனம் என்ற சிறப்புக் குறிப்போடு, அப்பெருமன்னனது மெய்க்கீர்த்தி கூறி, அவனது 26ஆம் ஆண்டான கி.பி. 1038இல் மனமுவந்து அளித்த ஸ்ரீ முகத்தினை விவரிக்கின்றது. முதல் கல்வெட்டு குறிப்பிடும் அதே ஊரான ஆயிரத்தளியில்(நந்திபுரத்தில்) இருந்த "பராந்தக தேவேச்சரம்" எனும் சிவாலயத்தில் ஆடல் நிகழும்போது நட்டுவம் செய்தல், அதற்குத் தாளக்கருவியான மெய்மட்டு (மிருதங்கம்) இசைத்தல் முகவீணை(மெராவியம்) எனும் குறுங்குழல் இசைத்தல் போன்ற பணிகளுக்குரிய நட்டுவக்காணி, மெய்மட்டுக்காணி, மெராவியக்காணி ஆகிய மூன்று உரிமைகளும் பெற்றிருந்த நித்தவிடங்கன் மல்லையன் என்பவன் இறந்துவிடவே அந்தக் காணிகளை, அவன் முன்பு அனுபவித்த வண்ணமே அவனது மைத்துனன் நங்காதேர்வன் அரையன் ராஜராஜன் எனும் முடிகொண்ட சோழவாச்சியமாராயன்

என்பவனுக்கும் , பின்பு அவனது வம்சத்தார்க்கும் உரியதாகக் கடாரம் வென்ற பெருமன்னான இராஜேந்திரசோழனே ஆணை பிறப்பித்தான்.

இவ்வாறு மன்னன் அளித்த ஆணை அவன் உளம் மகிழ்ந்து கொடுத்தது என்பதனைக் கல்வெட்டுச் சிறப்புக் குறிப்பாகத் "திருமுகம் ப்ரஸாதம் செய்து அருளிவரக் கல்வெட்டியது" எனக்குறிப்பிடுகிறது. இவ்வாணையைச் செயல்படுத்த, அந்தப் பாராந்தக தேவேச்சரம் எனும் கோயிலுடன் இணைந்த மடத்தில் இருந்த **ப்ரம்ஹ சோம பண்டிதர்க்கும்** ஸ்ரீ கார்யம் செய்கின்ற அதிகாரிகளுக்கும், சிவனுக்கே ஊழியம் செய்யும் முதன்மையுடைய அர்ச்சகர்களுக்கும் , (பதிபாத மூலப்பட்டுடை பஞ்சாசரிய தேவகன்மிகள்) திருமந்திரவோலை எனும் பதவி வகிக்கும் உயர் அலுவலரான அயலூரடிகங்கைகொண்டசோழன், மன்னனின் ஆணையை அனுப்பிக் கல்லிலும் நகல் வெட்டுவிக்க வேண்டும் என்று கூறியவண்ணமே இக்கல்வெட்டு பொறிக்கப்பெற்றுள்ளது.

இங்கு நாம் கண்ட இரண்டு கல்வெட்டுகளையும் தொகுத்து நோக்கும்போது தமிழக வரலாற்றில் இதுவரை எழுதப்படாத பல புதிய அரிய செய்திகளை அறியமுடிகிறது. ஆயிரத்தளி எனும் ஊரில் (1) பராந்தகதேவேச்சரம் (2) வானவன்மாதேவீச்சரம் எனும் இரண்டு கோயில்கள் மாமன்னன் இராஜேந்திரசோழன் காலத்தில் இருந்தன. அவை சைவீச பண்டிதர் ப்ரமஹ சோமபண்டிதர் என்ற இரண்டு பண்டிதர்களின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டன. மேலும் இக்கோயில்கள் ஸ்ரீகார்யம் அதிகாரிகளின் அலுவல் உதவிகளுடன் செயல்பட்டதும், பதிபாத மூலப்பட்டுடை தேவகன்மிகளால் பூஜை செய்யப்பெற்றதும் அறியமுடிகிறது. எல்லாவகை பூஜைகளும், விழாக்களும் நடந்தன. இங்கு ஆடற்கலை வழிபாடு நிகழ்ந்தமையைக் காண்கிறோம். நட்டவம், மெய்மட்டு, மெராவியக்காணி பெற்றவன் ராஜராஜனின் சிறப்புப் பெயரான 'முடிகொண்ட சோழன்' என்ற விருதுடன் "வாச்சியமாராயன்" என்ற சிறப்புப் பட்டமும் பெற்ற பெருங்கலைஞன் ஒருவன் இங்குப் பணிபுரிய மன்னனே அமர்த்தியதும் தனிச்சிறப்பாக உள்ளது. சோழர்கால

ஆடற்கலை மரபில் ஆடலுக்கு நட்டவம், மத்தளம், குறுங்குழலான முகவீணை (மொராவியம்) ஆகியவைதான் முக்கியமானவை என்பதை இக்கல்வெட்டு சுட்டுவதும் சோழர்காலச் சிற்பங்களில் இவையே காட்டப்பெறுவதும் ஒப்பீட்டு நோக்குவதற்குரியவை.

பராந்தகதேவேச்சரம், வானவன்மாதேவீச்சரம் என்ற இரண்டு பெயர்களில் எடுக்கப்பெற்ற இக்கோயில்கள் முறையே இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தரசோழன் பெயரிலும் வானவன்மாதேவி என்ற அவரது தேவியர் பெயரிலும் எடுக்கப்பெற்றவை என்பது தெளிவு. இவர்கள் மாமன்னன் இராஜேந்திரசோழனுக்குப் பாட்டனும் பாட்டியும் ஆவர். இராஜராஜசோழன் எனும் புலியைப் பெற்ற பெருமக்களும் இவர்களே.

"போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்துவாழ் கெனவே"

என்று வீரசோழியம்-யாப்பு 11-ஆம் செய்யுள் கூறுவதால், சுந்தரசோழரான இரண்டாம் பராந்தகரின் நகரம் "நந்திபுரம்" என்பது தெளிவாகின்றது. அவரது திருநகரத்தில் அவர் பெயரிலும், அவரது தேவியார் பெயரிலும், கோயில்கள் ஏன் எழுப்பப்பெற்றன என்பது ஆய்வுக்குரியதாம்.

சுந்தரசோழன் கி. பி. 969இல் தன் முதல் மகனாகிய ஆதித்த கரிகாலன் இறப்பதற்குப் பின்பு ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்ந்து அவ்வாண்டிலேயே மாநகரத்திலிருந்த நந்திபுர பொன் மாளிகையில் உயிர்துறந்தார். இதனால் இவர் "பொன்மாளிகை துஞ்சின தேவர்" என அழைக்கப்பட்டார். இவரது உடலை எரியூட்டும்போது, இவரது தேவியான வானவன்மாதேவி பிரிவாற்றாமையால், ஈமத்தீயில் பாய்ந்து உயிர்துறந்தாள்.

இவ்வம்மை திருக்கோவலூர் மலையமான் குலத்துதித்தவள். இவள் பெருமையைச் சிறப்பித்துக்கூறும் திருக்கோவலூர்க் கல்வெட்டுப்பாடல்:

"இந்திர சாமனன் இராஜ சர்வஞன் என்னும்
புலியைப் பயந்த பெண்மான்
கலியைக் கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகன் பிரியாத் தையல்
நிலைபெறுந் தூண்டா விளக்கு
... ... ... ... ... ..."

இவ்வாறு காஞ்சியில் இறந்த பராந்தகசோழனாம் சுந்தரசோழனுக்கும், வானவன்மாதேவியார்க்கும் முதல் இராஜராஜனால் எடுக்கப்பெற்ற இராஜராஜீச்சரம் எனும் தஞ்சைப் பெரியகோயிலில் படிமம் எடுத்துக் குந்தவைதேவியார் வழிபாடு செய்ததைத் தஞ்சைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் சுந்தரசோழர் நினைவாகச் சுந்தரசோழ விண்ணகர் ஆதுரசாலை என்ற மருத்துவ நிலையம் தஞ்சையில் செயல்பட்டதையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. எனவே இச்சான்றுகள் கொண்டு நோக்கும்போது சுந்தரசோழரையும் வானவன்மாதேவியையும் வழிபடு தெய்வமாக அச்சோழர் குடும்பம் போற்றிற்று என அறிகிறோம்.

ஆதித்தசோழன், அரிஞ்சயன், இராஜராஜன், பஞ்சவன்மாதேவி போன்ற சோழ அரச குடும்பத்தவர்க்கெல்லாம் பள்ளிப்படைக் கோயில்களின் நிருவாகம், முதலாம் இராஜேந்திரன் காலத்தில் லகுளீச பண்டிதர்களின் மேற்பார்வையில் இருந்ததை எல்லாப் பள்ளிப்படைக் கல்வெட்டுகளும் கூறுகின்றன. மேலும் இம்மன்னன் காலத்தில்தான் பள்ளிப்படைக் கோயில்களுக்கு பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டதையும் காணமுடிகிறது.

இச்சான்றுகள் கொண்டு நோக்கும்போது, இங்கு நாம் கண்ட வானவன்மாதேவிச்சரமும் பராந்தக தேவேச்சரமும் மடமுடைய லகுளீச பண்டிதர், ப்ரம்ஹசோம பண்டிதர் என்ற லகுளீச சித்தாந்திகளின் மேற்பார்வையில் நிருவகிக்கப்பெற்றதால், இவை பள்ளிப்படைக் கோயில்கள்தான் என்பது உறுதியாகின்றது. மேலும் மன்னனது பிரசாதமாகிய ஸ்ரீமுகம் நிறைவேற்றப்பட்டுக் கல்லில்

வெட்டுவிக்கப்படவேண்டுமென்று முதலில் வேண்டப்படுபவர் மடமுடைய பண்டிதர்தான் என்பதும் நோக்குதற்குரியதாகும். அனைத்துச் செய்திகளையும் தொகுத்து நோக்கும்போது இவை பள்ளிப்படைகளே என்பது தெளிவாகின்றது.

பள்ளிப்படைகளாகிய பராந்தக தேவேச்சரமும், வானவன்மாதேவீச்சரமும் தற்போது எங்குள்ளன? என்பது அடுத்த நிலையில் ஆராயப்பட வேண்டியதாகும். தற்போது மேலே கட்டப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுகளையும் சுமந்து நிற்கும் கண்டியூர் வீரட்டத்து மங்களாம்பிகை திருக்கோயில் மாமன்னன் இராஜேந்திரசோழன் காலத்துரியது என்பது கட்டட அமைப்பு, கோஷ்டதெய்வங்கள், கல்வெட்டின்காலம் இவற்றால் உறுதிபெறுகின்றது. கண்டியூர் வீரட்டமுடைய மகாதேவர்கோயில் கருவறையில் 10க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. திருபதுங்க பல்லவன் காலம் தொடங்கிப் பிற்கால சோழர்கள் வரை பல மன்னர்களது கல்வெட்டுகள் உள்ளன. இவை அனைத்தும் நித்த விநோத வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துக் கண்டியூர் பற்றியே பேசுகின்றன. ஆனால் இத்திருக்கோயில் வளாகத்திலேயே உள்ள இந்த அம்மன்கோயில் கல்வெட்டுகள் மட்டும் நித்த விநோத வளநாட்டு கிழார் கூற்றத்து ஆயிரத்தளி எனும் ஊர் பற்றியே பேசுகின்றன. ஒரு இடத்தில்கூடக் கண்டியூர் பற்றியோ, வீரட்டம்பற்றியோ பேசப்படவில்லை. கண்டியூர் ஆர்க்காட்டுக் கூற்றத்தில் திகழ, அவ்வூரின் பிடாகைகளான ஆவிக்கரை, இரட்டைக்கோயில், செங்கமேடு, வீரசிங்கம்பேட்டை போன்ற ஊர்கள் கிழார் கூற்றத்து ஊர்கள் என்பதும், அவைதாம் ஆயிரத்தளி என்பதும் முன்பே இந்நூலாசிரியரால் "நந்திபுரம்"எனும் நூலில் தெளிவுபட நிறுவப்பெற்றுள்ளது.

இங்கு ஆயிரத்தளி எனும் ஊரில் இருந்ததாகச் சுட்டப்படும் பராந்தகதேவேச்சரம்; வானவன்மாதேவீச்சரம் ஆகிய இரண்டு சோழர்காலக் கோயில்களும் இருந்த இடமே பின்னாளில் இரட்டைக்கோயில் என்ற பெயரால் அழைக்கப்படலாயிற்று. அவ்வூரில் மிகப்பெரிய இரண்டு சிவலிங்கங்கள் மட்டுமே

கோயில்கள் இருந்த இடத்தில் உள்ளன. மற்றபடி கோயில் இருந்ததற்கான இடிபாட்டுச் சான்றுகள் இல்லை. அந்த லிங்கங்கள் கொண்டு அங்கு இரண்டு சிவாலயங்கள் இருந்தன என உறுதியாக நம்ப முடிகிறது.

கண்டியூர் வீரட்டத்து மங்களாம்பிகை கோயிலில் உள்ள கல்வெட்டுகள் வீரட்டம் பற்றியோ, கண்டியூர் பற்றியோ பேசாமல் ஆயிரத்தளியில் இருந்த இரண்டுகோயில்களைப் பற்றிப் பேசுவதோடு மட்டுமல்லாமல் அந்தக் கோயிலின் அமைப்பே அது அந்த இடத்தில் எடுக்கப்பெற்ற மூலக்கோயில் அல்ல என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

தற்போது அம்மன்கோயில் தெற்கு நோக்கியவண்ணம் மேற்கு இராஜகோபுரத்தை ஒட்டி இரண்டாம் பிரகாரத்தில் உள்ளது. அழகிய சோழர் கலைவண்ணம் மிளிரும் இக்கற்றளியின் மேற்குப்புறக் கோஷ்டங்களில் முதல் கோஷ்டத்தில் நின்ற கணபதியார் திருவடிவம் உள்ளது. அடுத்த கோஷ்டத்தில் தெய்வம் முன்னர் இருந்து தற்போது இல்லாமல் உள்ளது. அந்தக் கோஷ்டத்திலேயே ஒருபுறம் நந்தி குடமுழவு இசைப்பதும் மறுபுறம் தாளமிடும் பூதம் நிற்பதுமான சிற்பங்கள் உள்ளன. இவற்றை நோக்கும்போது அது நடராஜப்பெருமான் இடம்பெற்றிருந்த கோஷ்டம் என்பது தெரியவருகிறது. அடுத்துக் கருவறையின் மேற்குப்புறக் கோஷ்டத்தில் சனகாதி முனிவர் நால்வர் சிற்பம் இருக்க ஆலமர்ச்செல்வர் இடம்பெயர்ந்த சுவடு அப்படியே உள்ளது. அதேபோல் வடபுறம் உள்ள கருவறை தேவகோஷ்டத்தில் லிங்கோத்பவர் இடம்பெற்றுப் பின்னர் இடம்பெயர்ந்ததும் தெரிகிறது. மேலும் பிரமன், பிட்சாடனர் இருந்த கோஷ்டங்களும் தெய்வ உருவின்றிக் காட்சி தருகின்றன. கடைசியாகக் கிழக்குப்புறத்தில் அர்த்தமண்டபப் பகுதிக் கோஷ்டத்தில் துர்க்கைதேவியின் திருவுருவம் உள்ளது. இந்தக்கோயிலின் தேவகோஷ்டங்களில் முன்னர் இடம்பெற்றிருந்த தெய்வ உருவங்கள் எல்லாம் பக்கத்தில் உள்ள கோபுரத்தில் மாடங்கள் செய்யப்பெற்றுப் பதிக்கப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

மேற்குக் கோபுரமாகத் திகழும் கட்டடப்பகுதி முழுவதும் இராஜேந்திரசோழன் காலத்துக் கற்றளி ஒன்று பிரிக்கப்பெற்று

மீண்டும் இங்குக் கோபுரத்தில் கல்ஹாரமாக வடிவம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. இங்குப் பல இடங்களில் இராஜேந்திரசோழனின் மெய்க்கீர்த்தியாகத் திகழும் கல்வெட்டுத்துண்டுகள் பல தலைகீழாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளதையும் காண்கிறோம். இந்தக் கோபுரத்தில் சிற்ப இலக்கணங்களுக்கு மாறாகப் பதிக்கப்பெற்றுள்ள கோஷ்ட தெய்வங்கள் அனைத்தும் இரண்டு சிவாலயங்களுக்குரிய கோஷ்ட தெய்வச் சிற்பங்களேயாகும். மேலும், இக்கோபுரத்தில் பொறிக்கப்பெற்றுள்ள 15ஆம் நூற்றாண்டுக் கன்னடக் கல்வெட்டுகள் பிற்காலத்திருப்பணி பற்றிக் கூறுகின்றன.

அனைத்துச் சான்றுகளையும் தொகுத்து நோக்குவோமாயின் இரட்டைக்கோயில் எனும் இடத்தில் திகழ்ந்து, பின்னாளில் வழிபாடின்றி இருந்த மேற்குறித்த இரண்டு கோயில்களையும் பிரித்து, கண்டியூர் வீரட்டத்திற்குக் கொணர்ந்து, ஒரு கோயிலை அப்படியே (சில கோஷ்ட தெய்வங்களை மட்டும் தவிர்த்துவிட்டு) மங்களாம்பிகை கோயிலாகவும், மற்றொரு கோயிலைத் திருக்கோபுரமாகவும் மாற்றி எடுத்துள்ளனர் என்பது தெள்ளத்தெளிவாக நிருபணமாகின்றது. தமிழகத்துப் பள்ளிப்படைகள் வரிசையில் இவ்விரண்டு கோயில்களும் தனியிடம் பெற்று வரலாறு படைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

கி. பி. 1173இல் இரண்டாம் இராஜராஜசோழன் இறந்தபோது அவரது நான்கு தேவியரும் உடன் இறந்தனர். ஐவரின் உடல்களையும் எரியூட்டிய பின்னர் அஸ்திக்கலசங்கள் மீது சிவன்கோவில்கள் கட்டப்பட்டன. அவை முறையே,

1. **பள்ளிப்படை ராஜகம்பீச்சரம்**
2. **பள்ளிப்படை புவனமுழுதுமுடையாள் ஈச்சரம்**
3. **பள்ளிப்படை உலகுமுடையாள் ஈச்சரம்**
4. **பள்ளிப்படை திரிபுவனமுழுதுடையாள் ஈச்சரம்**
5. **பள்ளிப்படை உலகுடை முக்கோக்கிழானடிகள் ஈச்சரம்**

என்பவை, என்பதனைத் தாராசுரம் கல்வெட்டினைச் சுட்டிக்காட்டித்திரு. என். சேதுராமன் அவர்கள் அவை முற்றிலும்

அழிந்துவிட்டன என்பதைத் தனது Medievel Pandiyas (Page 25) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவை எங்கிருந்திருக்கும் என ஆராயமுனைந்தபோது, தாராசுரத்திற்குச் சற்று மேற்காக, தாராசுரம் திருவலஞ்சுழி சாலைக்கு வடக்காக அரசலாற்றின் தென்கரையில் இருந்திருக்கும் என்பதற்கான பல தடயங்களை அண்மையில் காணமுடிந்தது. இங்கு பல சிவலிங்கங்கள் மற்றும் கற்றளிகளின் எச்சங்கள் சிதறிக்கிடக்கின்றன. எதிர்கால ஆய்வில் இது உறுதிப்படும். இம்மாமன்னன் வாழ்ந்த இராசராசபுரிக்கு (தாராசுரம்) அருகிலேயே இத்தடயங்கள் உள்ளதால் இக்கருத்து மேலும் வலுவுள்ளதாக அமைகின்றது.

சோழப்பெருமன்னர்களுக்கு எடுக்கப்பெற்றது போன்று பழுவூரைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சிபுரிந்த பழுவேட்டரையர்களுக்கும் "பள்ளிப்படை" எடுக்கப்பெற்றது என்பதனை அண்மைக்கால ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. பேராசிரியர் திரு. இல. தியாகராஜன் அவர்கள் பழுவூரில் பழுவேட்டரையருக்கு எடுக்கப்பெற்ற பள்ளிப்படை ஒன்றினைக் கல்வெட்டுச் சான்றுகொண்டு காட்டியுள்ளார். தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்களுக்கு எடுக்கப்பெற்ற பல பள்ளிப்படைகள் தஞ்சைக் கருந்திட்டைக்குடி "ராஜாகோரி" எனும் பகுதியிலும், திருவிடைமருதூரில் காவிரி ஆற்றங்கரையிலும் காணமுடிகின்றது.

நடுகற்பந்தலாக முதலில் தோன்றிய இம்மரபு காலங்காலமாக வளர்ந்து பள்ளிப்படை எனும் சிவாலயங்களாக மாறின. அஸ்திக்கலசங்கள் மீது சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யப்பெற்று எல்லாப் பரிவார தேவதைகளுடனும் கோயில்கள் அமைந்தன. சமாதிலிங்கப்பிரதிஷ்டை போன்ற பிற்கால நூல்கள் இவை குறித்துத் தோன்றின. எனவே தமிழகத் திருக்கோயில்கள் வரலாற்றில் பள்ளிப்படைக்கோயில்கள் தனி இடம்பெற்றுச் சிறந்திருந்தன.

# தஞ்சை மராட்டியர்காலச் சிற்பங்கள், ஓவியங்கள்

தமிழகத்தின் கலைக் கருவூலம் எனப் புகழ்பெற்றது சோழ மண்டலமே. இப்பொன்னி வளநாட்டில் மலர்ந்த கலைகள்தான் எத்தனை ...! எத்தனை...! பல்லவர்காலம் தொடங்கிச் சோழர்கள், விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் போன்ற பல்வேறு மன்னர்களின் காலங்களில் மலர்ந்த சிற்பங்களும் ஓவியங்களும் இந்திய நாட்டிற்கே பெருமை தரும் வண்ணம் அமைந்தன.

மாவீரன் சிவாஜியின் தம்பியான ஏகோஜியால் கி. பி. 1675இல் தஞ்சைநகரம் கைப்பற்றப்பட்டுச் சோழநாடு மராட்டியர்களின் வசமாயிற்று. கலைகளுக்கெல்லாம் உறைவிடமான தஞ்சையின் கலை மணத்தை மராட்டிய மன்னர்கள் அனைவருமே முழுதுமாக நுகர்ந்தனர். இவர்கள் காலத்தில் சிற்பக்கலையும், ஓவியக்கலையும் தனிப்பாணியுடன் வளர்ச்சி பெற்றன. இம்மன்னர்களால் ஆக்கம்பெற்ற கலைஞர்களில் பெரும்பாலானோர் தமிழ் மண்ணில் பிறந்த தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இம்மன்னர்கள் சிற்பக்கலையைவிட ஓவியக்கலைக்கே அதிகம் ஆக்கம் அளித்தனர்

## *மராட்டியர் காலச் சிற்பங்கள்*

தஞ்சை மராட்டியர்காலச் சிற்பப் படைப்புகளை (1)கருங்கற் சிற்பங்கள், (2) செப்புத்திருமேனிகள், (3) சுண்ணச் சுதைச் சிற்பங்கள், (4) மரச்சிற்பங்கள் எனப்பிரிக்கலாம்.

### *கருங்கற் சிற்பங்கள்*

பல்லவர்கள், சோழர்கள், நாயக்க மன்னர்களின் கற்சிற்பப் பணியை ஒப்பிடும்போது மராட்டியர்களின் பங்கு மிகமிகக் குறைவேயாகும். மேலும் கலை அம்சத்தால் பல்லவர் காலத்திலும், ஏற்றம் பெற்றிருந்த தமிழகச் சிற்பங்களின் தரம் பிற்காலத்தில்

படிப்படியாகக் குறையத்தொடங்கியது. சிற்பங்களின் உயரம் குறைந்து பருமனாக, சற்று விகாரம் பெற்றது என்பது சிற்ப இயல் ஆய்வாளர்களின் கருத்து. ஒப்பியல் அடிப்படையில் கற்சிற்பங்களின் தரம் மராட்டியர்கள் காலத்தில் குறைவுபட்டிருப்பினும், இவர்கள் காலப்படைப்புகளில் குறிப்பிடத்தக்க கற்சிற்பங்கள் பல உள்ளன.

### *கல்லில் இராமகாதை*

தஞ்சாவூர் தெற்குவீதியில் உள்ள கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயில், மராட்டியர்கால கற்சிற்பங்களிலெல்லாம் தலையாய சிறப்பிடம்பெறும் சிற்பங்கள் பொதிந்த ஒரு கலைக்கூடமாகத் திகழ்கிறது. முதலாம் ஆதித்தன், பராந்தகன், குலோத்துங்கன் போன்ற மாமன்னர்கள் கட்டுவித்த திருக்கோயில்களில் இராமகாதைக்குச் சிறப்பிடம் கொடுத்துச் சிற்பங்களில் இடம்பெறச்செய்தனர். இத்தகைய இராமகாதைத் தொகுப்பு குடந்தை நாகேசுவரன் திருக்கோயில் புள்ளமங்கை திருக்கோயில், திரிபுவனவீரேச்சுரம் போன்ற இடங்களில் இடம்பெற்று உலக சிற்ப இயல் வல்லுநர்களை தம்பால் ஈர்க்கின்ற பெருமையோடு நிற்கின்றன. அத்தகைய வரிசையில் இடம்பெறத்தக்க அளவு மராட்டிய மன்னர்கள் படைத்த இத்திருக்கோயிலில் இராமகாதையின் தொடர்சிற்பங்கள் உள்ளன. கலைக்கோட்டு முனிவரின் யாகத்தில் தொடங்கி இராமகாதை முழுவதும் சிற்பங்களாகப் படைக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் இராசகோபாலசுவாமி திருக்கோயிலின் வளாகத்தினுள் அமைந்துள்ள காளிகோயில் முன்மண்டபத்தில் பல கற்படிமங்கள் குவிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இவை முறையாகப் பிரதிட்டை செய்யப்படாமல் உள்ளன. பிரதாபசிம்மன் காலத்தில் சந்தித்த முகமதிய, பிரஞ்சுபோர்கள், கொள்ளைகள், குறையாடல் போன்ற நிகழ்ச்சிகளில் இருந்து காப்பாற்றவே பல இடங்களில் இருந்த கற்படிமங்களும், செப்புத்திருமேனிகளும் இங்குக் குவிக்கப்பட்டன. இதே திருக்கோயில் வளாகத்தில் தென்மேற்கு மூலையில் உள்ள சிவேந்திரர் கோயில் மண்டபத்திலும் பல கற்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரிசையில் பிரதாபசிம்மன் காலத்திலும், அதற்கு முன்பும்தான் கற்சிற்பங்களின் படைப்புகள் அதிகம். இராஜகோபாலசுவாமி கோயில் வளாகத்தினுள் உள்ள காளிகோயிலில் சுமார் 7 அடி உயரமுடைய மிகப் பெரிய கற்சிலைகளான அனுமன், விநாயகர், தண்டபாணி, விட்டோபா (பாண்டுரங்கன்), தேவியர் இருவர், மூன்று நின்ற கோல சக்தி தேவி, இரண்டு மாகாளிகள் போன்றவை உள்ளன. இங்கு இராசகோபாலன் தேவியருடன் உள்ளமை மூன்றுவகையும், பாண்டுரங்கன் தேவியருடன் நான்கு வகைகளும், ஐந்துவகை மகாலிங்கங்களும் மற்றும் பலவகையான தெய்வத் திருவுருவங்களும் உள்ளன.

இங்குள்ள கற்சிற்பங்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை புதுவகைப்படைப்பான நவக்கிரகங்கள், நாகதேவதையுடன் நாகதேவியர், பாண்டுரங்கன், குதிரைமேல் உள்ள மராட்டிய நாட்டு தேவதைகள், இரண்டு தலையுடைய தெய்வம், பஞ்சமுக சிவலிங்கம் போன்றவையாகும்.

## *ராணுபாய்-சட்டுபாய் சிற்பங்கள்*

இதே காளிகோயிலில் ராணுபாய், சட்டுபாய் என்ற இரண்டு கற்படிமங்களும், இரண்டு பித்தளைப் படிமங்களும் உள்ளன. இது தமிழகத்தில் வேறு எங்கும் காணமுடியாத தெய்வங்கள், மராட்டியர் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளை இரட்சிக்கும் பெண் தெய்வங்களாக இவைகளை வணங்குகின்றனர். தலை மொட்டையாக உள்ள ராணுபாய் படிமம் அமங்கலப் பெண் தேவதையாகவும் காட்டப்பட்டுள்ளது. தஞ்சை கீழவாசலில் இருந்த ஒரு கோயிலின் படிமங்கள் இங்கு இடம் மாறியபோதும், முன்பு இருந்த இடத்தில் இரண்டு நினைவுக்கல்லை நிறுத்தி அவற்றை இன்றும் வழிபட்டுவருகின்றனர். ராணுபாய், சட்டுபாய் போன்றே தமிழகத்திலும் இரண்டு பெண் தேவதைகளாகப் பேச்சியம்மன், காட்டேரி என்ற தெய்வங்களை வணங்குவது நோக்குதற்குரிய ஒன்று.



திருவிடைமருதூர்ப் பாவைவிளக்கு

### சிவேந்திரர் படிமங்கள்

சிவன், திருமால் ஆகிய இரண்டு தெய்வங்களை ஒரே திருவுருவில் " ஹரிஹரன் " என வணங்குவது தமிழகத்தின் சிறப்பு மரபு. ஆனால் இதையே மராட்டியர்கள் சிவேந்திரர் என்ற பெயரில் வணங்கினர். இதற்காக இவர்கள் படைத்த சிற்பம் தமிழகத்திற்குப் புதுமையானதாகும். பெரிய வட்டவடிவக் கல்லில் எண்கோணம் (ஷட்கோணம்) வரையப்பட்டு அதில் தீப்பிழம்பு மகுடத்துடன் நின்ற கோலத்தில் சங்கு, சக்கரம், திரிசூலம், வாள் ஏந்திய நிலையில் சிவேந்திர உருவம் வடிக்கப்பட்டுள்ளது. இராஜகோபாலசுவாமி கோயிலில் மட்டும் 6 வகையான சிவேந்திரர் உருவங்கள் தேவியருடன் உள்ளன.

### சக்கரபாணி திருவுருவம்

பெயரளவில் இராஜகோபாலசுவாமி கோயில் எனக் குறிப்பிடப்பட்டபோதும் இங்கு இராஜகோபாலன் இல்லை. கி.பி. 1675ஆம் ஆண்டு ஏகோஜியால் தஞ்சை நகரம் தாக்கப்பட்டபோது, இராஜகோபாலசுவாமி கோயில் வாசலில் எதிர்த்த விஜயராகவநாயக்கரை பீஜப்பூர் கூலிப்படை கொன்றது. பின்பு ஏற்பட்ட சூறையாடல்களின்போது இராஜகோபால சுவாமியின் திருவுருவம் அகற்றப்பட்டது. பல ஆண்டுகள் மூலவர் திருமேனி இல்லாமலேயே அக்கோயில் விளங்கிற்று. ஆனால் பின்பு மராட்டிய அரசி காமாட்சிபாய் சக்கரபாணியை 16 கரங்களுடன் அக்கோயிலில் பிரதிட்டை செய்துள்ளார். இதுபோன்று கும்பகோணத்திலும் ஒரு சக்கரபாணி மராட்டியர் காலத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இது திருமாலின் அம்சமுடைய ஓர் அற்புதப் படைப்பாகும்.

### மன்னர்களின் படிமங்கள்

புள்ளிருக்குவேளூரில் (வைதீஸ்வரன்கோயில்) உள்ள அருள்மிகு வைத்திநாதர் திருக்கோயில் தென்பிரகாரத்தில் காணப்படும் மண்டபம் மராட்டியர் காலப்படைப்பாகும். இம்மண்டபத்தில் 4 தூண்களில் கல்வெட்டுக்களுடன் சிற்பங்கள்

உள்ளன. இவைமுறையே (1) பிரதாபசிம்மன் (2) மல்லார்சி காடேராவ் (3) தருமபுரம் சிவஞானதேசிகர் (4) முத்துக்குமாரசுவாமி தம்பிரான் என்ற நால்வரின் பிரதிமங்கள் என்பதை அங்குள்ள கல்வெட்டுச்சான்றால் அறியமுடிகிறது.

தஞ்சாவூர் மேலவீதியிலுள்ள மூலை அனுமார்கோயிலுக்கு ஸ்ரீ வீரப்பிரதாப அனுமார்கோயில் என்று பெயர். இது மராட்டிய மன்னன் பிரதாபசிம்மனால் கட்டுவிக்கப்பட்டது என்பதைச் சரசுவதி மகால் மோடி ஆவணங்களால் அறியமுடிகிறது. இத்திருக்கோயிலில் அண்மையில் மறைந்திருந்த சில சிற்பங்களைத் தூய்மை செய்து வெளிக்கொணர்ந்தோம். கருவறையின் வடபுறச் சுவரில் உள்ள இரண்டு மாடங்களில் இரு உருவச் சிற்பங்கள் உள்ளன. மராட்டிய மன்னர்கள் அனுமனை வணங்கும் கோலத்தில் உள்ளனர். இதில் உள்ள அனுமன்சிலை மிக அரிய பாணியில் படைக்கப்பட்டுள்ளது. பல விலங்கினங்கள் உள்ள ஒரு மலையின் உச்சியில் ஆழியும் சங்கும் ஏந்தி நான்கு உருவங்கள் கைகூப்பிய நிலையில் உள்ளன. இவ்விரண்டு சிற்பங்களிலும் உள்ள மன்னர்களை மோடி ஆவணங்களின் துணையாலும் மற்ற ஓவியங்கள், சிற்பங்கள் ஒப்புமையாலும் இவை முறையே பிரதாபசிம்மன், அவரது மகன் துளஜா என்பவர்களாக இருக்கலாம் என அறியமுடிகிறது

தஞ்சை வெண்ணாற்றங்கரையை ஒட்டிய பள்ளியக்ரகாரம் எனும் ஊர் மோடி ஆவணங்களில் லெட்சுமிராஜபுரம் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இங்குள்ள தளிகேசுவரர் திருக்கோயிலில் சோழர்காலப் பழமையான சிற்பங்கள் உள்ளன. இரண்டாம் சரபோஜி மன்னரின் மைத்துனரும் சர்கேல் என்ற உயர் பதவி வகித்த ராமோஜி சர்ஜேராவ்காடே என்பவரால் இத்திருக்கோயில் ஆக்கம்பெற்றது என்பதனை மோடி ஆவணங்களே விரித்துரைக்கின்றன. இத்திருக்கோயிலில் இரண்டாம் சரபோஜி மன்னர், அவரது துணைவியார், சர்கேல் ராமோஜி சர்ஜேராவ், அவரது துணைவியார் லெட்சுமிபாயி அம்மாள் ஆகியவர்களின் கற்படிமங்கள் உள்ளன. சரபோஜி மன்னரின் கற்படிமம், அவரது துணைவியாருடன் இருப்பது இத்திருக்கோயிலில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சையை அடுத்த அய்யம்பேட்டையில் உள்ள ஒரு விநாயகர் கோயிலில் மராட்டிய மன்னர் ஒருவரும் அவரது துணைவியார் சிற்பமும் உள்ளன. இது யாருடைய சிற்பம் என்பதை அறியச் சான்றுகள் இல்லையாயினும் மராட்டியர் காலக் கற்படிமங்களில் இவை சிறந்த இடம்வகிக்கின்றன. இவை தவிரப் பல திருக்கோயில்களின் மராட்டியர் காலக் கற்சிற்பங்கள் இருப்பினும் அவை மிகச் சிறப்பாகக் கூறும் அளவுக்குச் சிறந்த படைப்புகளாக இல்லை.

## *செப்புத்திருமேனிகள்* (உலோகத்தில் கலைப்படைப்புகள்)

கற்சிற்பங்களை ஒத்தே சோழர்கள், நாயக்கர்கள் காலப் படைப்புக்களை ஒப்பிடும்போது மராட்டியகாலச் செப்புத்திருமேனிகளின் தரம் சற்றுக் குறைவுடையவைகளாகக் காணப்பெறுகின்றன. துக்கோஜி மன்னரால் கட்டுவிக்கப்பட்ட மகாதேவப்பட்டினம் சுவேதவராகர் மற்றும் மகாதேவசுவாமி திருக்கோயில்களில் உள்ள செப்புத்திருமேனிகள் சிறப்புடையனவாகும். இதேபோன்று திருவாரூர், வைத்தீஸ்வரன்கோயில், கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற இடங்களில் உள்ள பலத் திருக்கோயில்களில் சகஜி மன்னனில் துவங்கி சிவாஜி வரை உள்ள மன்னர்கள்காலப் படைப்புக்களாகப் பல செப்புத்திருமேனிகள் உள்ளன. இவர்கள் காலப்படைப்புகளில் பித்தளையின் கலவையே அதிகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## *முதலாம் சரபோஜி மன்னரின் பித்தளைத் திருமேனி*

கும்பகோணம் சக்கரபாணித் திருக்கோயிலில் சுமார் ஆறு அடி உயரம் உடைய மராட்டி மன்னனின் பித்தளை உருவச்சிலை உள்ளது. இது முதலாம் சரபோஜியின் உருவச்சிலை என்பதைச் சில ஆவணச்சான்றுகளாலும் ஓவிய ஒப்புமையாலும் அறியலாம். இச்சிலையின் அருகிலேயே சுமார் 2½ அடி உயரத்தில் ஒரு பெண்ணின் உருவம் உள்ளது. இது முதலாம் சரபோஜி மன்னரின் மகளாக இருக்கலாம் எனக்கருத வாய்ப்புள்ளது.

தஞ்சைக் கலைக்கூடத்தில் மேலே குறிப்பிட்ட சரபோஜி மன்னனின் சிலையை ஒத்த ஒருபெண்ணின் பித்தளைப் படிமம் சுமார் 5½ அடி உயரம் உள்ளது. இதனுடைய கலையமைப்பு மற்றும் *சில சான்றுகளாலும் இது முதலாம் சரபோஜி மன்னரின்* மனைவியாக இருக்கலாம் என நம்ப வாய்ப்புள்ளது. இங்கு குறிப்பிடப்படும் படிமங்கள் அனைத்தும் உள்கூடில்லாத முழு பித்தளைப் பிரதிமமாக (Solid State) மிகப்பெரிய அளவில் படைக்கப்பட்டிருத்தல் வியப்பிற்குரியதாகும்.

வெண்ணாற்றாங்கரை பள்ளியக்ரகாரம் தளிகேசுவரர் திருக்கோயிலின் இரண்டு நிலைப்படிகளிலும் பித்தளைத் தகடுகள் போர்த்தப்பட்டுள்ளன. இத்தகட்டில் பல அழகிய வேலைப்பாடுகளுக்கிடையில் கைகூப்பிய நிலையில் இருவரின் உருவம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் தமிழ் மற்றும் மராட்டிமொழியில் கி. பி. 1825-ஆம் ஆண்டு சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சாசனங்களினால் இதில் உள்ளவர்களின் உருவங்கள் *முறையே ராமோஜி சர்ஜேராவ்* மற்றும் அவரது மனைவி லெட்சுபாய் அம்மாள் என்பதை அறிய இயலுகிறது. இரண்டாம் சரபோஜியின் சர்கேலாகப் பணியாற்றிய ராமோஜி சர்ஜேராவின் கலையார்வம் மராட்டியர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று என்பதை இத்திருக்கோயில் கலைப்பாங்காலும், வெண்ணாற்றாங்கரை சந்தியாமண்டபத்துச் சிற்பங்களாலும் நன்கு அறியமுடிகிறது.

### *திருவிடைமருதூர் பாவைவிளக்கு*

திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியாருக்கு அவர்தம் பெற்றோர்கள் நிச்சயித்த கலிப்பகையார் என்ற மணாளன் திருமணத்திற்கு முன்பு போர்மேற்சென்றபோது வீர மரணம் அடைந்தார். இது கேட்ட *திலகவதியார்* உடன் உயிர்நீக்க முனைந்தபோது தம்பியார் நாவுக்கரசரின் வேண்டுகோளுக்காக, உயிர்வாழ்ந்து தவவாழ்வு மேற்கொண்டார். நிச்சயித்த மணாளன் மாண்டதற்காக மணவாழ்வைத் துறந்து வரலாறு படைத்தார். இது நடந்தது கி. பி. 7-ஆம் நூற்றாண்டில். இதே தமிழகத்தில், 19-ஆம்

நூற்றாண்டில் மீண்டுமோர் திலகவதி சோழநாட்டில் திருவிடைமருதூரில் பிறந்தாள், வாழ்ந்தாள், மணவாழ்க்கையே தியாகம் செய்தாள். தீபமேந்திய திருவிளக்காக இன்றும் நிற்கிறாள் இம்மாதர்குல மணிவிளக்கு.

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் மகாலிங்கப்பெருமான் திருமுன் அற்புதப் பாவைவிளக்கு ஒன்று நிற்கும். அது ஏந்தியுள்ள தீபம் மகாலிங்கர் சன்னதிக்கே ஒளி வழங்கும்.

அந்த ஒளி ஏந்தியுள்ள பாவைதான் எத்தனை அழகு! அவள் அணிந்துள்ள நகைகள்தான் எத்தனை எத்தனையோ! தலையிலோ சூரியபிறை, சந்திரபிறை, புல்லகம், தொய்யகம், அளகசூடம், நெற்றிச்சூடி, ஜடபில்லை, ஜடநாகம், காதிலோ ஜிமிக்கிகள் தாங்கிய குண்டலங்கள், கழுத்திலோ முத்தாரம், காறை, சவடி, புஜத்திலோ, தோள்வளை, சூடகம், கடகவளை, கையிலோ முத்து வளையல்கள், இடுப்பிலோ உடைதாரம், காலிலோ கவின்மிகு காப்புகள், விரல்களில் மெட்டிகள், வேலைப்பாடமைந்த புடவையின் எழில்தான்++ எத்தனை கம்பீரம். தோளில் கிளியொன்று அமர்ந்து இருக்கத் தீபவிளக்கை ஏந்தி நிற்கிறாள் இவ்வெழிலரசி

1.20 மீட்டர் உயரத்துடன் பித்தளையால் வடிக்கப்பெற்ற இப்பாவை விளக்கின் பீடத்தில்,

"*சாலிவாகன சகாப்தம் 1775 பிறமாதீச வருசம் ஆனி மாதம் 22ஆம்தேதி சோமவாரம் மத்யார்ஜுனம் ஸ்ரீ மகாலிங்கசுவாமி சன்னிதானத்தில் ஸ்ரீ பிரதாபசிம்ம மகாராஜா அவர்களுடைய அம்மான் பொன் ஒருத்தருக்கொருத்தர் மனசினாலே வரிக்கப்பட்ட பாரியை ஆகிய அம்முனு அம்மனி அவர்கள் லட்சதீபம் உத்தியாபணம் பன்னினதுக்காக தன்னுடைய சுவரூபமாகிய தீபம் பிறதிமாஸ்தாபன தர்மத்தை நிரந்தரமாயி நடப்பித்துக்கொண்டு வருபவர்கள் சில் தறும பலத்தை அடைய்வார்கள். நிருத்து கண்ட சேர் 41 1¾ வார்ப்பு வேலை கன்னார அரியபுத்திர பத்தர்.*" என்று எழுதப்பெற்றுள்ளது.

4-1-1853இல் பிரதாபசிம்ம மகாராஜாவுடைய மாமன் மகள் அம்முனு அம்மணி தன்னுடைய சுயரூபத்தை இப்பாவை விளக்காகச் செய்வித்து அத்துடன் லட்சதீபங்களை ஏற்றி மகாலிங்கசுவாமி சன்னதியில் அர்ப்பணித்ததாக எழுதப்பெற்றுள்ளது. அற்புதமான இப்பாவை விளக்கு அம்முனு அம்மணி என்கிற மராத்திய அரசகுலப் பெண்ணின் உருவச்சிலையாகும்.

பிரதாபசிம்ம மகாராஜா அவர்களுடைய அம்மான் பெண் ஒருத்தருக்கொருத்தர் மனசினாலே வரிக்கப்பட்ட பாரியை ஆகிய அம்முனு அம்மணி என்று எழுதப்பெற்றுள்ளது. திருவிடைமருதூர் ராஜா பிரதாபசிம்மனின் மாமன் மகளாகிய இந்தப் பெண்ணும் பிரதாபசிம்மனும் நெருங்கிக் காதலித்திருக்கிறார்கள் போலும். அக்காதல் நிறைவேற அப்பெண் மகாலிங்கசுவாமியை வேண்டி இருந்திருப்பாள். தன் பிரார்த்தனை பலித்திருக்கும். லட்சதீபமும் ஏற்றி மகிழ்ந்திருப்பாள் போலும். அப்படி இருந்திருப்பின் மனசினாலே வரிக்கப்பட்ட பாரியை (மனைவி) என்று ஏன் எழுதவேண்டும். உண்மையிலேயே பாரியை ஆகவில்லையா? சற்றுச் சிந்தனையோடு நோக்கும்போது அப்பாவைவிளக்கு பாடும் சோககீதம் பற்றி சுவடி[1] ஒன்றின் வாயிலாக அறியமுடிகின்றது.

கி. பி. 1787-இல் தஞ்சை அரசுக்கட்டிலில் அமர்ந்து ஆட்சிபுரிந்தவர் அமரசிம்மன் என்ற மன்னர். பின்னர் 1798-இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஸ்வார்ட்ஸ் என்ற பாதிரியார் மூலம் சில அரசியல் மாற்றங்களைச் செய்தனர். மன்னர் குடும்பத்தில் குழப்பங்கள் விளைந்தன. இது ஆங்கிலேயருக்கு ஆதாயமாக ஆயிற்று. நாட்டின் வருவாயில் ஐந்தில் நான்கைக் கம்பெனியார் கோரினர். பிரதாபசிம்மன் மறுத்தார். கம்பெனியாரைக் கடுமையாக எதிர்த்தார். தபோநிதி குமரகுருபர சுவாமிகள் போன்றோர் துணையுடன் மராட்டிய மாநில மன்னர்களுடன் தொடர்புகொண்டு வெள்ளையரை வெளியேற்றப் பல திட்டங்களில் முனைந்தார். தன் நாட்டை

1. திருமுடி சேதுராமன் செட்டியார் சுவடியின் கையெழுத்துப் பிரதி-சரசுவதி மகால் நூலகம்.

அன்னியனுக்கு அடிமைப்படுத்தாத அமரசிம்மனைக் *கம்பெனியார்* வஞ்சகமாக அரசு கட்டிலிலிருந்து இறக்கினர். நாடிழந்த அமரசிம்மன் திருவிடைமருதூரில் தனக்கென மாளிகை அமைத்துக்கொண்டு வாழந்தார். இவரது மகனே பிரதாபசிம்மன்.

பிரதாபசிம்மன் யமுனாபாய் சாயேப் என்பவரை முதல் மனைவியாகவும், சகவர் பாயிசாயேப் என்பவரை இரண்டாம் மனைவியாகவும் திருமணம்செய்துகொண்டார். இவர்களுக்குக் குழந்தைப்பேறு இல்லாமையால் தமது அம்மான் கோவிந்தராவ் காடே சாகிப் என்பவரின் மகளாகிய அம்முனு பாயிசாகேப் என்பவரை மனம் விரும்பித் தன் துணைவியாக்கிக்கொள்ள விழைந்தார். அம்முனு பாயிசாகேப்பும் பிரதாபசிம்மன்மீது அளவிலாக் காதல்கொண்டு மணாளனாகக் கொள்ள மிகவும் விரும்பினாள். பெரியோர்கள் இவர்களுக்குத் திருமணமும் நிச்சயமும் செய்தனர். ஆனால், திருமணத்திற்கு முன்பு உடல்நலம் குன்றிய பிரதாபசிம்மன் கி.பி.1849-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பதினேழாம் நாள் (கீலக ஆண்டு தை மாதம் ஆறாம் நாள்) இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பிரதாபசிம்மன் மீது அளவிலாக் காதல்கொண்டு திகழ்ந்த அம்முனு அம்மணி நிச்சயிக்கப்பெற்ற தமது மணவிழாவிற்கு முன்பே தனது காதல் மாய்ந்ததைத் தன்கணவன் மாய்ந்ததாகவே கருதினாள். உடன் அரசகுல வழக்கப்படி உயர்ந்த ஆடை அலங்காரங்களைத் துறந்து, தனது கழல்களை உடைத்து, பல்லுக்குத் தாச்சினாப்பொடி பூசிக்கொண்டு (இப்பொடி *பூசுவதால் பற்கள் கறுத்து அழகுக்கோலம் அழியும்*) கைம்மை நோன்பு மேற்கொண்டாள்.

கைம்மை பூண்ட அம்முனு அம்மணி நாள்காண்டுகள் *கழித்துத்(கி.பி.1853இல்)திருவிடைமருதூர் திருக்கோயிலில்* பிரதாபசிம்மன் நினைவாக லட்சதீபம் ஏற்றுவித்தாள். அப்போது அவ்விளக்குகளில் ஒரு விளக்காகத் தனது உருவத்தையே பாவைவிளக்காக்கி, அத்திருக்கோயிலுக்கு அர்ப்பணித்தாள்.

அதன் பீடத்தில் தனது காதலையும் பின் தன்னைப் பிரதாபசிம்மனின் மனைவியாகவே கருதியதையும் ("மனசினாலே

வரிக்கப்பட்ட பாரியை") தமிழில் பொறிக்கச்செய்தாள். சோகமான வரலாற்றுப் பின்னணியில் வடிக்கப்பட்ட இப்பாவைவிளக்கு அம்முனு அம்மணி தியாகம்செய்த சுமங்கலி வடிவிலேயே உள்ளது. மராட்டியர்காலப் பாவை விளக்குகளிலேயே இதற்கு இணையாக வேறு ஒன்றினைக் கூறமுடியாது. அந்த அளவுக்குக் கலைநயம் மிகுந்து விளங்குகின்றது.

## இடைமருதில் கலைக்குடம்

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயிலிலுள்ள அபிடேகச் செப்புக்குடம் மராட்டியர்கால கலைப்படைப்புகளில் தனியிடம் வகிக்கின்றது. இச்செப்புக் குடத்தின்மேல் வெள்ளித் தகடுகளால் ஆன பல உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. கஜசம்காரமூர்த்தி, பிச்சைத்தேவர், பைரவர், கண்ணப்பர், திருமால் போன்ற உருவங்களும் அதற்குக் கீழாகப் பெண்கள் கோலாட்டம் அடிக்கும் தொடர்க்காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. தற்போது தஞ்சை நகருக்குப் பெருமை சேர்க்கும் கலைத்தட்டுகள், குடங்கள் போன்றவை 17-ஆம் நூற்றாண்டுப் படைப்பான இந்தக் குடம் செய்யப்பட்ட கலைமரபில் தோன்றிய ஒன்று என்பது தெளிவு.

## சுண்ணச்சுதைச் சிற்பங்கள்

மராட்டிய மன்னர்கள் கட்டுவித்த திருக்கோயில்கள், மண்டபங்கள், சத்திரங்கள், பெரும்பாலும் கருங்கற் கட்டுமானமாய் அமையாமல் செங்கல் சுண்ணாம்புக் கட்டுமானமாய் அமைந்துள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்க சிறப்புகளுடன் திகழ்வது தஞ்சை அரண்மனை தர்பார் மண்டபம், வெண்ணாற்றங்கரை சந்தியா மண்டபம், திருவையாறு, ஒரத்தநாடு, ராஜாமடம், நீடாமங்கலம் போன்ற இடங்களில் உள்ள சத்திரங்கள், தஞ்சைப்பெருங்கோயில் அம்மன் மண்டப வேலைப்பாடுகள், சாளுவநாயக்கன்பட்டினம் உப்பரிகை, மாயவரம் துலாமண்டபம், தஞ்சபுரீஸ்வரர்கோயில், பிரசன்ன வேங்கடப்பெருமாள்கோயில், தளிகேசுவரர்கோயில் போன்றவையாகும்.

தஞ்சை அரண்மனை தர்பார் மண்டபத்திலுள்ள சுதைச் சிற்பங்களில் திருமாலின் பத்து அவதாரக் காட்சிகள், சிவன், திருமால், முருகன் இவர்களுடைய திருமணக்காட்சிகள், நாட்டியப்பெண்கள் போன்றவை சிறப்புடையன.

## *இருட்டறைச்சிற்பங்கள்*

மராட்டிய தர்பார் மண்டபத்தை அடுத்து அரண்மனையின் உட்புறம் உள்ள இருட்டறைத் தொகுதியில் பல அற்புதப் படைப்புகள் உள்ளன. இவ்வறைச் சுவர்களில் மிக அழகிய இறை உருவங்களைச் சுண்ணச்சுதையால் அமைத்துள்ளனர். இதிலுள்ள ஊர்த்துவதாண்டவர், காளி, விநாயகர், முருகன் போன்ற இறை உருவங்களுடன் இரண்டு மிக அரிய சிற்பத்தொடர்களும் உள்ளன.

### 1. சோடசபுஜ ராமன்

திருமால் இராமனாக மானிடப்பிறவி எடுத்ததால் இரண்டு கரங்களுடன்தான் சிற்பங்களில் காட்டப்படுவார். ஆனால் இவ்விருட்டறைச் சிற்பத்தொகுதி ஒன்றில் இராமன் பதினாறு கரங்களுடன் வில்லேந்தி நிற்க அருகே இலக்குவனும் சீதையும் உள்ளனர்.

### 2. கபிலவிஷ்ணு

திருமால் அமர்ந்த நிலையில் ஐந்து முகங்களுடனும், பத்துகரங்களுடனும் காட்சி நல்குகிறார். மனிதத்தலை நடுவிருக்க இருபக்கங்களில் கூர்ம, வராக உருவங்களில் தலைகளும் பின்தலை சிதைந்தும் மனிதத்தலைக்கு மேலாகச் சிம்மத்தலையும், அதற்குமேல் மகுடமும் காணப்படுகிறது. இவ்வரிய கபிலவிஷ்ணுவின் வலதுபுறம் ஐந்துமுக அனுமனும், இடதுபுறம் ஐந்து தலைக்கருடனும் பத்துகரங்களுடன் நிற்கும் காட்சிகளும் உள்ளன. சோடசபுஜராமனும் கபிலவிஷ்ணுவும் தஞ்சையைத் தவிரத் தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாத அரிய படைப்புகளாகும்.

*மரச்சிற்பங்கள்*

தஞ்சை அரண்மனை இராஜ குடும்பத்தினர் வீட்டுக் கலைப்பொருள்களிலும் மற்றும் திருக்கோயில் கோபுரக்கதவுகள், வாகனங்கள், தேர்களிலும் மராட்டியர்காலக் கலைச்சிற்பங்களின் அழகைக் காணமுடிகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள கோயில் வாகனங்கள், பல்லக்குகள் போன்றவை கல்யாணமுருங்கை, நுனா போன்ற மரங்களால் செய்யப்பட்டு அவற்றின்மேல் துணி மற்றும் சிலவகைப் பசைகளைப் பூசிக் கண்ணாடிகள் பதித்து வண்ணங்கள் பூசி மெருகூட்டச் செய்த பணி மராட்டிய கால கலைவளர்ச்சியில் மலர்ந்த ஒன்றே. இவ்வகை வாகனங்களும் பல்லக்குகளும் சப்தஸ்தான தலங்களிலும் தஞ்சையைச் சுற்றியுள்ள கோயில்களிலும் அதிகம் காணப்படுகின்றன.

## ஓவியங்கள்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் சிற்பக்கலையைவிட ஓவியக்கலையையே மிகவும் போற்றினர். இவர்கள் காலப் படைப்புக்களாகப் பலநூறு ஓவியங்களும், மிகச்சிறந்த ஓவியக் கலைக்கூடங்களும் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரிசையில் ஓவியத்தின்பால் மிகுந்த அக்கரை கொண்டவர்களாகத் திகழ்ந்தவர்கள் சாகஜி, பிரதாபசிம்மன், இரண்டாம் சரபோஜி, சிவாஜி போன்றவர்கள் ஆவர்.

மராட்டியர் கால ஓவியப்படைப்புகளை (1) சுவர் ஓவியங்கள், (2) செப்பேட்டு ஓவியங்கள், (3) காகிதம் மற்றும் துணி ஓவியங்கள், (4) மரம், கண்ணாடி, மைக்கா, தந்த ஓவியங்கள் எனப்பிரிக்கலாம். இவ்வோவியக்கலைப் பாணியைக்கொண்டு (1)முகமதிய தக்கான கலப்புப் பாணி (2) விஜயநகர நாயக்கர்கள் பாணி, (3) ஆங்கிலேயே பாணி எனப்பிரிக்கலாம்.

இவர்கள்கால ஓவியங்களின் பூரண நிலையைச் சுவைக்க நமக்கு மூன்று அருங்காட்சியகங்கள் கிடைத்துள்ளன. இவை

முறையே திருவாரூர்த் திருக்கோயில் தேவாசிரிய மண்டபம், தஞ்சைப்பெருங்கோயில் மற்றும் தஞ்சை அரண்மனையாகும்.

மராட்டியர்கால ஓவியங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது இவர்கள்கால மன்னர்கள், அதிகாரிகள், சமயச்சான்றோர்கள் போன்றவர்களின் உருவங்களைக் காணமுடிகிறது. மேலும் பல புராணக்காட்சிகளுடன் அன்றைய பேச்சுத்தமிழ்வழக்கு,எழுத்துகளின் வடிவம், விழாக்கள், நடன வகைப்பாடுகள், இசைக்கருவிகள், வாணவேடிக்கைகள், உடையலங்காரம், அணிகலன்களின் வகைப்பாடுகள் போன்றவைற்றைக் கண்கூடாகக் காணும் வாய்ப்புக்கிட்டுகின்றது.

*சுவரோவியங்கள்*

இதுவரை கிடைத்துள்ள மராட்டியர்காலச் சுவர் ஓவியங்களுள் தொன்மையானது தஞ்சை அரண்மனை மராட்டியர் தர்பாரின் ஒரு பகுதியில் அண்மைக்காலத்தில் தமிழக அரசு தொல்லியல் துறையினர் வெளிப்படுத்திய ஓவியப்பகுதியே ஆகும். இது சகஜி மன்னன் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியமாகும். இதன்மேல் பிற்காலத்தில் (சிவாஜி மன்னர் காலத்தில்) சுண்ணாம்பு பூசப்பட்டுப் பிறிதோர் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. மேல்பூச்சைத் தொல்லியல் நிபுணர்கள் நீக்கியபோது மிக அற்புத ஓவியப்படைப்புகள் வெளிவந்தன. இதில் யானையின்மேல் ஊர்வலம் செல்லும் காட்சி காணப்படுகிறது. இத்தர்பார் மண்டபத்துச் சுதை மற்றும் ஓவியங்கள் பற்றிச் சகஜி மன்னன் காலத்து நூலான 'சாகேந்திர விலாசம்' மிகத்தெளிவாய் விவரிக்கின்றது.

*திருவாரூர் தேவாசிரிய மண்டப ஓவியத்தொகுப்பு*

இம்மண்டபத்தின்மேல் விதானத்தில் உட்புறச் சுவரிலும் இரண்டு பெரும் காவியங்கள் தொடர் ஓவியமாய்க் காட்சி விளக்கங்களுடன் படைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்து ஓவியமும் சகஜி மன்னன் காலத்துப் படைப்பாக இருக்கலாம் என நம்புவதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

சகஜி மன்னன் தன் குலதெய்வமாகப் போற்றியது ஆரூர் தியாகப்பெருமானையேயாகும். இம்மன்னன் யாத்த பல நூறு கிருதிகளிலும் முத்திரையாகத் தியாகராஜனையே குறிப்பிடுவது இவனது சிறப்பு. இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ் ஓவியன் சிங்காதனம் என்பவன் ஆவான். இப்பெருமகன் கரத்தால் மலர்ந்த ஆரூர் ஓவியக்கூடம் இன்று தமிழகத்தில் உள்ள தலைசிறந்த ஓவியக்கூடங்களுள் ஒன்று. மற்ற மராட்டியர் கால ஓவியர்களைவிடச் சிங்காதனத்திற்குரிய தனிச்சிறப்பு, இவன் *தீட்டிய ஓவியக் காவியத்தில் பல இடங்களில் தன் உருவத்தையும்* வரைந்து அதன் அருகில் 'இந்தச் சித்திரம் எழுதுகிற சிங்காதனம் நித்தம் சதாசேவை' என்று எழுதியுள்ளதுதான்.

தேவாசிரிய மண்டபத்து ஓவியத்தொகுதி இரண்டில் ஒளி மங்காமல் திகழ்வது முசுகுந்த புராண ஓவியங்களே. இவை விதானத்தில் வரையப்பட்டுள்ளன. மனுநெறிகண்ட சோழன் காவியம் சுவரில் காணப்படுகிறது. சூரிய ஒளியின் கதிரியக்கம், மழைநீர் போன்ற காரணங்களால் மனுநீதிச் சோழனின் காவியத்தின் பெரும்பகுதி சிதைந்தும் அழிந்தும் மங்கியும் உள்ளன. சகஜி மன்னன் காலத்தில் இவனது ஆதரவில் மலர்ந்த தமிழ் நூல்கள் தியாகேச குறவஞ்சி, தேரூர்ந்த சோழன் புராணம், மனுநீதிசோழன் தமிழிசை நாட்டிய நாடகம் போன்ற நூல்களாகும். இவை அனைத்திலும் தேரூர்ந்த சோழனின் கதை சிறப்பாகப் பேசப்படுகிறது. *சகஜி மன்னனைக் கவர்ந்த இக்காவியம் ஆரூரில்* இவனது ஓவியனால் வண்ணம் பெற்றதில் வியப்பில்லை...!

### *முசுகுந்த புராணம்*

ஆரூர் தியாகவிடங்கர் *பற்றிய புராணக்கதைகள் பல உண்டு.* இதில் முசுகுந்தபுராணம் நாயக்கர்கள் காலத்தில் இருந்ததைவிடப் பல மாற்றங்கள் மராட்டியர்களால் பெற்றது. இதன் அடிப்படையில் உருவானதே இவ்வண்ண ஓவியத்தொகுப்பு. தேவாசிரிய மண்டபத்தின் தென்பகுதியில் ஒரு காட்சித் தொகுதியும் வடமேற்கு மூலையில் பிறிதோர் காட்சித்தொகுதியும் தொடங்குகின்றன. ஒவ்வொரு காட்சியின் கீழும் அன்றைய பேச்சுத்தமிழ் வழக்கில் *காட்சி விளக்கமும்* எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நபர்களின் பெயர்கள், சில பொருள்களின் பெயர்கள் கூட அவற்றின் மேலே சிறிய எழுத்துகளால் எழுதப்பெற்றுள்ளன.

திருமால் தனக்கெனப் புதல்வன் வேண்டி யாகம் மேற்கொள்ளல், சிவபெருமானின் அருளால் மன்மதன் பிறத்தல், தேவியின் சாபம், சாபவிமோசனம், விடங்கர் திருமேனி கிடைத்தல், திருப்பாற்கடலில் பூசித்தல், தேவேந்திரன் வாரகலி அசுரன் சண்டை, திருமால் தேவேந்திரன் சந்திப்பு, திருமால் வாரகலி அசுரனுடன் சமர்புரிந்து அவனை வீழ்த்துதல், திருமாலிடமிருந்து விடங்கமூர்த்தியைப் பெறத் தேவவேந்திரன் சிதம்பரத்தில் பூஜித்தல், விடங்கரைப் பெற்றுத் தேவலோகம் செல்லல், ஊர்வசி, ரம்பை ஆடல் கற்பதரு போன்ற காட்சிகளுடன் ஒரு பகுதிக் கதை முடிவுபெறுகிறது.

அடுத்த பகுதியாக முசுகுந்தன் எனும் குரங்குமுகம் உள்ள மன்னன் அயோத்தியாபுரியில் கோசலையோடும் தன் தம்பிகளாகிய நவ வீரர்களோடும், ஆட்சிபுரிந்து நாடகச்சாலையில் நடனம் காணுதல், இந்திரனின் கட்டியங்காரன் முசுகுந்தனைத் தேவேந்திரனிடம் அழைத்தல், முசுகுந்தனின் படைகள், தேவேந்திரன் வாலாசுரனை வீழ்த்துதல், இந்திரன் முசுகுந்தனைத் தேவலோகம் வழிபடுதல், முசுகுந்தன் தியாகராஜரைத் தனக்கெனக் கேட்டல், இந்திரன் விசுவகர்மா சூழ்ச்சி, முசுகுந்தன் கனவு, ஏழுவிடங்கர்களில் உண்மை விடங்கரை முசுகுந்தன் எடுத்தல், முசுகுந்தன் எல்லா விடங்கர்களையும் திருவாரூர் எடுத்துவருதல், திருவாரூரில் நிகழும் பத்துநாள் விழாக்காட்சிகள், வாணவேடிக்கைகளுடன் இக்காட்சித் தொகுப்பு முடிவடைகிறது.

இவ்வரிய ஓவியக்காட்சிகளால் கி.பி.1700ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் திருவாரூர்த் திருக்கோயிலில் நிகழ்ந்த திருவிழாக்கள் பற்றிய விரிவான செய்திகள் தெரியவருகின்றன. துஜாரோகனத்திலிருந்து பல விழாக் காட்சிகள் உள்ளன. அதில் 'பைரவர் திருவிழா,' 'மூவர்முதலியார் திருவிழா,' 'காட்சி கொடுத்த *திருவிழா' போன்றவை புதுமையாக உள்ளன.* இரண்டாம் குலோத்துங்களின் திருவாரூர்க் கல்வெட்டிலும் குறிப்பிடப்பெறும் 'மூவர்முதலியர்' வழிபாடு இங்கு நோக்குதற்குரிய ஒன்று.

அன்று திருவாரூரில் வாழ்ந்த முக்கிய நபர்களின் உருவங்களும், பெயர்களும் குறிப்பிடப்பட்டிருப்பது, பல வகையான வாணவேடிக்கைகள் காட்டப்பட்டு வாணங்களுக்குப் பெயர்கள்கூட ஓவியத்திலேயே எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. தரையில் சுற்றும் வாணத்திற்கு 'விலச் சக்கர வாணம்' என்று அந்த வாணத்திலேயே எழுதியிருப்பது அரிய ஒன்று.

அன்று ஆரூர் விழாவில் எவ்வகையான இசைக்கருவிகளெல்லாம் இசைத்தார்கள். மன்னனது அவையில் என்னென்ன நாட்டியங்கள் நடந்தன போன்ற விவரங்களும், "கைக்காட்டு முறைக்காரி" என்ற குறிப்புடன் ஓர் ஆடல் அணங்கு வீதியில் நடனம் புரிவதும், முட்டுக்காரர், மேளக்காரர் போன்ற இசைக்கருவி வல்லோர்கள் பற்றியும் விளக்கங்களுடன் காணமுடிகிறது.

அன்று ஆரூரில் இருந்த செப்புத்திருமேனிகள் மக்கள் உடையலங்காரங்களும் திருக்கோயிலின் வரைபடம், விதவிதமான அணிகலன்கள், வீதியின் அழகு, போர்ப்படைகளின் அமைப்பு, கோயில் நிர்வாகம் பற்றிய பல வரலாற்றுத் தகவல்களையும் நம் கண்ணுக்கு விருந்தாகப் படைத்துள்ள சித்திரவேலை, சிங்காதனத்தின் சாதனை போற்றுதற்குரிய ஒன்றாகும்.

## *தேவிமகாத்மிய ஓவியங்கள்*

தேவியைத் துர்க்கை-இலக்குமி சரஸ்வதியாக ஆவாகித்து வணங்குவது நமது மரபு.தேவியின் மகிமையை வேதத்தில் கூறும் "ராத்திரி சூக்தத்திலிருந்து" பல நூல்கள் எடுத்துக்கூறுகின்றன. இவற்றில் மிகவும் சிறப்புடையது தேவிமகாத்மியம், இதனைத் துர்க்கா சப்தசதி என்றும் அழைப்பர். இது மார்க்கண்டேய புராணத்தின் ஒருபகுதி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியநாட்டுச் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் இலக்கியங்களிலும் தேவியின் வரலாறு இடம்பெற்றுவருகிறது.

தேவிமகாத்மியம் மூன்று பகுதிகளாக உள்ளது. முதல்பகுதியில் யோகநித்திரையில் திருமால் துயில, மது, கைடபர்

எனும் இரு அரக்கர்கள் திருமாலைத் தாக்கி அழிக்க முயன்றபோது தேவி அவ்வரக்கர்களுடன் போரிட்டு வெற்றிப்பெற்றாள். தேவியை 'மது கைடபப்பிரசமணி' என ஆன்றோர் போற்றினர். இரண்டாவதாக இறுமாப்புடைய எருமைத்தலை அசுரனான மகிசனை அழித்து மகிசாசுரமர்த்தனி ஆனாள். மூன்றாவதாகச் சும்பன் நிசும்பன் என்ற இரு அரக்கர்களைத் தேவி அழித்துச் 'சும்ப நிசும்ப சூதனியாய்' வணங்கப்பெற்றாள்.

இவற்றில் மகிசாசுரமர்த்தினியின் வரலாறும் சும்பநிசும்பசூதனியின் வரலாறும் தஞ்சைப் பெருங்கோயிலில் தேவியியின் திருக்கோயில் முன்மண்டபத்து விதானத்தில் வண்ண ஓவியத்தொகுப்பாகக் காட்சி விளக்கங்களுடன் தீட்டப்பட்டுள்ளன. சக்தி வழிபாட்டில் தக்கயாகமும் மிகவும் இன்றியமையாத புராணமாகும். ஒட்டக்கூத்தர் யாத்த தக்கயாகப்பரணி இதன் அடிப்படையில் எழுந்த ஒரு சாக்த நூல். தக்கயாகமும் - மார்க்கண்டேய புராணமும் தஞ்சை ஓவியப்படைப்பின் அடிப்படை நூல்கள்.

சுவடியில் காண்பது போன்று தொடர்விளக்கங்களுடன் இரண்டுகதைகளுடன் முடிகின்றன. இது மட்டுமின்றிப் பல தெய்வத் திருமணக்காட்சிகளும் தீட்டப்பட்டுள்ளமை ஒரு சிறப்பு அம்சமாகும். மிக நல்ல நிலையில் உள்ள இவ்வோவியத் தொகுப்புகளைப் படைக்கச் செய்த பெருமை இரண்டாம் சரபோஜி மன்னரையே சாரும்.

### *திருச்சுற்று மண்டபத்தில் திருவிளையாடல் புராணம்*

மாமன்னன் இராஜராஜனின் ஆணையால் அவனது தளபதி கிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழ பிரம்மமாராயனால் எடுக்கப்பட்ட தஞ்சைப்பெருங்கோயில் திருச்சுற்று மண்டபத்தின் உட்புறம் மேற்குப்பகுதியில் தொடங்கி வடக்குப்பகுதி முழுவதுமாகத் தீட்டப்பட்டுள்ள ஒருதொடர்காவியமே திருவிளையாடல் புராணக்காட்சிகளாகும். ஆலவாய்ப்பெருமான் புரிந்த அற்புதத் திருவிளையாடல் காட்சிகள் அனைத்தும் வண்ண ஓவியமாகக் காட்சி அளிக்கின்றன.

கஜலெட்சுமியில் தொடங்கி மகிசாசுரமர்த்தினி, சித்திபுத்தி வினாயகர், இடபாரூடர், வள்ளிதேவசேனாபதி, தியாகவிடங்கர், மகாலிங்கம் போன்ற தெய்வத்திருவுருவங்கள் முதலில் உள்ளன. அடுத்து மதுரைப் பொற்றாமரையில் மகாலிங்கபூஜை செய்து பிரம்மஹத்தி நிவர்த்தியான காட்சியிலிருந்து தொடங்கி 64 காட்சி ஓவியங்கள் சுவரில் தீட்டப்பட்டுள்ளன.

குலசேகரபாண்டியன் மதுரை நகரையும் திருக்கோயிலையும் செய்தது, மீனாட்சி பிறப்பு, திருக்கல்யாணம், நாரைக்குக் காட்சி கொடுத்தது, கரிக்குருவிக்கு உபதேசம் செய்தது, நரி பரியானது, பரி நரியானது, தருமிக்குப் பொற்கிழி அளித்தது, சங்கப்பலகையளித்தது, கீரனுக்கு அருளியது, சங்கத்தார் கலகம் தீர்த்தது, அனல் வாது, புனல்வாது, சமணர் கழுவேறியது போன்ற குறிப்பிடத்தக்க காட்சிகள் மிகவும் சிறப்பாக உள்ளன.

இவ்வோவியக்கூடம் தஞ்சை மன்னரான சிவாஜி மகாராஜாவால் உருவாக்கப்பட்டது என்பது நினைவுக் கூரத்தக்கது. இம்மன்னர் காலத்திலேயே இதே திருக்கோயிலில் சுப்பிரமணியர் திருக்கோயிலுக்கு முன்பாக உள்ள மல்லப்பநாயக்கர் மண்டபத்தில் அனைத்து மராட்டிய மன்னர்களின் திருவுருவங்களையும் சிவாஜியின் மனைவி காமாட்சிபாய் சாகேப் என்பவர் தீட்டச்செய்துள்ளார்.

## *செப்பேட்டு ஓவியங்கள்*

சாசனங்களைக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவது நமது பண்டைய மரபு. இத்தகைய செப்பேட்டுச் சாசனங்களில் பல அரிய ஓவியங்களும் தீட்டப்பட்டுக் காணப்படுகின்றன. மராட்டியர்காலச் செப்பேடுகளில் சாசனம் தொடங்குவதற்கு முன்பு ஓவியங்கள் வரைவதைச் சிறந்த கலையாகப் போற்றி வளர்த்தனர். இவ்வகையில் பல செப்பேடுகளில் இறை உருவங்கள் இருப்பினும் மூன்று செப்பேடுகள் குறிப்பிடத்தக்கவைகளாகத் திகழ்கின்றன.

திருவாரூர்த் திருக்கோயிலில் உள்ள இரண்டு செப்பேடுகளில் ஒன்றில் சகஜி, துக்கோஜி, சரபோஜி,



செப்பேட்டு ஓவியம்

அருணாசலப்பண்டாரம் போன்றவர்களது திருவுருவங்களும், பிறிதொன்றில் முதலாம் சரபோஜி மன்னரின் தில்லை வழிப்பாட்டுக் காட்சியும் இடம்பெற்றுள்ளன. திருப்பனந்தாள் மடத்துச் செப்பேடு ஒன்றில் அம்பலவாணபண்டாரம் என்பவரின் ஓவியமும் மராட்டிய மன்னர்கள் பற்றிய குறிப்புகளோடு காணப்படுகிறது.

## *காகிதம் மற்றும் துணி ஓவியங்கள்*

இவ்வகையில் படைக்கப்பட்ட பல நூறு ஓவியங்கள் இன்று தஞ்சை சரசுவதி மகால் நூலகம், அரண்மனை மன்னர் இல்லங்களிலும், அரசுக்காட்சியகங்களிலும் உள்ளன. சரசுவதி மகால் நூலகத்தில் பாகவதம், பாரதம், இராமாயணம், வேதம், கஜ, அசுவசாத்திரங்கள் போன்ற காகிதச்சுவடிகளில் பல ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் சமயச்சான்றோர்கள், புலவர்கள், இறையுருவங்கள், புராணக்காட்சிகள், உடையலங்காரங்கள், பூவலங்காரங்கள், தர்பார் காட்சிகள் போன்றவை இடம்பெற்றுள்ளன. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணங்கள், காகிதங்கள் போன்றவை ஆங்கிலநாட்டுப் பொருட்களாகும். இவை பெரும்பாலும் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்துப் படைப்புகளாகும்.

தஞ்சை மன்னர் குடும்ப இல்லத்தில் உள்ள ஓர் இராமாயண பட்டாபிஷேக ஓவியம் சிறப்புடையதாகும். இதில் இராமன் மற்றச் சகோதரர்கள் அனைவருக்கும் மீசை இருப்பது நோக்குதற்குரிய ஒன்று. இதே காட்சியில் சிவாஜி மன்னர் வணங்கும் கோலத்தில் இடம்பெற்றுள்ளார். மராட்டியர்கால இராமபட்டாபிஷேக ஓவியங்களில் இது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

## *மரம், கண்ணாடி, மைக்கா, தந்த ஓவியங்கள்*

மரப்பலகைகளின்மேல் சில பசைகளின் உதவியால் நவமணிகள் பதிக்கப்பெற்று வண்ண ஓவியங்களை உருவாக்குவது *தஞ்சையில் மலர்ந்த ஓர் அற்புதக் கலையாகும்.* இது தஞ்சை நாயக்கர் காலத்திலேயே உருவான ஒன்றாகும். இவ்வகை

ஓவியங்கள் பற்றி 'இரகுநாத விலாசம்' எனும் நாயக்கர்காலச் சுவடிநூல் தெளிவாக உரைக்கின்றது. இக்கலை சரபோஜி காலத்திலிருந்து மிகவும் ஆக்கம் பெற்று இன்றும் தஞ்சைக்குப் பெருமை தேடித்தருகின்றது. சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள ஒருபலகை ஓவியம் முகமதிய-தக்காண பாணியாகும். 'சொர்க்கம் நரகம்' பற்றி விவரிக்கும் இவ்வரிய படைப்பு மராட்டியர்களின் தொடக்ககாலப் படைப்பாகும். டாக்டர் கால் கண்டல்வாலா, டாக்டர் இரா. நாகசாமி போன்ற ஓவிய ஆராய்ச்சியாளர்கள் 'மராத்தியர்காலப் படைப்புகளிலேயே உன்னதமானவொன்று' என இப்பலகை ஓவியத்தைப் புகழ்ந்துள்ளனர்.

கண்ணாடி, தந்தம் போன்றவற்றிலும் பல ஓவியங்களைப் படைத்த பெருமை மராட்டியர்கால ஓவியர்களுக்கு உண்டு. ஆங்கிலேயேர்களின் உறவால் மைக்காவில் வரையும் ஒரு புதிய பாணியைத் தஞ்சை ஓவியர்கள் இங்கு அறிமுகம் செய்தனர். இத்தகைய படைப்புகள் பல இன்று டென்மார்க் குரேன்பர்க் அருங்காட்சியகத்திலும், இங்கிலாந்துநாட்டுக் காட்சிக் கூடங்களிலும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு பல்வேறு சிற்பங்களையும் ஓவியங்களையும் படைத்த சிற்பிகளையும் ஓவியர்களையும் இங்கு நினைவுகூர்ந்து, அவர்களுக்கு ஆக்கம் நல்கிய மராட்டியமன்னர்களின் புகழையும் போற்றுவோம்.



## இந்நூலில்...

தமிழகத்துக் கோயில்களில் விஜயநகர, நாயக்க மராட்டிய மன்னர்களின் பணிகள், தமிழகக்கோபுரச் சிற்பங்கள், தமிழகத்தில் பள்ளிப்படைக்கோயில்கள், தஞ்சை மராட்டியர் காலச் சிற்பங்கள் ஓவியங்கள் என்னும் நான்கு தலைப்புகளில் தமிழகக்கோயிற்கலை மரபின் பெரும்பான்மையான குறிப்பிடத்தக்க அம்சங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.